224254

JL
W211, N244
N29 6.6
224254

1929


JL
N29.6.6
224254

[redacted]egd. M. 1803. Vol. 6—No. 6.

# லக்ஷ்மி

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | [illegible] | 205 |
| 2. | [illegible] | 206 |
| 3. | [illegible] | 210 |
| 4. | [illegible] | 212 |
| 5. | [illegible] | 213 |
| 6. | [illegible] | 215 |
| 7. | [illegible] | 216 |
| 8. | [illegible] | 218 |
| 9. | [illegible] | 221 |
| 10. | [illegible] | 223 |
| 11. | [illegible] | 224 |
| 12. | இந்தியப் பத்திரிகைகள் | 229 |
| 13. | வெளிநாட்டில் இந்தியா | 231 |
| 14. | ஸ்ரீ பாரதியாரின் [illegible] | 233 |
| 15. | ஆராய்ச்சித்துறை | 235 |
| 16. | இந்திய மாதர் [illegible] | 237 |
| 17. | [illegible] | 240 |
| 18. | மணித்திரட்டு | 243 |
| 19. | [illegible] | 244 |


OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 AUG 1929

உள்நாடு 2′ லக்ஷ்மி ஆபிஸ் சென்னை. வெளிநாடு 2′8

ஆசிரியர்:—கே. எஸ். சுந்தரம். தனிப்பிரதி அணா 3.

# அமெரிக்கன் சில்க் - - -

# - - - அங்கவஸ்திரம்.

தூய்ய வெள்ளை, உடல் இக்கான பட்டு, தினசரி துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இரு பக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 6 மு நீளம். 40" அகலம். விலையின் இறக்கத்தை கவனியுங்கள்.

விலை ரூ. 6—0—0 தான்.

**கிடைக்கவில்லையே !** என்று வருந்தவேண்டாம். ஏற்கனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்து வருவதால் முந்திக் கொள்ளுங்கள்.

---

# ஜார்முனியோஸா ஸில்க் - -

# - - - அங்கவஸ்திரம்.

அழகான இமிடேஷன் சில்க். கலருக்கு உத்திரவாதம். வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டு, குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா **2—0—0**

விலை ரூபாய் இரண்டு தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6 மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப ஒரு டஜனுக்கு ஆர்டர் செய்கிறார்கள்.

# கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, சென்னை.



# லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR OF ... 10 AUG 1929 MADRAS

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

## ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஸ்தாபகர்—ஸ்ரீ. கே. எஸ். முத்தையா. ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

| மலர் 6. | 1929௵ மார்ச்சு௴, விபவ௵ பங்குனி௴ | இதழ் 6 |
|---|---|---|


## புதுமைப் பெண்

(பாரதியார்)

போற்றி போற்றியோ ராயிரம் போற்றி! நின்
பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி காண்
சேற்றிலே புதிதாக முளைத்த தோர்
செய்யதாமரைத் தேமலர் போலொளி
தேற்றி நின்றனை பாரத நாட்டிலே
அன்ப நீக்குஞ் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை மாதரசே யெங்கள்
சாதி செய்த தவப்பயன் வாழி நீ!

மாதர்க் குண்டு சுதந்திர மென்று நின்
வண்மலர்த்திரு வாயின் மொழிந்தசொல்
நாதந் தானது நாரதன் வீணையோ?
கம்பிரான் கண்ணன் வேங்குழ லின்பமோ?
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே
மேன்மை செய்தெமைக் காத்திடச்சொல்வதோ
சாதல் மூத்தல் கெடுக்கு மமிழ்தமோ?
தையல் வாழ்க பல் லாண்டு பல்லாண்டிங்கே!

அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல் பவர் பித்தராம்
நெறிகள் யாவினு மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்க ளாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயி விட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறு நவீனங்கள் கேட்டிரோ!

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள்
கேட்டிரோ!

224254

# நரகமா நாகரீகமா?

## பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிகள் மனிதனின் நன்மைக்கா? தீமைக்கா?

(திரு. வி. வாஸுதேவன் எழுதியது.)

மேலவர நாகரீக வளர்ச்சியினாலும், சாஸ்திர ஆராய்ச்சிகளினாலும் சாதாரண எளிய ஜனங்களுக்கு நன்மைக்கு பதிலாகத் தீமையே அதிகரிக்கின்றது என்று உலகத்தில் பல மேதாவிகள் தற்போது எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். ரஸ்கின் என்னும் ஆங்கில மேதாவி சொன்னதுபோல் உலகத்தையே ஒரு சுவர்க்கமாகச் செய்து மனிதனின் இன்பத்தை வளரச் செய்வதுதான் வாழ்க்கையின் இலட்சியமாயிருக்க வேண்டும் என்பது போய், இவ்வுலகத்தையே நரகமாய் மாற்றிப் பெரும்பான்மையோராயுள்ள ஏழைகளின் வாழ்க்கையை மிக்க துன்பத்தில் ஆழ்த்திவரவே முதலாளிகளும், பிரபுக்களும், சாஸ்திர ஞானிகளின் உதவியைக் கொண்டு முயன்று வருகிறார்கள் என்கிற அபிப்பிராயம் இப்பொழுது வலுத்து வருகிறது. இதற்குக் காரணம் முக்கியமாய், சென்ற நூறு வருஷங்களுக்குள் சாஸ்திர ஆராய்ச்சியினால் உலகவாழ்க்கையிலேயே ஏற்பட்டுள்ள மாறுதல்கள் தான்.

இந்த இருபதாம் நூற்றாண்டை "சாஸ்திர சகாப்தம்" என்று கூறலாம். இலக்கிய நூல்களிலும் ஆசிரியர்கள் தங்கள் உபமான உபமேயங்களை இயந்திரங்களிலிருந்தும், இதர கருவிகளிலிருந்தும் தான் பொறுக்கியெடுக்கிறார்கள் என்று இலக்கியங்களை ஊன்றிப் படிப்பவர்கள் கண்டு கொண்டிருக்கலாம். வாயுவேகம், மனோவேகம் என்று முன்னர் கூறிய இடங்களில் மோட்டார் வேகம், ஆகாய விமான வேகம் என்ற சொற்களைப் பிரயோகிக்கிறோம். இயற்கை வனப்பிலும், புகழிலும் பிரமை கொண்ட மகாத்மா காந்தி கூட "பஞ்சாப் மெயிலைப்போல வேகமாக" என்றுதான் தமது "யங் இந்தியா"வில் எழுதுகிறார். 19-வது நூற்றாண்டை ஆங்கில இலக்கிய வளர்ச்சியில் இயற்கையை ஆசிரியர்கள் திரும்பிய காலம் என்று சொல்லுவார்கள். அதாவது தங்கள் நூல்களில் இயற்கையின் அழகையும், பெருமையையும் பற்றி வெகுவாக எழுதி வந்தார்கள். ஆனால் இருபதாவது நூற்றாண்டிலோ இயந்திரங்களும், கருவிகளும் மிகுந்து வருவதால், இலக்கிய நூல்களும் அவைகளைத் தழுவியவாறே யிருக்கின்றன. அந்தந்தக் காலத்தில் ஏற்படும் இலக்கியங்கள் அப்போதைக்கப்போது உலகத்தில் நிகழும் மாறுதல்களையும், இயக்கங்களையும், வாழ்க்கையின் அமைப்பையும் ஒட்டியே யிருக்கும்.

உலகத்தில் இப்போது சமூக வாழ்க்கையில் உண்டாகி வரும் பற்பல நூதன மாறுதல்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் தத்துவ ஞானிகளையோ, ராஜ்ய தந்திரிகளையோ அரசியல் வாதிகளையோ நாம் குறை கூறவோ, புகழவோ இடமில்லை. 18-ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் மண்ணாசைப் பெருக்கினால் உலகத்தை வென்று தங்கள் சாம்பிராஜ்யத்தை வளர்க்க வேண்டுமென்று விரும்பினார்கள். இதற்கு, அப்போது ஆங்கில அரசியலுக்குத் தலைமை வகித்த வில்லியம் பிட் போன்ற ராஜ்யதந்திரிகளே காரணம். பிரான்சிலும், பிரெஞ்சு காரர்களின் கீர்த்தியை வளர்த்து நிலைபெறச் செய்யவேண்டுமென்று ட்யூப்ளே போன்றவர்கள் விரும்பினார்கள். ராணுவ தளகர்த்தர்களாகிய வெல்லிங்டன் பிரபு, நெபோலியன் முதலிய பெரியார்களும் இந்த மண்ணாசையினாலேயே பிடிக்கப்பட்டிருந்தார்கள். பின்னர், வால்தேர், ரூஸோ, ரஸ்கின், டால்ஸ்தாய் போன்ற தத்துவ சாஸ்திரிகள் உலக வாழ்க்கையின் இலட்சியங்களில் பல் வேறு மாறுதல்களை ஏற்படும்படி அவர்களுடைய போதனைகளாலும், நூல்களினாலும் செய்தார்கள். இவ்வாறு அரை நூற்றாண்டாக ரஸ்கின், ரூஸோ, டால்ஸ்தாய் கொள்கைகள் உலகத்தில் பரவி ஊன்றி அமையுமுன்னரே சாஸ்திர ஆராய்ச்சிகளினால், இதன் முன் எதிர்பாராத நிகழ்ச்சிகள் தோன்றி வருகின்றன. இவைகளுக்கெல்லாம், பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்களே காரணம் என்று சொல்லத் தேவையில்லை.



JL
M21, 424 LC 6.6 N29

சென்ற ஒரு நூற்றாண்டில் மட்டும், இதற்கு முன் பல்லாயிர ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வகையை விட வாழ்க்கையின் அமைப்பே மாறிவிட்டது. இன்னும் ஐம்பது வருஷங்களில் எத்தகைய மாறுதல்கள் ஏற்படுமோ என்று விசாரப்பட வேண்டியிருக்கிறது. சாஸ்திர ஞானிகளின் ஆராய்ச்சியினால் உலகத்தில் பரப்பப் பட்டிருக்கும் அபார சக்தியை மனிதன் எவ்வகையில் உபயோகிக்கப் போகிறான் என்பது கேள்வி. சாஸ்திரத்தின் உதவியைக் கொண்டு மனிதனுக்கு இன்பத்தைப் பெருக்கி வாழ்க்கையின் சாதனங்களை இலகுவாகச் செய்து கொள்ளலாம், அன்றி, தனது அழிவையே மனிதன் இந்தக் கருவிகளினாலும், இயந்திரங்களினாலும் தேடிக் கொள்ளலாம்.

சாதாரணமாய் ஓரிடத்திலுள்ளவர்கள் மற்றோரிடத்தி லுள்ளவர்களைப் பார்த்துக்கொள்ளுவதென்றால், ஒளியின் வேகத்தையே அது பொறுத்திருக்கிறது என்பதை முதலில் அறியவேண்டும். மின்னல் ஒளி, இடியோசையை விட அதிக வேகமாகச் செல்லுவதால் தான், இடியும், மின்னலும் ஒரே வகையான மின்சார அதிர்ச்சியால் ஏககாலத்தில் நிகழ்ந்த போதிலும், மின்னல் கொடியின் வெளிச்சத்தைப் பார்த்த சில வினாடிகளுக்குப் பின்னரே இடியோசையைக் கேட்கின்றோம். பூமியில் மற்றோர் புறம் உள்ளவர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டுமெனின் இருவருக்கும் இடையில் உள்ள தூரத்தில் மிக்க வேகமாய்ச் செல்லக்கூடிய ஒளிதரக்கூடிய வகையைக் கண்டு பிடித்து விட்டால் அதி வேகமாக ஒருவரை யொருவர் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளக் கூடும். இத்தகைய நிலையை சீக்கிரத்தில் நாம் அடையக்கூடுமென்றும், சாதாரணமாய் 1/24 வினாடியில் அதாவது ஒரு செகண்டில் 24-ல் ஒருபாக நேரத்தில் இந்த பூமியில் ஒரு பக்கத்தி லிருப்பவர், மற்றொருப் பக்கத்திலுமுள்ள தமது நண்பரைக் கண்ணெதிரிற் காண வசதிகள் அமைத்துத் தரக் கூடுமென்றும், ஆங்கில பௌதிக சாஸ்திர ஞானிகளில் முதன்மையாய் நிற்பவர்களில் ஒருவராகிய ஆசிரியர் ஹால்டேன் கூறுகிறார்.

ஆனால் தற்போது உலகத்தில் சாஸ்திர அபிவிருத்தி ஆகாய விமானப் போக்கிலேயே அதிகமாய் வளர்ந்து வருகிறது என்று கூறத் தேவையில்லை. 1908-ம் ஆண்டில் தான் முதன் முதல் காற்றைவிட கனமான கப்பல் ஒன்று காற்றில் பறக்கும் அதிசயத்தை நாம் கண்டோம். அதன் பின்னர் இந்த இருபது ஆண்டுகளாக, புதிய புதிய இடங்களைக் கண்டு பிடிப்பதிலும், சமுத்திரங்களைத் தாண்டுவதிலும், ஊருக்கு ஊர் தேசத்திற்கு தேசம், கண்டத்திற்குக் கண்டம் அதி வேகமான போக்குவரவு சாதனங்கள் ஏற்படுத்துவதிலும் ஆகாய விமானிகள் முயன்று வருவதை நாம் கேளில் கேட்டும் பார்த்தும் வருகிறோம். இங்ஙனம் நாம் நமது அனுபவத்திற்குள்ளேயே நமது வாழ்க்கையில் பெரிய மாறுதல்களைக் காண்பதுடன், அவைகளுக்கு உடன்படவும் நேரிடும் என்பதில் ஐயமில்லை.

ஆஸ்திரேலியா பிரதேசத்தில் சில மிராசுதார்கள் தங்களுடைய ஆடு மாடுகளையும், நிலபுலன்களையும் பார்வையிட ஆகாய விமானங்களிலேயே போய்விட்டு வருகிறார்களாம். 70 வயதுள்ள ஒரு வயோதிகர் 1200 மைலுக்கு அப்பாலுள்ள தனது தோட்டத்தைப் போய்ப் பார்த்துவர ஆகாய விமானத்திலேயே சென்றாராம். சாதாரணமாய் இதற்கு முன் அதே இடத்திற்குக் காடு மேடுகளையும், மலைகளையும் ஆறுகளையும் தாண்டிச் செல்ல ஆறு வாரங்கள் சென்றனவாம். இப்பொழுதோ வெனில் ஒரே நாளில் பறந்து சென்று திரும்பி விட்டாராம். இப்படி அதிவேகமாயும், சீக்கிரமாயும் தூரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல முடிகிற தென்ற போதிலும், அதனால் எத்தனையோ ஆபத்துக்களும் விளையாமல், வெகு சுலபமாகப் போய் வரக்கூடிய சாதனங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன வென்பதும் குறிப்பிடத்தக்கது. இது வரையில் ஆஸ்திரேலியாவில் மேலே குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஆகாய விமானக் கம்பனியார் 40 லக்ஷம் மைல்தூரம் பிரயாணம் செய்திருக்கிறார்கள். ஒருவருக் காவது கொஞ்சமாவது காயம் கூட உண்டானதே கிடையாது. மிக ஆபத்தான மலைகளையும், பள்ளங்களையும் தாண்டிச் சென்று 10 வருஷ காலம் சேர்ந்தாற்போல் ஒருவர் மட்டும், அதில் விமான ஓட்டியாக வேலைபார்த்து வந்திருக்கிறார்.

தற்போது சாதாரணமாய் 4000 பவுனுக்கு லண்டன் மார்க்கட்டில் ஒரு ஆகாய விமானத்தை விலைக்கு வாங்கலாம். விமானத்தை ஓட்டக் கற்றுக்கொடுக்க எட்டு பாடசாலைகள் லண்டனில் மட்டும் இருக்கின்றன. இன்னுஞ் சில காலத்தில், ஆகாய விமானத்தின் விலை 600 அல்லது 700 பவுனுக்கு வந்தபின் மோட்டாருக்கு விலை இராது என்றும், தரையிலேயே ஓடவும், ஆகாயத்தில் பறக்கவும், நீரில் மிதக்கவும் கூடிய இயந்திரங்கள் ஏற்பட்டு விடுமென்றும், அப்பொழுது மோட்டாரை கண்காட்சி சாலைகளில் வைக்க வேண்டியது தான் என்றும் சாஸ்திர ஞானிகள் கருதுகிறார்கள்.

### புதிய சக்திக் களஞ்சியங்கள்.

இவ்வளவு நாளாய் உலகில் சக்தியை நிலக்கரியிலிருந்தும், மண்ணெண்ணெயிலிருந்தும் கிரகித்து வந்தார்கள். மின்சார சக்திக்கும் எண்ணெய் எஞ்சின்களோ, வேறு வகை எஞ்சின்களோ தேவையாயிருந்தன. ஆனால் சீக்கிரத்தில் எண்ணெய்க் கிணறுகள் வற்றிப் போகும். நிலக்கரிச் சுரங்கங்கள் வறண்டு போகும். இவை மட்டுமா? நமது உணவுப் பொருள்களே அழிந்து போய் மனிதனின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆகாரத்திற்குக் கூட திண்டாட்டம் ஏற்படும். அத்தகைய நெருக்கடியான நிலைமை உண்டானால் என்ன செய்வது என்று இப்பொழுதிருந்தே ஆராய்ச்சிக் காரர்கள் விசாரப் பட்டுக் கொண்டு இதில் கவனஞ் செலுத்தி வருகிறார்கள். உணவுப் பொருள்களை சாகுபடி செய்து விளைவிப்பதைவிட, அவைகளில் உள்ள சத்தை, இதர பொருள்களை ரசாயன உதவியால் ஒன்றுபடுத்தி கிரகித்து உலகிற்கு அளிக்க முடியாதா என்று சிரமப்பட்டு வருகிறார்கள். ஏற்கனவே பூமியின் விளைச்சலை அதிகரிக்க வேண்டிய உரங்கள் போட்டு வலுப்படுத்துவதோடு. ஒட்டு வர்க்கங்களை வளரச்செய்து உணவுப் பொருள்களின் தரத்தையும் மேம்படுத்த வகைகள் தேடி வருகிறார்கள். பூமிக்குக் கீழ் உருளைக் கிழங்கையும, மேலே செடியில் பப்பாளிப் பழத்தையும் தரத்தக்க ஒருவகை ஒட்டுச் செடியை பயிரிட்டுள்ளார்.

இது நிற்க, உலகத்தில் சக்தியின் பெருக்கை வளர்க்க, சூரியனின் கிரணங்களில் ஏராளமாக சக்தி அடங்கிக் கிடக்கிறதால், அதை எவ்வகையிலாவது பயன்படுத்திக் கொள்ளக் கூடாதா வென்று பல ஆண்டுகளாக சாஸ்திர அறிஞர்கள் யோசித்து வருகிறார்கள். அதே மாதிரி கடலின் அலைகளில் உள்ள சக்தி ஏன் வீணாய்ப் போகவேண்டும், அதை ஏதாவது இயந்திரத்தில் பிணைத்து ஏன் உபயோகித்துக் கொள்ளக் கூடாது என்று விசாரணை செய்ததில், அதிலிருந்து மின்சார சக்தியை கிரகித்து பல்வேறு வேலைகளுக்கு உதவும்படி செய்து கொள்ளலாமென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு மனிதனின் உழைப்பிற்கே கௌரவமில்லாமல் போய், இயந்திர சக்தியினால் இயற்கையில், நிரம்பிக்கிடக்கும் சக்தியை தனது மூளையின் யுக்தியால் மனிதன், தன்னுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்ளத் திருப்பிக் கொள்ளலாமென்று நிச்சயமாய் நம்ப இடம் ஏற்பட்டிருக்கிறது. மனிதர் தமது உள்ளக் கிடக்கையை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள ஆகாய வசனிகளும், ஆகாயத் தந்திகளும் அமைக்கப் பட்டு வருவதால் ஒரு மூலையிலுள்ளவர், மற்றொரு மூலையில் உள்ள, தமக்கு முன்பின் நேரில் பரிசயமில்லாத ஒருவருடன் சம்பாஷிக்கவும், அபிப்பிராயங்களைக் கலந்து கொள்ளவும் சாதனங்கள் ஏற்பட்டுள்ளன. பிரான்சில் வசிக்கும் அதி மேதாவியான ரோமான் ரோலந்துக்கு, மகாத்மா காந்தியை நேரில் தெரியாது. ஆனால் நாகரிக வளர்ச்சியால் அமைக்கப் பட்டுள்ள சாதனங்களின் மூலம் இருவருக்கும் அன்னியோன்னியமான. நட்புண்டாகி யிருக்கிறது. மூலை முடுக்குகளிலுள்ள குடியானவன் கூட தன்னை ஆள்பவர் இன்னாரென்று தெரியாமலிருக்கையிலேயே, வைசிராயின் குரலை நேரில் கேட்கலாம். இப்பொழுது வீட்டிற்கு வீடு டெலிபோன்கள் ஏற்பட்டிருப்பது போல், தாங்கள் யாரிடம் பேசுகிறார்களோ அவர்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசும்படியான கருவிகள் இன்னும் இருபத்தைந்து வருஷத்திற்குள் ஒவ்வொரு வீட்டிலும் அமைக்கப் பட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை. உலகத்தில் ஆங்காங்கே நடக்கும் சம்பவங்களைக் கண்ணெதிரில் நேருக்கு நேரே நாம் பார்க்கலாம். வர்த்தமானப் பத்திரிகைகளும், தபால் தந்திகளும் நாடக மாதிரியான போக்கு வரத்துக்களாய்ப் போய்விடும். தற்போது மோட்டாரில் செல்லுபவர்கள் கட்டைவண்டிகளையும் மாட்டு வண்டிகளையும். ஏன்—குதிரை வண்டிகளையும் கூடக் கண்டு நகையாடுவதுபோல், பத்திரிகைகள் மூலம் சமாசாரங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறவர்களைக் கண்டு இனி வரப் போகும் நமது சந்ததியார்கள் பரிகசிப்பார்கள்.



இவைகளை யெல்லாம் கருதும் போது மேதாவிகளுக்கு ஒருபெரிய சந்தேகம் ஏற்படுகிறது. சாஸ்திர அறிவும், ஆராய்ச்சியும் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறதற்குத் தகுந்தபடி சாதாரண மனிதர்களுடைய நெறிமுறையும், ஒழுக்கமும் முன்னடைந்து வருகின்றனவா என்பது கேள்வி. சாடி என்னும் ஒரு பெரிய ரசாயன சாஸ்திரி, சாஸ்திர அறிவு வளர்ச்சியடைந்திருப்பதற்கு ஏற்றவாறு மனிதர்களின் வாழ்க்கை இலட்சியங்களும் முன்னேற்றம் அடையவில்லை என்று கூறுகிறார். அவ் விலட்சியங்கள் சாஸ்திர உதவியினால் உலகத்தின் அழிவைத் தேடும்படியானவையாக யிருப்பதாக அவர் கூறுகிறார். பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் என்னும் மேதாவி, 'சாஸ்திர அபிவிருத்தி மனிதருக்குப் பெரியதோர் நன்மையை வழங்கி விட்டதாக எண்ணி ஜனங்கள் பேசுகிறார்கள், ஆனால் அனுபவத்தில் கண்டறிந்த நாம் இதுவெறும் கனவு என்பதைத் தெரிந்து கொண்டு விட்டோம். சாஸ்திர ஞானத்தைக்கொண்டு, அதிகாரத்திலும் பதவியிலும் உள்ளவர்கள் தங்கள் துர் எண்ணத்தையும், அக்கிரம முறைகளையும் சாதித்துக்கொள்ள ஹேதுவுண்டாகி விட்டது. அவர்களுடைய இலட்சியங்கள் நன்மை பயக்கத் தக்கவையாயிருப்பின், சாஸ்திர ஞானம் அபிவிருத்தியாயிருப்பது அனைத்தும் உலகிற்கு லாபந்தான். ஆனால் அவை தீக்குணம் படைத்தனவாயிருப்பின் அதுவெல்லாம் வியர்த்தந்தான். தற்போது உலகம் போகும் ரீதியை கவனிக்குமிடத்து அதிகாரத்திலும் பதவியிலுமுள்ளவர்களுடைய கருத்தெல்லாம் தீமை நிரம்பியவாறே காணப்படுகிறது.'' என்று கூறுகிறார். எனவே சாஸ்திர அறிஞர்கள் முதலில் மனிதனின் ஒழுக்க முறைகளைச் சீர் திருத்தி அதன் பின்னரே இந்த சாதனங்களை யெல்லாம் அவனிடத்து வழங்க வேண்டுமென்றும் இன்றேல் அவைகளைக் கொண்டு தனது அழிவையே மானிடவர்க்கம் தேடிக் கொள்ளுமென்றும், மேதாவிகள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

மனிதனின் பிறவியையும் குணாதிசயங்களையும் மாற்றியமைக்கவும் வைத்திய நிபுணர்கள் முயன்று வருகிறார்கள். இவையெல்லாம் உலகிற்கு இன்பத்தை விளைவிக்கப் போகின்றனவா? அல்லது உலகத்தையே நரகமாக்க சாஸ்திர அறிஞர்கள் முயலுகிறார்களா?

தீமைக்கோ, நன்மைக்கோ இத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டு தான் வருகின்றன என்பது வெளிப்படை. தூங்கு மூஞ்சிகளெனப் பேர் படைத்த இந்தியர் களாகிய நாமும் அவைகளுக்குத் தப்பிப் பிழைக்க முடியாது.

---

### டாக்டர் அன்சாரி.

நான் ஒன்று கூறப் போவதற்காக என்னை மன்னிக்கவேண்டும். அதுதான் தீண்டாமை விலக்காகும். இது முடிவு பெறு திருக்கும் வரை, உங்களில் ஒரு பெரும் பகுதியார் கட்கிருக்கும் சமுதாய சிவிக் குறைகள் நிவர்த்திக்கப்படா திருக்கும்வரை, அவர்களை உங்களின் வேறு பட்டவராக நடத்தப்படும் வரை, அவர்களை மானிடவர்க்கத்திற்கும் தாழ்ந்தவர்களாக நடத்தப்படும் வரை, உங்களின் உன்னதியும் அரசியல் சிவிக் முன்னேற்றங்களும் உதவாது போகும்.

# நவமணிகள்

ஸ்ரீமான் C. S. ஜகதீச சுந்தரம் பிள்ளை எழுதியது.

மரகதம் பவளம் நீலம்
வச்சிரம் பதுமராகம்
விரவிய தாள மேகோ
மேதகம் புருடராகம்
உரவிய காந்திவிட்டே
உமிழும் வைடூரியந்தான்
பெருகிய நவமணிக்குப்
பெயரிவை ஆகும் என்ப.

இரத்தின மென்பது விலையுயர்ந்த கல். அது எவ்வளவு காந்தியாகவும், களங்கமற்று நல்ல நிறமாகவும் இருக்கிறதோ அவ்வளவும் விலையுயர்ந்த தாகும். இவ்விரத்தினங்களில் முக்கிய மானவை ஒன்பது. அவைகள் வச்சிரம், பதுமராகம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பவளம், முத்து என்பவைகளே. இவ்வொன்பதும் நவரத்தினங்கள் அல்லது நவமணிகள் என்று சொல்லப்படும். இவ்வகைப்பட்ட இரத்தினங்களுக்கு ஐந்துவித குணங்களுண்டு. ஐந்துவித தோஷங்களுமுண்டு. இரத்தினப் பரீக்ஷை நிபுணர்கள் இரத்தினங்களுக்கு நீரோட்டம் என்னும் நிழல்தான் முக்கிய குணம் என்று சொல்லுவார்கள்.

வச்சிரம் அல்லது வைரம்.

இரத்தினங்களிலெல்லாம் சிறந்தது வச்சிரம்; அதற்கு வைரம் என்றும் ரவை என்றும் பெயர் வழங்கும். வச்சிரம் என்றாலும் வைரம் என்றாலும் மிகவும் உறுதியான வஸ்து என்பது பொருள். உலகிலுள்ள வஸ்துக்களிலெல்லாம் அதிக கடினமானது வச்சிரந்தான். எவ்வித இரத்தினங்களையும் கண்ணாடிகளையும் வைரத்தால் அறுக்க வேண்டுமே யன்றி வேறு எவ்விதக் கருவியைக் கொண்டும் அறுக்க முடியாது.

மாமணி மரபுக்கெல்லாம்
வைரமே முதன்மைச்சாதி
யாமென வுரைப்பர் நூலோ
ரதிகம் யாதென்னி லேனைக்
காமரு மணிகட் கெல்லாந்
தமரிடு கருவியா மத்
தூமணி தனக்குத் தானே
துளையிடுங் கருவியாகும்.

உண்மை வைரத்தை (ஆஸிட்) திராவகத்தில் போட்டுச் சற்று நேரம் பொறுத்து எடுத்தால் ஒளி மழுங்காமலும் நிறை குறையாமலும் அப்படியே இருக்கும். வைரத்தைக் கீழ் நோக்கிச் சாய்த்துப் பிடித்தால் ஒளி மேல் நோக்கிச் செல்லாமல் கீழ்ப் புறத்திலேயே பிரதிபலிப்பதுதான் உயர்ந்த வைரம். வைரத்தை எரித்தால் கரித்திராவகம் தவிர வேறொன்றும் அதிலிருந்து உண்டாவதில்லை. அதனால் அது கரியே யன்றி வேறொன்று மன்று. அது பூமியில் என்ன காரணத்தால் அந்த உருவமும் பிரகாசமும் அடைகின்றதோ அது இன்னும் தெரியவில்லை.

கோசல நாட்டில் உண்டாகும் வைரம் காட்டு வாழைப்பூவின் நிறம் போல இருக்கும். கலிங்க நாட்டு வைரம் மஞ்சள் நிறமாக இருக்கும். ஸௌராஷ்டிர தேசத்தில் கிடைக்கும் வைரம் கொஞ்சம் சிவப்பாக இருக்கும். ஸார்ப்பக தேசத்து வைரம் கருமை நிறம். பௌண்டிர தேசத்து வைரமும் கருமை நிறந்தான். இமய மலையில் உண்டாகும் வைரம் வெண்மை நிறமாகவும் ஒளி வீசும்போது சிவப்பு நிறம் கலந்தும் வீசும். வேணு நதி தீரத்தில் உண்டாகும் வைரம் தோஷமில்லாமல் வெண்மை நிற முடையதாக விருக்கும். கோல்கொண்டா, பண்டல்கண்டு என்னும் இடங்களில் எடுக்கப்பட்ட வைரங்களும் சிறந்தவைகளே. போர்னியோவிலும் பிரேஜிலிலும் யூரல்மலைகளிலும் வைரக்கனிகளிருக்கின்றன. பிரேஜிலிலுள்ள கனிகளிலிருந்துதான் வைரம் மிகுதியாகக் கண்டெடுக்கப்படுகிறது. கனிகளிலிருந்து எடுக்கப்படும்போது வைரம் மங்கலான கூழாங்கல்லைப்போல இருக்கும். சுத்தஞ் செய்த பின் அதிக காந்தி பெறும். அது மிக்க உறுதியுள்ளதாதலால், அதற்குப் பட்டை தீட்ட வேண்டுமானாலும், மெருகிட வேண்டு மானாலும் அதன் சிறு பொடிகளாலேயே ஆகவேண்டும். வைரப்பொடிகளை எண்ணெயிற் கலந்து சக்கரச் சாணையின் மீது வைத்து வேண்டியபடி சுழற்றுவார்கள்.

இதுவரை நாம் அறிந்தவற்றில் மிகப்பெரியது போர்த்துகல் தேசத்தரசனிடத்திலிருக்கும் வைரந்தான். அது 1680 காரெட் அல்லது 1260 மஞ்சாடி எடையுள்ளது. அதன் மதிப்பு 224 கோடி ரூபாய். இரஷிய சக்கர



வர்த்தியின் செங்கோலிலிருந்த வைரம் 779 காரெட் அல்லது 554 மஞ்சாடி எடையுள்ளது. அதன் மதிப்பு 4 கோடி ரூபாய். ஒளி மலையென்னும் அர்த்தங்கொள்ளும்படி ஹிந்துஸ்தானி பாஷையில் கோஹினூர் எனப் பெயர் பெற்ற ஒரு பெரிய வைரமானது கோல்கொண்டாவிலுள்ள கனிகளில் அகப்பட்டது. அது ஆதியில் மொகலாய சக்கரவர்த்தியாகிய ஷாஜிஹானிடத்திலும் பிறகு அவன் பின் அரசாண்டவர்களிடத்திலுமிருந்து கடைசியில் பாஞ்சாலத்திற் கதிபதியாகிய இரஞ்சித சிங்கனிடத்திற் போய்ச் சேர்ந்தது. அவனுடைய தேசம் ஆங்கில அரசோடு சேர்ந்த பிறகு 1850-ம் வருஷத்தில் அந்த கோஹினூர் வைரம் விக்டோரியா மகாராணியவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அது சுத்தமாக வேலை செய்யப்படாம லிருந்தபோது 800 காரெட் 600 மஞ்சாடி எடையுள்ளதாக விருந்தது. இரண்டு தரம் வேலை செய்யப்பட்டதனால் இப்போது அது 147 காரெட் அல்லது சுமார் 110 மஞ்சாடி எடையுள்ளதாயிருக்கிறது. பிட் என்றும் R. என்றும் பேர் பெற்றதும் அதி ஜொலிப்புள்ளதுமான வைரம் கோல்கொண்டாவிலுள்ள கனிகளில் அகப்பட்டது. அதைப் பிட் என்பவர் சென்னை கவர்னராக இருந்தபோது விலைக்கு வாங்கினார். அது 126 காரெட் அல்லது 102 மஞ்சாடி எடையுள்ளது. அதன் மதிப்பு ரூ. 48 லக்ஷம்.

தோஷமில்லாத உயர்ந்த வைரங்களை அணிந்து கொண்டால் பற்பல வியாதிகள் நீங்குகின்றன வென்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

மரகதம் அல்லது பச்சை.

மரகதம் என்பது பச்சை நிறமுள்ள இரத்தினம். அதற்குப் பச்சை என்றும் பெயர். மூங்கில் இலையின் நிறம், வாழையிலையின் நிறம், பச்சைக் கிளியின் நிறம் போன்ற பச்சைக்கு கருடப்பச்சை என்று பெயர். காட்டுவாழைப் பூவின் நிறத்தைப் போல் கொஞ்சம் வெண்மையும் மஞ்சளும் கலந்து ஒளி வீசிக்கொண்டிருப்பது மாகிய கற்களுக்கு மரகதம் எனப் பெயர் என்று பிருஹத் ஸம்ஹிதையில் சொல்லப்படுகிறது

விலையுயர்ந்த பச்சைகள் தென் அமெரிக்காவில் பெரு தேசத்திலும், துருக்கி தேசத்திலும், சமுத்திர நடுவிலுள்ள தீவுகளிலும், சமுத்திரக் கரையைச் சமீபத்திருக்கும் தேசங்களிலும் உண்டாகின்றன. இந்தக் கற்களுக்கு ஐவகைக் குணங்களும் எழுவகை தோஷங்களும் எண்வகை நீரோட்டங்களும் உண்டென இரத்தினப் பரீக்ஷை வல்லார் கூறுகின்றனர்.

தோஷமில்லாத சிறந்த மரகதத்தை அணிபவர்களுக்கு ஆரோக்கியமும் செல்வமும் பலமும் உண்டாகும். வாதரோகம் கால்வீக்கம் வாந்தி முதலான நோய்கள் நிவர்த்தி யாகும்.

(வரும்).

---

சுவாமி சுந்தாநந்த பாரதியார்.

தலைகுனியாதே—தமிழா
தாயை மறவாதே
மலை குலைந்தாலும்—தமிழே
மனங்குலை யாதே!
வீரத்திரு வழகை—தமிழா
விலைப்படுத்தாதே!
பாரின் புகழெல்லாம்—தமிழே
பரவ வுன்ற னுட்பார்!
குன்று ருளுந் தோளா! தமிழா
குவலயத் தோழா!
வென்றியுன தன்றோ—தமிழே
வேந்து மொழி யன்றோ?

பிறந்தவ ரெல்லாம்—தமிழா
சிறந்தவர் தாமே
மறந்து நில்லாதே—தமிழே
மயங்கி வீழாதே!
மக்களுக் கோர் சமயம்—தமிழா
மன்னுயிர்க்கோ ரிறைவன்!
மக்களும் ஓர்வகுப்பே—தமிழே
மற்றுமுண்டோ பகுப்பே!
ஒற்றுமைச் சங்கோலிப்போம்-தமிழா
உண்மைக் கடற் குளிப்போம்!
வெற்றிமுர சடிப்போம்—தமிழே
வீரமொழி யாசி!

## வாழ்க்கை நூல்

---

ஸ்ரீமான். K. N. சிவராஜபிள்ளை யவர்கள் B. A.

மகப் பேணல்.

### இயற்கை வளர்ப்பு.

1. இயற்கை வளர்ப்பே இசைவென்பார் மக்கள்
புயற்கை புகுந்த கலம்.

### பயிற்சிப் பருவம்.

2. கழைகண் முதிர வளையா ; இளக
இளமை இனிதே உயிர்க்கு.

3. வாலைப் பருவ வளர்ப்பு வளன் வாழுமே
மேலைப் பருவ விளைவு.

4. களைகட்டுக் காககும் பயிரேபோல் பிள்ளை
முளைகொட்டும் குற்றம் முனி.

5. பாய் காட்டும் செல்லும் கலப்பாதை ; பண்பில்
தாய் காட்டும் சேய்செல் தடம். [லாத்

### பயிற்சிக் கருவி.

6. அன்பே திருத்தும் கருவி அதுகெட்ட
பின்பே வலியாய்ந்து பேண்.

7. அடியாது கெட்டார் சிலரே ; அடித்தும்
படியாது கெட்டார் பலர்.

### பயிற்சி முறை.

8. குற்றம் பெரிதெடுத்துக் கூறல் குழையாதோ
உற்றான் மக்க ளுளம்?

9. பிற்சார்ந்து பேணுறாஉம் பெற்றோரே தம்மக்கட்
டற்சார்வு* கோறும் சமன்.

10. கொஞ்சலும் வெஞ்சொல் விளம்பலும்
மிஞ்சிடிற் சேய்க்கோர் விடம். [கூறின்றி

11. கூறிக்கற் பிக்கக் கொதிப்படுதென் தம்நடை
மாறிகற் பித்தல் மறந்து, [யால்

### பயிற்ற வேண்டியது.

12. அறிவூட்ட லென்னு மறத்தினும் சீலச்
செறிவூட்ட லாமே திறம்.

13. ஆளாண்மை வேண்டும் மார்க்கென்பீர்
தாளாண்மை ஒன்றே தரும். [அவ்வெலாம்

### பயிற்சிப்பயன்.

14. கருவிற் பெறுமியலும் கல்வி வெறுப்பால்
உருவிற் றிரிதலு முண்டு.

15. பெறலிற் பெருமையே பீடொது பெற்றும்
திறலிற் றிருத்தா நமக்கு.

### பெற் றோர்ப் போற்றல்.

மக்கள் கடனம்

1. பெற்றோரைப் பேணாப் பெரும்பேதை எப்பெரு
உற்றாலும் உற்றா னலன். (வை

2. வீட்டிற் பணிந்தே விழுப்பம் பயில்லிலான்
காட்டிற் கடந்த களிறு.

3. சூழ்கேளிர் பூண்ட பகையில் மிகச்சுடுமே
சொற் கேளாப் பிள்ளைத் துணை.

### பெற் றோரும் மக்களும்.

4. தீயம் புலகம் சிதறினும் காத்தற்குத்
தாயன்பு நிற்கும் தலை.

5. உனைவளர்க்கத் தாயுழன்ற துன்னுய், உதவாய்
பனைவளர்க்க வேண்டுமோ பால் ?

6. ஈறுண்டோ தந்தையிடை துன்பிற்கும் எற்ற
மாறுண்டோ வாழ்க்கை வளத்து ? [வை

7. தாய்தந்தை பூணும் மகிழும் மறக்கும்தம்
வாய்தந் துரைக்க வரா. (Bea

8. மக்கள் மனமலர்ச்சி தந்தார் அதனோடு
துக்கமும் தந்தார் துணைக்கு. (Bea

* Self-reliance.

---

## நட்டாஜி

அல்லது

### சிவாஜியின் சேனைத் தலைவன்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி யவர்கள் எழுதியது)

135-ம் பக்கத் தொடர்ச்சி.

17-ம் அத்தியாயம்

### பணப் புதையல்.

அடுத்த நாள் காலையில் சிவாஜி, பவானியம்ம னுக்கு விசேஷ பூஜையும் அலங்காரமும் செய்ய ஏற்பாடு செய்தார். அம்மனுக்கு ஒரு எருமைக் கடாவும் பலியிடப்பட்டது. இவை யாவும் முடிந்த பிறகு, சிவாஜி, கோட்டையைப் பழுது பார்க்கும் கொல்லர்களை அழைப்பித்து, நட்டாஜி காட்டிய பாம்புப் புற்றைத் தோண் டும்படி சொன்னார். தோண்டியபோது ஒரு பெரிய நல்லபாம்பு வெளிப்பட்டு ஒரு புறமா கப் போய்விட்டது. ஒருவரும் அதற்கு எவ் விதமான தீங்கும் செய்யவில்லை. கொல்லர்கள் பூமியை ஆழமாகத் தோண்டினார்கள். நெடு நேரம் தோண்டியும் கல்லும் மண்ணும் தவிர வேறொன்றுங் காணப்படவில்லை. இன்னும் ஆழமாகத் தோண்டியபோது, கட்டபாறை ஏதோ ஒரு பொருளின் மேல் பட்டு "கணீர்" என்னும் ஓசை கேட்டது.

அவ்வோசையைக் கேட்ட ஒரு கொல்லன், மற்றவர்களைப் பார்த்து," அண்ணே! பாறுங் கல்லுதான் இருக்குது. இனிமேல் தோண்ட முடியாது. பீரங்கி மருந்து வைத்துக் கொளுத்தித்தான் பாறுங்கல்லைப் பெயர்க்க வேண்டும்" என்று சொன்னான்.

இதற்குள் இன்னொருவன், "அண்ணே, அண்ணே! இதோ பார் அண்ணே! இரும்பு கூட இருக்குது" என்றான்.

"அடே! செவ்வையாக மண்ணைக்கிளறிப் பாருங்கடா" என்றான் கொல்லர் தலைவன்.

அப்படியே செவ்வையாகச் சோதித்துப் பார்த்த போது, பலகை போல் சமமான ஒரு பாறைக் கல்லும் அக்கல்லில் இரண்டு பெரிய இரும்பு வளையங்களும் காணப்பட்டன. இதைக் கண்ட கொல்லர் தலைவன் பள்ளத்தின் அடியில் இன்னும் அகலமாகத் தோண்டும்படி கட்டளை யிட்டான். அவ்விதமாகச் செய்த தில், வளையங்களோடு கூடிய சமமான பாறை முழுப் பாறையல்ல வென்றும், கீழுள்ள ஏதோ ஒரு பொருளின் மேல் மூடப்பட்ட ஒரு சலவைக்கல் பலகை யென்றும், அக் கற்பலகை யைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் வசதியாக இருக்கும்படி அந்த இரண்டு இரும்பு வளையங் கள் அதில் அமைக்கப் பட்டிருக்கின்றன வென்றும் புலப்பட்டது. பிறகு, இரும்புச் சங்கிலிகள் கொண்டுவரப்பட்டு, வளையங்களில் கோர்த்து மேலிருந்து இருபது தொழிலாளி கள் கற்பலகையைத் தூக்கினார்கள். சலவைக் கற்பலகை வளையத்துடன் மேலே கிளம்பிற்று. தூக்கினவுடன் அதன் கீழ், பெட்டி போல் சதுரமாக அமைக்கப்பட்ட ஒரு சிறு அறை காணப்பட்டது. அவ் வறைக்குள் சில மண் ஜாடிகள் காணப்பட்டன.

ஜாடிகள் வெளியே எடுக்கப்பட்டன. ஒவ் வொரு ஜாடியும் மிகவும் கனமுள்ளதாகத் தோன்றிற்று. ஒன்றின்பின் ஒன்றாகப் பதி னொரு ஜாடிகள் வெளியில் கொண்டுவரப் பட் டன. கடைசியாக ஒரு அழகான வெள்ளிப் பெட்டியும் அவ்வறையிலிருந்து எடுக்கப் பட் டது. இவ் வெள்ளிப் பெட்டியின் மேற் புறத் திலும், சுற்றிலுமுள்ள நான்கு பக்கங்களிலும் அருமையான சித்திர வேலைகள் அழகாகச் செய்யப்பட்டிருந்தன. இப்பெட்டி, கை தேர்ந்த பொற் கொல்லனால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

சிவாஜியின் கட்டளைப்படி ஜாடிகளும் வெள் ளிப் பெட்டியும் சிவாஜியின் அறைக்குக் கொண்டுபோகப் பட்டன. பிறகு, சிவாஜி நட்டாஜியுடன் அவ்வறைக்கு வந்து அவைக ளைச் சோதிக்கத் தொடங்கினார். ஒவ்வொரு ஜாடி நிறைய நாணயங்கள் நிரப்பப் பட்டிருந் தன. இந்த நாணயங்கள், பேபர் டில்லி யைக் கைப் பற்றுவதற்கு முன்னே, டில்லியில் அரசாண்டிருந்த மொகலாய சக்கரவர்த்தியின் முத்திரையிடப்பட்டிருந்தன. ஆறு ஜாடி

நிறைய வெள்ளி நாணயங்களும், மற்ற ஐந்து ஜாடிகளில் தங்கச் சவரன்களும் நிறைந்திருந்தன! வெள்ளிப் பெட்டியைத் திறந்தார்கள். ஆ! கண் கூசுகிறது! நேர்த்தியாய் பட்டை தீர்க்கப்பட்ட பல வைரக்கற்கள் அப்பெட்டிக்குள் ஜொலித்தன! பெரியதோர் முத்துமாலை கண்ணைப் பறித்தது! ஆ! ஒவ்வொரு முத்தும் எவ்வளவு பெரியதாயிருக்கிறது! எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது! கடைசியாக, விலையுயர்ந்த, கல்லிழைத்த பதக்கம் ஒன்று நக்ஷத்திரம் போல் பிரகாசிக்கிறது! இந்தப் பதக்கம் முன் ஒரு காலத்தில் அரசாண்டிருந்த டில்லி சக்கரவர்த்தியின் மகுடத்தை அலங்கரித்திருக்க வேண்டும். இந்த அழகிய, பெரிய விலையுயர்ந்த முத்துமாலை டில்லி இராணியின் கழுத்தையும் மார்பையும் அலங்கரித்திருக்க வேண்டும்; விலையுயர்ந்த வைரக்கற்கள், இராணிக்கு ஏதோ ஆபரணம் செய்வதற்காகச் சேகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இச் செல்வப் புதையலைக் கண்ணாரக் கண்ட சிவாஜியும் நட்டாஜியும் பவானி தேவியின் திருவருளைப் புகழ்ந்து துதித்தார்கள். சிவாஜி, மகிழ்ச்சியுடன் நட்டாஜியைப் பார்த்து, “அன்பரே! இவைகளை வெறும் பொன்னும் வெள்ளியும், முத்தும் வைரமும் என்று நினைக்க வேண்டாம். இவைகளின் மதிப்பு எவ்வளவோ அதைவிடப் பல மடங்கு மதிப்பிடக் கூடிய பொருள்கள் இச் செல்வப் புதையலில் அடங்கியிருக்கின்றன. அதாவது நமது தேசியச் சேனைகளுக்கு ஆயுதங்களும், எதிரிகளால் பிடிக்கமுடியாத பல முள்ள கோட்டைகளும், மகாராட்டிர தேசத்தின் சுதந்தரமும் சுய ஆட்சியும் இந்த நகைகளிலும் பணத்திலும் அடங்கியிருக்கின்றன,” என்று சொன்னார்.

“மகாராட்டிர தேசத்தின் சுதந்தர விஷயத்தில் பவானியம்மனின் கருணையும் இருக்கிறது என்று நான் இப்பொழுது நம்புகிறேன்” என்றான் நட்டாஜி.

பிறகு, சிவாஜி கோட்டையிலுள்ள பொற்கொல்லனை அழைப்பித்தார். இப் பொற்கொல்லன், நகைகளை நோட்டம் பார்த்துச் சரியான மதிப்புச் சொல்ல வல்ல ஒரு நகை வியாபாரி. இந்த மனிதன் வந்து, ஏராளமான பொன் வெள்ளி நாணயங்களைக் கண்டு ஆச்சரியத்தினால் திகைப்படைந்து விட்டான். வெள்ளிப் பெட்டியைத் திறந்து காட்டியபோது, அதிலுள்ள விலையுயர்ந்த பொருள்களைக் கண்டு மேலும் இறும்பூதடைந்து பேச நாவெழாமல் சற்று நேரங்கழிந்த பிறகே அவன் தன் நிலைக்கு வந்து பேசும் சக்தியடைந்தான். சிவாஜி, இச் செல்வப் புதையலின் சரியான மதிப்பை யறிந்து சொல்லும்படி இவ் வியாபாரியைக் கேட்டார். அவன் ஒவ்வொன்றையும் நிதானமாக நோட்டம் பார்த்து தனித் தனியே ‘புள்ளி போட்டான்.’ வைரக் கல்லிழைத்த பதக்கமும், முத்து மாலையும் ஒவ்வொன்றும் தனித் தனியே ஒரு லக்ஷ ரூபாய்க்குமேல் மதிப்பிடப் பட்டன. மிகுதியாகவுள்ள வைரக் கற்களும் தங்க வெள்ளி நாணயங்களும் ஒன்று சேர்ந்து பத்து லக்ஷத்துக்குமேல் மதிப்பிடப் பட்டது. மதிப்பை அறிந்து கொண்ட பிறகு, சிவாஜி நகை வியாபாரியை யனுப்பிவிட்டு, முந்திய நாள் தன்னிடம் வர்த்தக விஷயமாய் வந்துபோன ஐரோப்பிய வர்த்தகனை அழைப்பித்தார். இந்த போர்ச்சுகேசிய வர்த்தகனும் நகைகளை நோட்டம் பார்ப்பதில் தேர்ந்தவனாகக் காணப்பட்டான். இவன், முத்துமாலை, பதக்கம், வைரக்கற்கள் இவைகளை ஆசையோடு நோக்கினான்.

சிவாஜி, தாம் ஆயுதங்களை வாங்க விரும்புவதாகவும், ஆனால், அவைகளை நேரில் போய்ப் பார்த்து திருப்தியடைந்த பிறகுதான் முடிவாக நிச்சயிக்கப்படும் என்றும் சொல்லி, ஆயுதங்களை வாங்குவதாக இருந்தால், அவற்றின் கிரயத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள விருப்பமா, அல்லது நகைகளாகப் பெற்றுக் கொள்ள விருப்பமா என்று அவனைக் கேட்டார். தந்திரசாலியான அந்த ஐரோப்பியன் ஆயுதங்களின் விலைக்கு ஈடாக நகைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவதாகவும், ஆயுதங்கள் ஒன்றரை லக்ஷ ரூபாய் மதிப்புள்ளவை என்றும், வைரப் பதக்கம் அரை லக்ஷம் பெறும் என்று தான் மதிப்பதாகவும், அரை லக்ஷ ரூபாய்க்கு ஈடாக அந்த வைரப் பதக்கத்தைத் தான் எடுத்துக் கொள்வதாகவும் சிவாஜிக்குச் சொன்னான். ஒரு லக்ஷத்துக்கு மேல் மதிப்புள்ள வைரப்பதக்கத்தை, அரை லக்ஷம் என்று மதிப்பிட்டுச் சொல்லும் இவனுடைய மோசக் கருத்தைக் கண்டு சிவாஜி, சிரித்தார். சிவாஜி, அந்த நகையின் சரியான மதிப்பை யறிந்திருக்கிறார் என்று பின்னால் தெரிந்து கொண்ட போர்ச்சுகேசியன் வியாபாரத்



தோரணையாக சில நேரம் வாதாடிக் கடைசியாக அப் பதக்கத்தை ஒரு லக்ஷ ரூபாய்க்கு ஈடாகப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தான். ஆயுதங்களின் விலையில் ஒரு லக்ஷம் போக மீதி அரை லக்ஷத்திற்கு ஈடாக மிகுதியாகவுள்ள வைரக் கற்களைப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தான். பிறகு, ஆயுதங்களைப் பார்வையிடத் தாம் அடுத்த நாள் காலையில் புறப்படுவதாகச் சிவாஜி அவனுக்குத் தெரிவித்து அவனை அனுப்பிவிட்டார்.

அவன் போன பிறகு, முந்திய நாள் தம்மிடம் வந்து முறையிட்டுக் கொண்ட சிற்பியை அழைப்பித்துத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாக்கித் தொகை முழுவதையும் கொடுத்தார். அன்றியும், ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு மாதச் சம்பளத்தை முன் பணமாகக் கொடுத்தார். கடைசியாகத் தோரணக் கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள “மொர்பூத்” மலைமேல் “ராஜ் காட்” என்னும் ஒரு புது கோட்டையைக் கட்டும்படி அச்சிற்பிக்குக் கட்டளையிட்டு அதற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்தார். இவைகளை எல்லாம் செய்தான பிறகு, சிவாஜி நட்டாஜியோடு, இனி நடக்க வேண்டிய வேலைகளைப் பற்றி நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

(தொடரும்.)

---

## சர்வசமய ஸமரஸ மகா சபை

சென்ற ஜனவரி 27-ம் 28-தேதிகளில் கவிச் சக்கரவர்த்தி ரவீந்திர நாத தாகூர் தலைமையில் சர்வசமய ஸமரஸ மகா சங்கம் கூடிற்று. படிப்பிலும், கீர்த்தியிலும், தீர்க்கதரிசன நுட்பத்திலும், உலகத்தில் சிறந்து விளங்குபவர் மஹரிஷி ரவீந்திர நாத தாகூரே யாவர். மதங்கள் பேரால் மட்டுக்கடங்காத அட்டூழியங்களும் அட்டகாசங்களும்—(புத்தர் மஹாவீரர், சங்கரர், ராமானுஜர், சைதன்யர் முதலிய மதாச்சாரியர்கள் அவதரித்து ஒற்றுமை யுண்டுபண்ணிய நமது நாட்டில்)—இன்று கண்மூடித்தனமாய் நடந்து வருகின்றன. இந்த மகாசங்கம் மூலம் பலதிறப்பட்ட மதஸ்தருக்குள் பரஸ்பர அன்பும் ஒற்றுமையும் பெருகுமென்று நம்புகிறோம். இத்தகைய ஒரு ஸமரஸ மகாசங்கம் கூட்ட வேண்டுமென்ற எண்ணம் ஆதியில் அமெரிக்காவில்தான் உதயமானதாகச் சொல்லப்படுகிறது 1893-ல் சிக்ககோ நகரத்தில் கூடிய முதல் சர்வசமய ஸமரஸ மகா நாட்டுக்கு ஸ்வாமி விவேகானந்தர் விஜயம்செய்து “இந்து மதந்தான் புராதன மதம், ஆசியாக்கண்டமே மதாச்சாரியர்களின் இருப்பிடம், இந்தியா ஒரு அந்தஸ்துள்ளநாடு, இந்தியர்கள் மேல் நாட்டாருக்கு எவ்விஷயத்திலும் எள்ளளவும் குறைந்தவர்கள் அல்ல.” என்பனவாதிய உண்மைகளை நிலைநாட்டினார்.

ஆதிகாலத்திலும் இம்மாதிரி மகாசங்கம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் பிராமணர்களைத் தவிர இதரர்களுக்கு அந்த மகா சங்கத்தில் பிரவேசனம் அளிக்கப்படவில்லை. கி. மு. ஆறாவது நூற்றாண்டில் புத்த மதம் பரவத் தொடங்கியதும் பிராமணர் தான் மகா சங்கங்களில் பங்கு கொள்ளுதற்கு உரியவர் என்ற எண்ணம் தொலைந்தது, முதல் சர்வசமய ஸமரஸசங்கம் கி. மு. 543-ல் பீஹார் மாகாணத்திலுள்ள ராஜக்கிரஹ நகரத்தில் பௌத்தர்களால் கூட்டுவிக்கப்பட்டது. அச்சங்கத்துக்கு அஜாதசத்ரு என்ற அரசர் தலைமை வகித்தார். அந்தமகா சங்கத்தில் சர்வஜனங்களுக்கும் பிரவேசனம் அளிக்கப்பட்டது. அப்பால் அடுத்த கூட்டம் கி. மு. 443-ல் வைசாலி என்ற முசபர்பூரில் கூடியிருப்பதாகத் தெரிகிறது. மூன்றாவது கூட்டம் கி. மு. 225-ல் அசோகச் சக்கரவர்த்தி தலைமையில் பாடலி புரத்தில் கூடிற்று. நான்காவது கூட்டம் பாஞ்சால நாட்டில் ஜலந்தர் நகரத்தில் கானிஷ்கா சக்கரவர்த்தி தலைமையில் கி. பி. 78-ல் கூடியது. ஏழாவது நூற்றாண்டில், கன்னோசி நாட்டரசனான ஹர்ஷவர்த்தன் ஐந்து வருஷத்துக்கு ஒருமுறை இத்தகைய ஸமரஸ சங்கங்கள் கூட்டுவித்து வந்ததாகவும் தெரிகிறது.

ஜெயினர்களும் இம்மாதிரிக் கூட்டங்கள் கூட்டி வந்தார்கள். கி. பி. 200-ல் மதுராவில் ஜைனர்கள் கூட்டிய ஒரு மகாநாட்டில் கம்மகாண்டி குமாரிலா பட்டாச்சாரியரும், சங்கராச் சாரியரும், வாதப்பிரதிவாதம் நடத்தி யிருப்பதாகத் தெரியவருகிறது. மொகலாயச் சக்கரவர்த்தி அக்பரும் பல மதஸ்தர்கள் அடங்கிய ஒரு ஸமரஸ மகாநாடு கூட்டுவித்ததாக சரித்திரம் கூறுகிறது.

தற்காலத்தில் இத்தகைய ஸமரஸ மகாநாடுகள் மேல்நாட்டிலேயே நடைபெற்று வருகின்றன. அநேக காரணங்களால், இத்தகைய மகாநாடுகள் கூடுவதற்குத் தகுதியான இடம் இந்தியா வென்றே நாம் அபிப்ராயப் படுகிறோம். அநேக மதங்களுக்கு உற்பத்தி ஸ்தானம் இந்திய நாடாகும். அன்பே சிவம், தத்துவமசி முதலிய தெய்வீக உண்மைகள் தோன்றியதும், இந்தியாவிலேயாகும். ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி என்ற பொன்னுரை பிறந்ததும் நம் இந்திய நாட்டிலேயாம். இத்தகைய ஸமரஸம் தாண்டவமாடிய இந்தியாவிலே, தற்காலம் மத வெறி தாண்டவ மாடுவது பரிதவிக்கத் தக்கதல்லவா? மதத்தின்பேரால் வருஷா வருஷம் மடியும் மனிதருக்குத்தான் கையும் கணக்குமுண்டா? உலகத்துக்கு ஒரே கடவுள். மக்களெல்லாம் அவரது புத்திரர்கள் என்ற ஸமரஸ மனப் பான்மை தோன்றினால் இவ்வுலகம் ஆனந்த மயமாகும். இத்தகைய உணர்ச்சியைப் பரப்ப தற்காலம் கூடிய சர்வசமய ஸமரஸ மகா சங்கம் முயற்சி செய்யுமென்று நம்புகிறோம்.

---

# அக்பரின் குணாதிசயங்கள்.

(டர்பன் வித்தியாலய தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ. ச. முனிஸ்வாமிப் பிள்ளை எழுதியது.)

இந்தியாவில் அரசாட்சி செய்த மொகலாயச் சக்ரவர்த்திகளில் ஒருவராகிய அக்பர் சக்ரவர்த்தியைப்பற்றி சில விநோத விஷயங்களிருக்கின்றன. அவைகளை நம் பத்திரிகா நேயர்கள் படித் தின்புறுமாறு கீழே குறிப்பிடுகிறேன்.

அக்பர் 1556-ம் வருடம் முதல், 1603-ம் வருடம் வரை ஆட்சி செலுத்தினாரென்றாலும் அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அவர் பெரிய புத்தக சாலையொன்று வைத்திருந்தார். அதனுள் பலபாஷை புத்தகங்களையும் வைத்து, முதலிலிருந்து கடைசி வரையும் வேறொருவரைக் கொண்டு புத்தகங்களைப் படிக்கச்சொல்லிக் கேட்பது வழக்கம். ஒரு புத்தகம் அரைகுறையாய்ப் படிக்கப்பட்டு நிறுத்தப் பட்டால், அந்தப் பக்கத்தில் அவர் தம் கைப்படவே ஓர் அடையாளமிட்டு வைப்பார். இப்படியே தினந்தோறும் பிறரை விட்டு புத்தகங்களை வாசிக்கச் சொல்லிக் கேட்டுப் பல விஷயங்களை அவர் அறிந்து கொள்வாராம்.

சக்ரவர்த்தியார் ஒன்றுமறியாத சிறு குழந்தைகளை எடுத்து மனிதரில்லாத இடத்திற்கு அனுப்பி, காப்பாற்றி, அவர்கள் பெரியவர்களான பின்னர் தங்கள் கருத்தை எவ்வாறு வெளியிடுவார்களென்று அறிய விரும்பி அதன் உண்மையை யறிந்து கொள்ளுதற் பொருட்டு, ஒருநாள் அவர் பிறந்து, சொற்ப நாட்களான குழந்தைகளாகப் பன்னிரண்டு குழந்தைகளைக் கொண்டுவரச்சொல்லி, அவைகளெல்லாவற்றையும் ஆக்ரா நகரத்திற்கு ஆறுகாதவழி தூரத்திலுள்ள ஏகாந்தமான ஒருமலைக் கோட்டைக்கு அனுப்பி, அந்தச் சிசுக்களுக்குப் பால் கொடுப்பதற்காக ஊமைகளான பன்னிரண்டு ஸ்திரிகளை அவர்களுடன் அனுப்பினார். அந்தக் குழந்தைகளையும் அவர்களுக்குப் பால்கொடுக்கப் போன ஊமைத் தாய்களையுந் தவிர்த்து அவ்விடத்திற்கு வேறு யாரும் போகாமலிருக்கும்படி ஓர் ஊமையைக் காவல் வைத்தார். இங்ஙனமாகக் குழந்தைகள் அவ்விடத்தில் பன்னிரண்டு வருஷகால மளவும் இருந்த பின்பு அக்பர் அவைகளைத் தன்னுடைய நகரத்திற்கு மீண்டும் வரவழைத்து பேசிய போது ஒரு குழந்தைக்காவது ஒன்றும் பேசத் தெரியவில்லை. காட்டு மிருகங்களைப்



போலத் தங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவற்றிலுள்ள விருப்பத்தை மாத்திரம் காட்டின. அதன் பின்பு அக் குழந்தைகள் எல்லோரும் போல மற்றவர்களோடு பேசப் பழகித் தங்கள் கருத்தை வெளியிட்டுச் சொல்வதற்கு வெகுநாள் சென்றது. அங்ஙனம் நெடுங்காலமாகவே யிருந்தனவாகையால், பேசும் வார்த்தை சுத்தப்படாமல் கொச்சையாக வாய் திருந்துவதற்கும், வார்த்தை சுத்தமாக யிருப்பதற்கும் பாலியப் பருவத்திலேயே சிறுவர்களுக்குப் பயிற்சி செய்வித்தல் வேண்டுமென்னும் உண்மையை அறிந்து கொண்ட சக்ரவர்த்தியார் பாடசாலைகள் ஸ்தாபித்து பால சிக்ஷை செய்விக்கும்படி கட்டளை யிட்டார். இவர் காலத்துக்கு முன் மகமதிய அரசர் ஒருவரும் சாதாரணமான கிராம பாடசாலைகள் தானும் நமது தேசத்தில் ஸ்தாபிக்கவில்லை.

அக்பருக்குப் புறாக்களை வளர்க்க மிகவும் பிரியம். அவர் பர்ஷியா போன்ற அன்னிய தேசங்களிலிருந்து உயர்ந்த ஜாதி புறாக்களைத் தருவிப்பது வழக்கம். சிறுவயதில் புறாப் பறக்க விடுவது அவருக்கு ஒருபொழுது போக்காகவே யிருந்தது. வயதான பிறகு தான் அவர் புறாக்கள் வளர்ப்பதையும், புறாக்களைப் பறக்க விடுவதையும் ஒழித்தார். இதுவுந் தவிர சிலந்திப் பூச்சிகள் சண்டையிட்டுக் கொள்வதையும், சிலந்திப் பூச்சிகளின் வலைகளில் சிக்கிய ஈக்கள் அவைகளிலிருந்து வெளிக் கொள்ள முயற்சி செய்வதையும் பார்த்து அவர் இன்புறுவதுண்டு. வேட்டையாடுவதிலும் அவருக்குப் பிரியம். அக்பர் அறுநூறு சிறுத்தைப் புலிகள் வைத்திருந் தாரென்று அவருடைய அரசிறை மந்திரி சொல்லி யிருக்கிறார்.

அக்பர் சிலசமயங்களில் ஆறுமாத காலத்திற்கு மாமிசம் உண்பதில்லை. சிலதினங்கள் போஜனம் செய்யாமல் பட்டினியாயுமிருப்பார். மதுபானமுஞ் செய்வதில்லை. அவர் வெளியூர்களுக்குச் சுற்றுப் பிரயாணம் போயிருக்கும் போதும் தலைமை ஸ்தானத்திலிருக்கும்போதும் சுத்த ஜலத்தைத் தவிர வேறு எவ்வித பானத்தையும் உட்கொள்ளுவதில்லை. புகைக்குடிப்ப துண்டோ வென்றால் அதுவுமில்லை. அவருடைய தந்தை ஹுமாயூனும் பாட்டன் பேபரும் அபின் புகை குடிப்பதுண்டு. அக்பர் உடுத்தும் உடை படாடோப மற்றதா யிருக்கும். பட்டுடைகளை உடுப்பதைவிட கம்பளியுடை உடுப்பதில் அவருக்கு அதிக விருப்பம். ஆனால் சிற்சில சமயங்களில் அவர் டாம்பீகமான உடைகள் தரிப்பதுண்டு. அது தமது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது தான். அவருக்குப் பரிமள சுகந்தங்களில் அதிகவிருப்பம். வாசனைச் சாமான்கள் செய்வோரை அவர் ஆதரித்து வந்ததாகத் தெரிகிறது. தூபப் புகை எப்போதும் தம் பக்கத்திலிருந்து கொண்டேயிருப்பதில் அவருக்கு விசேஷப் பிரியம்.

சக்கரவர்த்தி அக்பருக்கு முன் கோபம் அதிகமாம். ஒருசமயம் டெக்கான் நாட்டை ஜெயித்து விட்டுவர அனுப்பிய தமது சேனை திரும்பி வரவில்லையே யென்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில், அச் சேனைத் தலைவர் திரும்பி வந்து விட்டாரென்று சமாசாரம் எட்டிற்று. கொலு மண்டபத்துக்குச் சென்று தம்முடைய சிம்மாதனத்தில் வீற்றிருந்து அதனை கேட்க வேண்டுமென்று அவர்தமது சிம்மாதன அறைக்குச் செல்ல, அங்கே தமது சிம்மாதனத்தின் கீழ், விளக்குப் போடும் மஷால்ஜி யொருவன் பாம்பைப்போல் சுருட்டிக் கொண்டு படுத்துத் தூங்கிக் கொண்டிருப் பதைக் காண அக்பருக்குக் கடுங்கோப முண்டாகி அவனை அரண்மனை கோபுரத்திலிருந்து கீழே உருட்டித் தள்ளும்படி உத்தரவு செய்தாரென்று சொல்லப் படுகிறது.

அக்பருக்கு இந்துக்களிடத்தில் அதிலும் பிராமணர்களிடத்தில் விசுவாசம் அதிகம். அவர் வருஷந் தோறும் தமது பிறந்த நாளைக் கொண்டாடி, துலாபாரம் நடத்தி, தன் எடைக்குச் சமமாய்ப் பன்னிரண்டு முறை நிறுத் தெடுக்கப்பட்ட பொன்னையும், வெள்ளியையும், தானியாதிகளையும் பிராமணர்களுக்கும், பரதேசிகளுக்கும் பிரித்துக் கொடுப் [illegible] பது [illegible] வரைக் [illegible] வழக்கமாம்.

22454
600 008

# "தமிழர் தேசிய நாடகக் கழகம்."

## ஓர் வேண்டு கோள்.

("ஆண்டி")

("மாங்கல்யம்," "நாசிகாச்சேதனம்" முதலிய நாடகங்களின் ஆசிரியர்.)

தமிழ் நாடகக் கலையின் சார்பாகவும் அறிலும் என்னைப் பார்க்கிலும் உதவியை எதிர்பார்த்து நிற்கும் தற்காலத் தமிழரங்க மேடைக் காகவும் பெரியதோர் வேலைத் திட்டங்களுடன் கூடிய "தமிழர் தேசிய நாடகக் கழகம்" ஒன்றை ஸ்தாபிக்க உத்தேசித் திருக்கிறார்கள். முன்னேற்ற வழி பாழடைந்து, யோக்கியமான நாடக மேடைகளும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு, பற்பல இனிய நாடகங்களும் போற்றுவாரற்று மழுங்கிக் கொண்டே வரும் இந்நாளில் இத்தகைய கழகத்தின் அவசியத்தை எடுத்துக்கூறத் தேவையில்லை.

தலைப்பாக, இக்கழகம் தன்னுடைய விசாலமான வேலைத் திட்டத்தாற் புதிதாக ஒன்றையும் ஸ்ருஷ்டிக்க நிச்சயித்து விடவில்லை. இதுவரையிலும் ஆராய்ந்து பார்த்து வைத்திருக்கும் சில முக்கிய கொள்கைகளை நிறைவேற்ற நடைமுறையிற் கொணர்ந்திடுவதற்கேற்ற ஆளுதவியையும் ஸ்தாபனக் கருவியையுமே எதிர் பார்க்கின்றது. தற்கால நாடகக்கலை சம்பந்தமா யெழுகிற வினாக்களுக் கெல்லாம் தக்க விடை வேண்டுமாயின் பெரியதோர் முயற்சியும் அதற்கேற்ற ஊக்கமும் வேண்டி யிருக்கின்றது. தகுதியுள்ள ஸ்த்ரீ புருஷர்கள் இவ்வேலைக் கென்று முன்வந்து தங்கள் முழு நேரத்தையும் சமர்ப்பிக்க வேண்டி யிருக்கின்றது. பிரசுராலயத்திற்கும் கருவி யாலயத்திற்கும் வேண்டிய பொருள் தேட வேண்டி யிருக்கின்றது. சுருக்கத்தில் நாளிது வரையிலும் ஒவ்வொரு ஊர்களிலுமாக சிற்சில பேர்களா லிடையிடையே தட்டு மட்டாக நடத்தி வந்த வேலைகளை இக்கழகம் தானே கையாண்டு முறைப்படியும், அழுத்த மாகவும், மிகச் சீர்மையுடனு மியற்றும்.

இக்கழகம் இத்தமிழ் நாட்டிலேயே இப்பொழுதுதான் முதன்மையாக நாட்டப்போவதோடு, இன்னும் சிலவருடங் களுக்கெல்லாம் கூட இதுவே ஒரே நிலையமாகவு மிருக்க வேண்டும். யாவராலும் ஒப்புக் கொள்ளப் பட்ட தலைமைப் பதவியையும் இது வகிக்க வேண்டும். நாட்டின் நாலா பக்கங்களி லிருந்தும் இதன் உதவியை எல்லோரும் யாசிக்க வேண்டும். நாடகத்தையே தொழிலா யமைத்திடுவோரும் கல்விக் கருவியா யமைத்திடுவோரும் இக் கழகத்தினிடம் அதிக மதிகம் உதவிக்காக வந்து சேரும்படியும் இது நடைபெற வேண்டும்.

நாடகத் தொழிலுக்கு இக்கழகத்தினுதவி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதானிருக்கும். பொதுவாக நாடகத்தைப் பற்றிய உணர்ச்சி பொது ஜனங்களிடையே அதிகரித்தாலே நாடகங்களைப் பார்வை யிடுவதற்குள்ள ஜனத்தொகை அதிகப்படும். இஃதன்றியும் குறிப்பாக நாடகத் தொழிலாளரை ஆதரிக்கவென்று நகரங்கள் தோறும் நாடக தரிசகருடைய சங்கங்களை ஸ்தாபிக்க இக் கழகத்தால் முடியும். இக்கழகத்தின் கர்த்தாக்களிடம் இப்பொழுதே அனேக நாடகக் கம்பெனியார் இத்தகைய முறையை ஏற்படுத்திக் கொடுக்கக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நாடகாபி மானிகள் சங்கங்களுக்கு உதவி புரிவதற்கும், சர்வ கலா சாலையிலும் கல்லூரிகளிலுமுள்ள மாணவர்களுக்கு உதவிபுரிவதற்கும் வேண்டி இக்கழகம் ஓர் பிரசுராலயத்தையும் ஸ்தாபிக்க உத்தேசித் திருக்கின்றது. அவ்வால யத்தினின்றும் நாடக விஷயமான எல்லா வர்த்த மானங்களும் உதவிகளும் மெம்பர் களுக்குக் கூடியமட்டிலும் இலவசமாக அளித்திட முயற்சிப்பார்கள். உள்நாடு களிலுள்ள ஊர்களுக்கும் கல்லூரிகளுக்கும் பிரத்தியேக காரியதரிசி யொருவரை வேண்டிய சாமானங்களுடனனுப்பி ஆங்காங்குள்ள பிரமுகர்களைக் கலந்து அவர்களைக் கொண்டே ஒன்றிரண்டு நாடகங்களை நடிக்கச் செய்வதுடன் நாடக முறை, அபினயமுறை, ஆட்டமுறை முதலிய வற்றைப் பற்றிய உபன்யாசங்கள் செய்தும் காட்டப்படும். இவ்விதம் சின்னாட்களுக்குள் தேசமெங்கும் உயர்தர தேசிய நாடக மேடைகளைக் கொண்டு நிரப்பிவிடவும் வசதிக ளுண்டா கின்றன.

இன்னும் இக்கழகம் கோயில்களிலும் தேவஸ்தானங் களிலும் பள்ளி களிலும் சென்று அந்தந்த மதத்திற்கேற்ற பக்திரச நாடகங்களை நடித்துக் காண்பிக்க ஒத்தாசை செய்யும். சமுதாயச் சீர்திருத்த மகாநாடு களிலும், தேசிய ராஜீய மகா நாடுகளிலும் கலந்து அவ்வவ் வற்றிற் கேற்ற சமயோசித மான சரித்திரங்களை நடித்து தேச பக்தியை ஊர்ஜிதப் படுத்தும்.


இக் கழகத்தின் ஆரம்ப மஹா நாட்டொன்றை அதிசீக்கிரத்தில் தமிழகத்தில் யாதேனும் முக்கிய நகரமொன்றில் வைத்துக் கூட்டு விப்பார்கள். அது நடக்கும் வாரம் ஓர் தேசிய நாடக வாரமென்றே வழங்கப் படுமென்பதற் கையமில்லை. ஏனெனில் அவ் விழாவிற் கலந்து கொள்ள விரும்பும் நாடகாபினய சபைகள் யாவைக்கும் அபினயத்திற்கும் உபன்யாசங் களுக்கும் வேண்டிய வசதிக ளளிக்கப் படும்.

இவற்றிற் கெல்லாம் மிகுந்த செலவு பிடிக்கு மென்பது கண்கூடு. ஆகவே முதலாவதாகத் "தமிழ் நாடகக் கழக நிதி" யென்ற பெயருடன் கூடிய ஓர் நிதி வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நமது நாடகாபி மானிகளும், சபைகளும், நாடகக் கம்பெனிகளும் உண்மை ஊக்கத்துடன் முயற்சிப்பார்க ளாயின் அத்தகைய நிதி அதி சுலபமாக வெகு சீக்கிரத்தில் குவிந்துவிடும்.

இனியும் இக்கழகத்தைப் பற்றிய நடைமுறை விதிகளையும் மற்ற விவரங் களையும் அறிய விரும்பும் கலாபிமானிகள் அடியிற் குறிப்பிட்ட விலாசத்தாரிடம் கடிதப்போக்கு வரவு செய்து கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

1 ஸ்ரீ. B. சுப்பராயுலு நாயுடு, காரியதரிசி, சத்குண சபை, வண்ணார் பேட்டை, திருநெல்வேலி.

2 ஸ்ரீ. M. S. மணி B. A. காரியதரிசி, A. E. L. தியேட்டர், பாப்புலர் மார்ட், புத்தன்சந்தை, திருவனந்தபுரம்.



வைசிராய்
இர்வின் பிரபு.



சென்னை
கவர்னர் கோஷன் பிரபு.

இந்திய வைசிராய் இர்வின் பிரபு, ஆறுமாத காலம் ரஜாவில் இங்கிலாந்து செல்கிறார். அவருக்குப்பதிலாக சென்னை கவர்னரான கோஷன் பிரபு வைசிராயாக வேலை பார்ப்பார்.

# சித்ரவேலு.

(ஒரு சிறு கதை.)

ஸ்ரீமான் கோ. ஜெகந்நாதாச்சாரி யவர்கள்.

காலை ஆறுமணி யிருக்கும். சென்னையிலிருந்து வரும் போட்மெயில் தஞ்சை வந்து நின்றதுதான் தாமதம். புற்றீசல்கள் போல் ரயிலை காலி செய்து விட்டு கிளம்பி விட்டார்களையா ஜனங்கள்! எதற்கென்பீர்களோ? புத்தமுதே போற் போற்றப்படும் நற் காபியின் பொற்சுவையை உண்டு பரிமளிப்பதற்கே செம்பும் கூஜாவும் ஜோடி ஜோடியாகச் செல்வதும் குழாய் களண்டை ஒருவரோடொருவர் உராய்ந்து கொள்வதும் சிற்றுண்டிச் சாலையின் மாடிப்படிகளை இரண்டு மூன்றாகத் தாண்டுவதும் இச்சமயம் சர்வ சாதாரணமாய்க் காணலாம். ஆனால் எனக்கு மட்டும் இதிலொன்றும் பங்குமில்லை பகையுமில்லை. என் நண்பர் ஒருவர் கூறியது போல நான் "காபியில்லாக் கர்நாடக" மானதால் எனக்கு அத்தீஞ்சுவையின் மீது கவலையுமில்லை. அதன் பான மேன்மைகளிலுண்டாகும் மோக லாகிரியிலும் எனக்குப் பங்கில்லை. அதனால் சிறிது அவகாசமாகவே படுத்திருந்த பெஞ்சியின்மீதே கால்களை நீட்டி மெதுவாக எழுந்துட்கார்ந்தேன். முதலாவதாகக் கண்களை சிறிதளவு மூடிக் கடவுளை என் அகக்கண்ணில் துதித்தேன். கண்களைத் திறந்ததும் எதிரில் முறுக்கு மீசையும் கிறுக்குக் குடுமியும் கொண்ட ஒரு புமானின் காட்சி காணக்கிடைத்தது. விமிர்ந்து (விரைப்பாக என்றே சொல்லலாம்) மௌனமாக உட்கார்ந்திருந்த அவரது தேகத்தில் முகம் மட்டுமே சிறிது நேரத்திற்கொருதரம் இயந்திரங்களினவயவங்கள் சென்று வருவதுபோல வெகு கணக்காய் அங்குமிங்கும் திருப்பிக் கொண்டிருந்தது. "இவர் ஒரு கால் இராணுவப் படையைச் சேர்ந்தவரோ" என்று நான் எண்ணியவுடன் என் நெஞ்சம் பூரித்தது. இராணுவம் என்றால் எனக்கு வெகு பிரியம். ஆதலால் "அவரது பழக்கம் கிடைக்கத் தகுந்தது" என்றெண்ணிக் கொண்டு மெதுவாக "தாங்கள் ஊர் எவ்விடமோ?" என்றேன்.

அவர்—"எனது ஊர் மதுரை" என்றதும் இருவரும் ஸம்பாஷிக்க ஆரம்பித்தோம். நான்—"ஓஹோ! அங்கே தான் தற்சமயம் செல்கிறாப்போல் காண்கிறது. நான் செல்லுமூருக்கே தாங்களும் செல்வது வெகு நற்பொருத்தமும் ஸந்தோஷமுமாயிற்று."

அவர்—"மதுரையில் தங்களுக் கெவ்விடம்? இதென்ன! அதற்குள் விசில் செய்கிறானே!",

நான்—"ஆமாம்! இதோ ரயிலும் கிளம்பி விட்டது. மதுரை எனக்குப் பிறப்பிடம் தான். சிறு வயதிலேயே வீட்டிலிருந்து வெளியேறி விட்டேன். பல ஊர்களையும் சுற்றி தற்சமயம் ஜம்ஷத்பூரில் வேலையாயிருக்கிறேன். அநேக வருஷங்களுக்கப்பால் இப்பொழுது தான் இந்தப் பக்கம் வருகிறேன். மதுரையில் ஸமீபத்தில் ஏதாவது விசேஷங்களுண்டோ?"

அவர்—"ஸமீபத்தி லொன்றுமில்லை...... (சிறிது யோசித்து) சில வருஷங்கள் முந்தி நடந்த கேசவ மங்கலம் மைனர் விஷயமதான் தங்களுக்குத் தெரிந்திருக்குமே?"

நான்—"தெரியவராதே. நான்கு நாட்களுக்கு முந்தி ஜம்ஷத்பூரிலிருந்து கிளம்பி வருபவனுக்கு இந்த ஊர் ஸங்கதி எப்படித் தெரிய வரும்? அதென்ன "விஷயம்?" மைனர் பணக்காரரோ? அவருக்கு என்ன நேர்ந்தது? அந்தக் கதையைத் தான் தயவு செய்து கூறுங்களேன்! இனி இராயிலும் மதுரை வரை செல்ல வேண்டுமல்லவா?"

அவர்—(அவர் சிறிது கனைத்துக் கொண்டு) "பேபர்களில் கூட களேபரமாய் வந்திருந்த இது தங்களுக்குத் தெரியாதா? இந்த மைனர் கேசவ மங்கலத்தில் பெரிய ஜமீன்தாரின் ஒரே மகன். சில வருஷங்களுக்கு முன் பெரியவர் இறந்த பொழுது இவருக்கு சுமார் 20 வயதிருக்கலாம். அதுமுதல் வயதில் மைனர் செலவிலும் தாராளமாகக் கிளம்பி பொருள்களையும் சொத்துக்களையும் தாம்தூம் செய்ய ஆரம்பித்தார். மதுரையில் பிரஸித்தி பெற்ற தாசி மோஹனாங்கியிடம் போக்குவரவு வைத்துக் கொண்டார். நாளடைவில் அவள்—அவளைக் கட்டி மேய்க்க நம்மா லாகுமா?—இவரிடம் பற்ற ஆரம்பித்து மைனரை 2 லக்ஷத்துக்குக் கடனாளியாக்கி விட்டாள். இவரும் இன்னும் இழுத்த வழிக்கெல்லாம் செல்ல வாரம்பித்து மதுரையில் ஒரு பெரிய பங்களா கட்டி அவளுக்கு ஸன்மானம் செய்தார். ஆஹா! என்ன செலவு? என்ன சித்திர வேலை? அந்த பங்களாவின் அழகை இன்று முழுதும் பார்த்தாலும் சலிக்காது. மைனர் அவளிட்டது கட்டளை என்று அவள் பாதங்களிலேயே சரணமாகக் காத்துக் கிடந்தார். இன்னும் கொஞ்ச நாளில் மைனர் காலியாக்கப்படவேண்டிய தருணத்தில் திடீரென்று ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

"பாருங்கள் அந்த ஜகதம்பிகை மீனாக்ஷியம்மையின் அருள் சென்ற போக்கை! இப்படி யிருக்கையில் ஒருநாள்—அதாவது நான்கு வருஷங்களுக்கு முந்தி—திடீரென்று மோஹனாங்கிக்குக்கு விஷபேதிகண்டது. மைனரின் அதிர்ஷ்டமோ, அவளுக்குத்தான் துரதிர்ஷ்டமோ, அந்தக் கடவுளின் கருணையோ, சிலமணி நேரங்களில் மோஹனாங்கி ஆண்டவன் நிழலெய்தினள்; பரமபதம் போய்ச் சேர்ந்தாள்."

அதற்குள் நான் இடைமறுத்து "அடாடா! இவ்வளவு செலவழித்த மைனர் ஏங்கித் தவித் திருப்பாரே? என்றேன்.

அவர்—"பாக்கியையும் கேளுங்கள். இனித்தான் விசேஷ மிருக்கிறது. அந்த மோஹனாங்கி சாகும தறுவாயில் காணவந்த மைனரைக் கூட அருகிலழைத்து ஒரு இன்ப வார்த்தை பளியாது போய்விட்டாள். அவளது சொத்துக்கள் யாவும் திருச்சியிலிருந்த அவளது சுற்றத்தினள் சித்ரவேலு என்ற ஒருவளுக்குச் சேர்ந்து அவளும் மதுரையில் வந்து வசிக்கத் தொடங்கினாள். சித்ரவேலு என்பவள் வெகு அழகு. வெகு ஒய்யார கம்பீரம். ஆஹா!—மேலும் இளமையில்லவா?—நானே அநேக தடவைகளில் அவளைக்கண்டு பிரமித்துப் போயிருக்கிறேன். அழகில் இவளுக் கிடில்லாத மோஹனாங்கியையே சுற்றித் திரிந்த மைனர் இவளைச் சுற்றியலைந்து கெட்டுத் திரியக் கேட்கவேண்டுமா? அல்லும் பகலும் அவள் வீட்டு வாசற்புறத்தில் காப்பாகக் காத்துக் கிடந்தார். ஆனால் சித்ரவேலு எப்படி அழகிலோ அப்படி குணத்திலும் மாசிலாமணி என்றே சொல்லவேண்டும். பதினைந்து வயதாகு முன்னரே [illegible] இதிகாச புராணங்கள் யாவற்றையும் கற்றுத்தேர்ந்து வித்யா ரமணி எனத்தேறியிருந்தாள். ஸமஸ்கிருதத்திலோ அபார ஞானம். எப்பொழுதும் புத்தகமும் கையுமாகவே வீற்றிருப்பாள். அப்படிப்பட்டவள் இந்தக் காமாதுரனரது சேஷ்டைகளையும் பல்லிளிப்புக்களையும் கண்டு தந்திரமாய் ஒரு யுக்தி செய்தாள். ஒரு நாள் அவரிடம் மெதுவாக "மைனரவர்கள் சொல்வதற்கு நான் என்றுவது தடை சொன்னதுண்டா? எனக்கு இதை விட சுவர்க்க போகம் எது? கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா? ஆனால் ஒன்று மட்டும் செய்ய வேண்டும். நான் புஷ்பவதியாகி இரண்டு மாதங்கள் தானாகின்றன. எங்கள் குடும்பத்தில் தலை முறை தலைமுறையாக அனுஷ்டித்து வரும் விரதப்படி இன்னும் 10 மாதங்களுக்கு உங்கள் போன்றவர்களை ஏறெடுத்துப் பார்க்கக்கூடாது. அதன் முடிவில் சுகித்திருக்க நமக்கு எவ்வித ஆக்ஷேபணையுமில்லை. கிணற்று ஜலத்துக்கு வெள்ளம் வந்துவிடுமா? அதுவரைக்கும் பொறுத்துக் கொண்டு தங்களிஷ்டப்படி இங்கேயே யிருங்கள்" என்றாள்.

உடனே மைனர் வெகு சந்துஷ்டியுடன்... "அப்படியா ஸங்கதி! நீ இதுவரை என்னிடம் தெரிவிக்கவில்லையே? உனக்கு அந்த விரதத்துக்கு என்ன என்ன தேவையோ சொல். இப்பொழுதே வரவழைத்து விடுகிறேன்." என்றார்.

சித்ரவேலு...."இங்கிருப்பவை எல்லாம் தங்களுடையதுதானே! தங்களது திவ்ய கர்ணாம்ருத தரிசனம் தான் தேவை. அதைக் கொடுத்தால் எனக்கு பேரின்பம்.....இன்னொன்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாளை முதல் ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரையில் என்னுடன் கூடவே இருந்து என்னை ஸகல விதத்திலும் ஸந்தோஷப் படுத்துவதாக வாக்களியுங்கள்! அது ஒன்றே போதும்" என்றனள். தலைமுதல் கால்வரையில் அவளது கண்கொள்ளாத கட்டழகைக் கண்டு சொக்கித் தவிக்கும் மைனர் முன்பின் யோசிப்பாரா? அவள் சொல்லி வாய் மூடுமுன் சத்தியம் செய்துகொடுத்து மறுநாட் காலை முதல் அனுஷ்டிக்கவும் தொடங்கி விட்டார்.

ஆனால் சித்ரவேலுவோ மஹா ஞானியென்றே சொல்லவேண்டும். இத்தனை [illegible] அவளைக் கண்டவர் [illegible]

நிறைய வெள்ளி நாணயங்களும், மற்ற ஐந்து ஜாடிகளில் தங்கச் சவரன்களும் நிறைந்திருந்தன! வெள்ளிப் பெட்டியைத் திறந்தார்கள். ஆ! கண் கூசுகிறது! நேர்த்தியாய்ப் பட்டை தீர்க்கப்பட்ட பல வைரக்கற்கள் அப் பெட்டிக்குள் ஜொலித்தன! பெரியதோர் முத்துமாலை கண்ணைப் பறித்தது! ஆ! ஒவ்வொரு முத்தும் எவ்வளவு பெரியதாயிருக்கிறது! எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது! கடைசியாக, விலையுயர்ந்த, கல்லிழைத்த பதக்கம் ஒன்று நக்ஷத்திரம் போல் பிரகாசிக்கிறது! இந்தப் பதக்கம் முன் ஒரு காலத்தில் அரசாண்டிருந்த டில்லி சக்கரவர்த்தியின் மகுடத்தை அலங்கரித்திருக்க வேண்டும். இந்த அழகிய, பெரிய விலையுயர்ந்த முத்துமாலை டில்லி இராணியின் கழுத்தையும் மார்பையும் அலங்கரித்திருக்க வேண்டும்; விலையுயர்ந்த வைரக்கற்கள், இராணிக்கு ஏதோ ஆபரணம் செய்வதற்காகச் சேகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இச் செல்வப் புதையலைக் கண்ணாரக் கண்ட சிவாஜியும் நட்டாஜியும் பவானி தேவியின் திருவருளைப் புகழ்ந்து துதித்தார்கள். சிவாஜி, மகிழ்ச்சியுடன் நட்டாஜியைப் பார்த்து, "அன்பரே! இவைகளை வெறும் பொன்னும் வெள்ளியும், முத்தும் வைரமும் என்று நினைக்க வேண்டாம். இவைகளின் மதிப்பு எவ்வளவோ அதைவிடப் பல மடங்கு மதிப்பிடக் கூடிய பொருள்கள் இச் செல்வப் புதையலில் அடங்கியிருக்கின்றன. அதாவது நமது தேசியச் சேனைகளுக்கு ஆயுதங்களும், எதிரிகளால் பிடிக்கமுடியாத பல முள்ள கோட்டைகளும், மகாராட்டிர தேசத்தின் சுதந்தரமும் சுய ஆட்சியும் இந்த நகைகளிலும் பணத்திலும் அடங்கியிருக்கின்றன," என்று சொன்னார்.

"மகாராட்டிர தேசத்தின் சுதந்தர விஷயத்தில் பவானியம்மனின் கருணையும் இருக்கிறது என்று நான் இப்பொழுது நம்புகிறேன்" என்றான் நட்டாஜி.

பிறகு, சிவாஜி கோட்டையிலுள்ள பொற்கொல்லனை அழைப்பித்தார். இப் பொற்கொல்லன், நகைகளை நோட்டம் பார்த்துச் சரியான மதிப்புச் சொல்ல வல்ல ஒரு நகை வியாபாரி. இந்த மனிதன் வந்து, ஏராளமான பொன் வெள்ளி நாணயங்களைக் கண்டு ஆச்சரியத்தினால் திகைப்படைந்து விட்டான். வெள்ளிப் பெட்டியைத் திறந்து காட்டியபோது, அதிலுள்ள விலையுயர்ந்த பொருள்களைக் கண்டு மேலும் இறும்பூதடைந்து பேச நாவெழாமல் சற்று நேரங்கழிந்த பிறகே அவன் தன் நிலைக்கு வந்து பேசும் சக்தியடைந்தான். சிவாஜி, இச் செல்வப் புதையலின் சரியான மதிப்பை யறிந்து சொல்லும்படி இவ் வியாபாரியைக் கேட்டார். அவன் ஒவ்வொன்றையும் நிதானமாக நோட்டம் பார்த்து தனித் தனியே 'புள்ளி போட்டான்.' வைரக் கல்லிழைத்த பதக்கமும், முத்து மாலையும் ஒவ்வொன்றும் தனித் தனியே ஒரு லக்ஷ ரூபாய்க்குமேல் மதிப்பிடப் பட்டன. மிகுதியாகவுள்ள வைரக்கற்களும் தங்க வெள்ளி நாணயங்களும் ஒன்று சேர்ந்து பத்து லக்ஷத்துக்குமேல் மதிப்பிடப் பட்டது. மதிப்பை அறிந்து கொண்ட பிறகு, சிவாஜி நகை வியாபாரியை யனுப்பிவிட்டு, முந்திய நாள் தன்னிடம் வர்த்தக விஷயமாய் வந்துபோன ஐரோப்பிய வர்த்தகனை அழைப்பித்தார். இந்த போர்ச்சுகேசிய வர்த்தகனும் நகைகளை நோட்டம் பார்ப்பதில் தேர்ந்தவனாகக் காணப்பட்டான். இவன், முத்துமாலை, பதக்கம், வைரக்கற்கள் இவைகளை ஆசையோடு நோக்கினன்.

சிவாஜி, தாம் ஆயுதங்களை வாங்க விரும்புவதாகவும், ஆனால், அவைகளை நேரில் போய்ப் பார்த்து திருப்தியடைந்த பிறகுதான் முடிவாக நிச்சயிக்கப்படும் என்றும் சொல்லி, ஆயுதங்களை வாங்குவதாக விருந்தால், அவற்றின் கிரயத்தை பணமாகப் பெற்றுக் கொள்ள விருப்பமா, அல்லது நகைகளாகப் பெற்றுக் கொள்ள விருப்பமா என்று அவனைக் கேட்டார். தந்திரசாலியான அந்த ஐரோப்பியன் ஆயுதங்களின் விலைக்கு ஈடாக நகைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவதாகவும், ஆயுதங்கள் ஒன்றரை லக்ஷ ரூபாய் மதிப்புள்ளவை என்றும், வைரப் பதக்கம் அரை லக்ஷம் பெறும் என்று தான் மதிப்பதாகவும், அரை லக்ஷ ரூபாய்க்கு ஈடாக அந்த வைரப் பதக்கத்தைத் தான் எடுத்துக் கொள்வதாகவும் சிவாஜிக்குச் சொன்னான். ஒரு லக்ஷத்துக்கு மேல் மதிப்புள்ள வைரப்பதக்கத்தை, அரை லக்ஷம் என்று மதிப்பிட்டுச் சொல்லும் இவனுடைய மோசக் கருத்தைக் கண்டு சிவாஜி, சிரித்தார். சிவாஜி, அந்த நகையின் சரியான மதிப்பை யறிந்திருக்கிறார் என்று பின்னால் தெரிந்து கொண்ட போர்ச்சுகேசியன், வியாபாரத் தோரணையாக சில நேரம் வாதாடிக் கடைசியாக அப் பதக்கத்தை ஒரு லக்ஷ ரூபாய்க்கு ஈடாகப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தான். ஆயுதங்களின் விலையில் ஒரு லக்ஷம் போக மீதி அரை லக்ஷத்திற்கு ஈடாக மிகுதியாகவுள்ள வைரக் கற்களைப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தான். பிறகு, ஆயுதங்களைப் பார்வையிடத் தாம் அடுத்த நாள் காலையில் புறப்படுவதாகச் சிவாஜி அவனுக்குத் தெரிவித்து அவனை அனுப்பிவிட்டார்.



அவன் போன பிறகு, முந்திய நாள் தம்மிடம் வந்து முறையிட்டுக் கொண்ட சிற்பியை அழைப்பித்துத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாக்கித் தொகை முழுவதையும் கொடுத்தார். அன்றியும், ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு மாதச் சம்பளத்தை முன் பணமாகக் கொடுத்தார். கடைசியாகத் தோரணக் கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள "மொர்பூத்" மலைமேல் "ராஜ் காட்" என்னும் ஒரு புது கோட்டையைக் கட்டும்படி அச்சிற்பிக்குக் கட்டளையிட்டு அதற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்தார். இவைகளை எல்லாம் செய்தான பிறகு, சிவாஜி நட்டாஜியோடு, இனி நடக்க வேண்டிய வேலைகளைப் பற்றி நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

---

## சர்வசமய ஸமரஸ மகா சபை

சென்ற ஜனவரி 27-ம் 28-தேதிகளில் கவிச் சக்கரவர்த்தி ரவீந்திர நாத தாகூர் தலைமையில் சர்வசமய ஸமரஸ மகா சங்கம் கூடிற்று. படிப்பிலும், கீர்த்தியிலும், தீர்க்கதரிசன நுட்பத்திலும், உலகத்தில் சிறந்து விளங்குபவர் மஹரிஷி ரவீந்திர நாத தாகூரே யாவர். மதங்கள் பேரால் மட்டுக்கடங்காத அட்டூழியங்களும் அட்டகாசங்களும்—(புத்தர் மஹாவீரர், சங்கரர், ராமானுஜர், சைதன்யர் முதலிய மதாச்சாரியர்கள் அவதரித்து ஒற்றுமை யுண்டுபண்ணிய நமது நாட்டில்)—இன்று கண்மூடித்தனமாய் நடந்து வருகின்றன. இந்த மகாசங்கம் மூலம் பலதிறப்பட்ட மதஸ்தருக்குள் பரஸ்பர அன்பும் ஒற்றுமையும் பெருகுமென்று நம்புகிறோம். இத் தகைய ஒரு ஸமரஸ மகாசங்கம் கூட்ட வேண்டுமென்ற எண்ணம் ஆதியில் அமெரிக்காவில்தான் உதயமானதாகச் சொல்லப்படுகிறது 1893-ல் சிக்ககோ நகரத்தில் கூடிய முதல் சர்வசமய ஸமரஸ மகா நாட்டுக்கு ஸ்வாமி விவேகாநந்தர் விஜயம்செய்து "இந்து மதந்தான் புராதன மதம், ஆசியாக்கண்டமே மதாச்சாரியர்களின் இருப்பிடம், இந்தியா ஒரு அந்தஸ்துள்ளநாடு, இந்தியர்கள் மேல் நாட்டாருக்கு எவ்விஷயத்திலும் எள்ளளவும் குறைந்தவர்கள் அல்ல." என்பனவாதிய உண்மைகளை விளக்கினார்.

ஆதிகாலத்திலும் இம்மாதிரி மகாசங்கம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் பிராமணர்களைத் தவிர இதரர்களுக்கு அந்த மகா சங்கத்தில் பிரவேசனம் அளிக்கப்படவில்லை. கி. மு. ஆறுவது நூற்றாண்டில் புத்த மதம் பரவத் தொடங்கியதும் பிராமணர்தான் மகா சங்கங்களில் பங்கு கொள்ளுதற்கு உரியவர் என்ற எண்ணம் தொலைந்தது, முதல் சர்வசமய ஸமரஸசங்கம் கி. மு. 543-ல் பீஹார் மாகாணத்திலுள்ள ராஜக்கிரஹ நகரத்தில் பௌத்தர்களால் கூட்டுவிக்கப்பட்டது. அச்சங்கத்துக்கு அஜாதசத்ரு என்ற அரசர் தலைமை வகித்தார். அந்தமகா சங்கத்தில் சர்வஜனங்களுக்கும் பிரவேசனம் அளிக்கப்பட்டது. அப்பால் அடுத்த கூட்டம் கி. மு. 443-ல் வைசாலி என்ற முசபர்பூரில் கூடியிருப்பதாகத் தெரிகிறது. மூன்றாவது கூட்டம் கி. மு. 225-ல் அசோகச் சக்கரவர்த்தி தலைமையில் பாடலிபுரத்தில் கூடிற்று. நான்காவது கூட்டம் பாஞ்சால நாட்டில் ஜலந்தர் நகரத்தில் கானிஷ்கா சக்கரவர்த்தி தலைமையில் கி. பி. 78-ல் கூடியது. ஏழாவது நூற்றாண்டில், கன்னோசி நாட்[illegible]ன ஹர்ஷவர்த்தன் ஐந்து வருஷத்[illegible]கு ஒருமுறை இத்தகைய ஸமரஸ [illegible]கங்கள் கூட்டுவித்து வந்ததாகவும் தெரிகிறது.

கொள்ளும் ரூப லாவண்யமும் ஸரஸ்வதிக்கீடான கலாஞானமும் அதி சாமர்த்தியமும் எந்த முருகனின் கிருபையோ? எந்த ஆண்டவனின் அருளோ! அவள் தாசி குலத்தையே வேருடன் அழிக்க வந்த புண்ணியவதி போலிருக்கிறது. அதை நமது மைனர் அறிவாரா?

சித்ரவேலு காலையிலெழுந்ததும் ஸ்நானம் செய்து வீட்டிலேயே ஒரு அறையில் பூஜை நடத்தி பிறகு உணவருந்தச் செல்லுவாள். அருமையான சாஸ்திர கிரந்தங்களும் உயர்ந்த வைதீக நூல்களும் படித்து வருவாள். அது முதல் மைனருக்கும் காலையில் ஸ்நானம் தொடங்கியது. பூஜை முதல் விடாது அனவரதமும் அவளருகிலேயே யிருக்க வாரம்பித்தார். படிக்கும் நேரங்களில் சித்ரவேலு ஒவ்வொன்றையும் இவருக்கு விளங்க உரைத்து இவரைக் கூடவே வைத்துக்கொண்டு வாசித்து வந்தாள். முதலில் மைனருக்கு இது பெருத்த வெறுப்பாகவும் "ஓடி விடுவதே நலம்" என்றும் தோன்றிற்றும். ஆனால் அங்கு நடுவில் தாண்டவமாடுவது அவளது மனமோகன சிங்கார சொரூப சொக்குப் பொடி யல்லவா! முதலில் வேண்டா வெறுப்பாய்க் கற்கத் தொடங்கினர். நாளடைவில் சிறிது சிரத்தை உண்டாகி அவளுடன் தார்க்கிகமான கேள்விகள் கேட்க வாரம்பித்தார். சித்ரவேலு "மெதுவாக மைனரை வழிக்குக் கொண்டுவந்து விடலாம்." என்றெண்ணி அகமகிழ்ந்து மைனருக்கும் தனக்கும் ஒவ்வொரு நாளும் ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்து வருவதைக் கட்டாயமாக்கிக் கொண்டனள். மைனருக்கு வரவர சித்ரவேலுவின் பயித்தியம் சிறிது சிறிதாக நீங்கி தன் சுயநிலை உணரலானர். மேலும் அப்பொழுது வித்யாவந்தராகி விட்டாரல்லவா? இதிகாச புராணங்களினின்றும் பல திருஷ்டாந்தங்களில் தன் போன்றவர் அடைந்த கதியை உணர்ந்திருப்பாரல்லவா? இம்மாதிரி 9 மாதங்கள் சித்ரவேலு சகவாஸம் செய்துவிட்டு ஒரு நாள் திடீரென்று காணமற் போய் விட்டார். பிறகு விசாரித்ததில் அவர் கட்டின மனைவி வாழ்ந்த தனது சொந்த வீட்டுக்கே சென்று விட்டதாகத் தெரிய வந்தது. சித்ரவேலு விவரம் அறிந்ததும் அவரை வரும்படி ஆள்மூலம் சொல்லி யனுப்பினள். அவர் "இதோ வருகிறேன்" "நாளை வருகிறேன்" என சாக்குப் போக்குகள் சொல்லி விட்டு வாராதிருந்துவிட்டார். சித்ரவேலு "ஆஹா! மனிதன் ஸ்வ புத்தியை இவ்வளவு சீக்கிரம் அடைந்து விடுவானா" என்று வியந்து பிரமித்து மைனரால் மோஹனாங்கிக்குக் கிடைத்திருந்த லக்ஷக் கணக்கான சொத்துக்களையும் தேவேந்திர மாளிகை போன்ற அப் பங்களாவையும் அவர் பேருக்கே இனாம் சாஸநம் செய்து பத்திரங்களை அவருக் கனுப்பி விட்டாள். கொஞ்ச நாளில் மதுரையிலுள்ள தனது காரியங்களை ஒழுங்கு படுத்திவிட்டு திருச்சிக்கே வந்து விட்டாள். வரும்பொழுது மைனருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி "இனி எப்பொழுதாவது தங்களுக்கு மைனர் லீலைகளின் பிரியம் ஏற்பட்டால் திருச்சிக்கு வந்து போங்கள்" என்றும் எழுதி யனுப்பிவிட்டு திருச்சி வந்துவிட்டாளாம். மைனர் அது முதல் ஒழுங்கு தவறாமல் ஒழுங்காக ஜமீனையும் பாதுகாத்து வருகிறார்.

இது நடந்த பிறகில் சித்ரவேலுவைக் கொண்டாடிப் புகழாதவர்கள் இல்லை என்றே கூறலாம். இதை விரிவாகப் போடாத பேபர்கள் சொல்பம். இது தானையா மைனர் கதை! அப் புண்ணியவதியின்மீது புகழ் தங்குக! என்று கூறி முடித்தார். இக் கதையை விடாது கேட்டுக் கொண்டிருந்த பக்கத்து பெஞ்சியிலிருந்தவர்—"பார்த்தீர்களா! வித்தையின் பலனை! ஆனால் அந்தப் புண்ணியவதி மைனரது மனதைத் திருப்பியதோடு நில்லாமல் மோஹனாங்கியின் லக்ஷக் கணக்கான சொத்துக்களையுமா திருப்பவேண்டும்! நானயிருந்தால் ஒரு பைசாகூட கொடுத்திருக்க மாட்டேன்" என்று நகைக்க, வண்டியிலிருந்த எல்லோரும் கொல்லென்று நகைத்தனர். அதற்குள் நான் குதூஹலமாகக் கிளம்பி "உண்மை வித்யா விஹீனர்களான நமக்கு அப்படித்தான் தோன்றும். ஸரஸ்வதியின் பரிபூரண கடாக்ஷம் நிரம்பப் பெற்றவர்களுக்கு செல்வம் எம் மாத்திரம்?—இன்னென்று பாருங்கள். இந்திய குடும்பங்களின் அடிப்படையாக விளங்கும் நமது மாதர்களின் கல்வி பிரச்னை எத்துணை அவசியம் என்பதையும் எத்துணை தூரம் ப[illegible]னளிக்க வல்ல தென்பதையும் இக்கதை[illegible] எவ்வளவு புனிதமாகக் காண்கிறோம் பாருங்கள்" என்றேன்.

இதற்குள் வண்டி திருச்சிப் பிளாட்பாரம் வந்து நின்றது! என்னெதிரி



லிருந்த நண்பர் மெதுவாக ஒரு ரயில் பையை எடுத்துக் கொண்டு எதிர்பாரா விதமாகக் கிளம்பினர். நான் இது திருச்சியல்லவா! ஏன் கிளம்புகிறீர்கள்? என்று கையமர்த்த அவர் மெதுவாகப் புன்னகை புரிந்து நான் மதுரையல்ல. இவ்விடம்தான். நீங்கள் பொழுதைப் போக்கக் கதைகேட்ட படியால் இதை நமதுகதை யாக விட்டு வைத்தேன். மன்னித்துக் கொள்ள வேண்டும். தாங்கள் இனி எப்பொழுதாவது திருச்சி வந்தால் கோட்டையில் நாவலாசிரியர் நவ விசித்ரம் பிள்ளை என்று விசாரித்துக் கொண்டு எனதில்லத்துக்கு அவசியம் வாருங்கள்" என்று மிகவும் பணிந்து வேண்டிக் கொண்டார். நான் அளவற்ற பிரமிப்பும்" ஸந்தோஷமுமடைந்து "ரயில் சிநேகம் பொடி சிநேகம் படேபடே சிநேகம்" என்று சொல்வார்கள். அது தங்கள் [illegible] விஷயத்தில் மெய்யாகிவிட்டது. நான் அவசியம் தங்கள் வீட்டுக்கு வருகின்றேன்—ஆனால் ஒரு ஸந்தேகம். தஞ்சையில் நான் கேட்கையில் மதுரைக்குச் செல்வதாகக் கூறினீர்களே? எனது ஊர் தங்களுக் கெப்படித் தெரியும்? என்று உசாவினேன் அதற்கவர் பேசாமல் தனது குடையின் நுனியால் என் பெட்டியின் மூடியைக் காட்டிவிட்டு ப்ளாட்பாரத்தி லிறங்கி விட்டார். ஓகோ கோ! நான் அறவே மறந்த ஸங்கதி அங்கு அழகான பெரிய எழுத்துக் களிலிருக்கும் எனது ஊரும் பெயரும்.

---

## ஜல பானம்

ஜலமும் ஓர் ஆகார பதார்த்தமெனக் கருதப்படுவதில்லை. ஆனால், சரீரத்திற்கு ஊட்டத்தைக் கொடுக்கக்கூடிய முக்கியமான பதார்த்தங்களுள் அஃது ஒன்றாக இருக்கிறது. சரீரத்தின் பளுவிலும், பருமனிலும் ஆறில் ஐந்து பாகமானது ஜலமயமான தென்பதைத் தெரிந்துகொள்ளின், இதன் உண்மை புலப்படும். சரீரத்தின் எலும்புகளின் அமைப்பில் சேர்ந்துள்ள இதர வஸ்துக்கள் கிரோயின், அல்லது டிராம், அல்லது பவுண்டுகளாக இருந்து வருகின்றன. இவைகள் பல மடங்கு ஜலத்துடன் சேர்ந்து மனித சரீரத்தை உருப்படுத்துகின்றன.

சரீரம் தனக்கு ஏற்பட்டுள்ள வேலைகளைச் சரியாகச் செய்து வருவதற்கு ஜலம் முக்கியமானது. இரத்தம், நிணநீர், ஜீரணரஸம் முதலிய ரஸங்கள் பெரும்பாலும் ஜலமயமாகவே இருக்கின்றன. போதியவளவு ஜலம் சரீரத்தில் இருந்தால்தான் எல்லா உறுப்புக்களும் தத்தம் வேலையைச் செய்ய முடியும். எவ்விதம் மீனானது ஜலத்திலேயே ஜீவித்திருக்க முடியுமோ, அவ்விதமே சரீரத்திலுள்ள தசைகளுக்கும் ஜலம் அவசியமாம்.

சரீரமானது ஆரோக்கியமாக இருந்து வருவதற்கு எவ்விதம் ஆற்றில் ஜலம் போகிறதோ அவ்விதமே எல்லாத் தசைகளின் வழியாகவும் ஜலம் சென்று அவைகளைச் சுத்தம் செய்யவேண்டும். இவ்விதம் தான் தசைகளில் விஷ ஸம்பந்தமான வஸ்துக்கள் சேர்ந்திராமல் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. இதனால்தான் அவைகளுடைய சக்தி பாதுகாக்கப்படுகிறது.

உஷ்ண தேசத்தில் வசிக்கும் ஒவ்வொருவரும் பகலில் ஆகார வேளைகளுக் கிடையில் எட்டுக் கோப்பை ஜலமாவது குடிக்கவேண்டும். ஸூப்புகள், பழரஸங்கள், பால், ஜலப்பிராயமான மரக்கறிகள் இவைகளைச் சேர்த்துக் கொள்ளுவதும் இந்த அளவை இட்டு நிரப்புவதற்கு உபயோகமாக இருக்கின்றன.

ஆனால், சில விஷயங்களில் முன் ஜாக்கிரதையாக இருந்துவர வேண்டும். ஒரே காலத்தில் அதிக அளவு ஜலத்தைக் குடித்துவிடக் கூடாது. குடிக்கும் ஜலமானது அதிக உஷ்ணமாகவாவது, அதிகக் குளிர்ச்சியாகவாவது இருக்கக் கூடாது. ஆகார வேளைகளில் அதிக ஜலத்தைக் குடிப்பதால் ஆகார பதார்த்தங்கள் ஜீரணமாகாமலே சரீரத்திற்குள் போய்ச் சேர்ந்துவிடக் கூடுமாகையால் அந்த வேளைகளில் அதிக ஜலத்தைக் குடிக்கக் கூடாது. ஆகார வேளையில் உறிஞ்சிக் குடிப்பதற்கு ஒரு கோப்பை ஜலம் போதுமானது. குறைவாக ஜலத்தைச் சேர்த்துக் கொண்டு வந்தால் மனிதர்களுடைய சரீரத்திலுள்ள சாக்கடை அடைத்துக் கொண்டு சரீரத்தில் விஷம் ஊறுவதற்கு இட மேற்படும்.

ஆ. தீ.

கடவுள் உருவங்கள் மீது ஈக்கள் மொய்க்கின்றன. பல்லி, எலிகள் ஓடுகின்றன. இவைகளுக்[illegible]கெல்லாம் [illegible] இறைவனைத் தொடும் உரிமை யிருக்கும் போது மனித உடல் தாங்கியுள்ள ஒருவனுக்குத் தானு தடை? சாதியார் கொடுமை என்னே! என்னே!'' என்று மனமுருகிக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

ஆகவே சாதிப்பேய் உறையும் ஆலயங்கள் வேண்டாம்! வேண்டாம்! ஜாதிப் பிரிவினையற்ற, சர்வ ஜனங்களுக்கும் சொந்தமான கடவுளுறையும் ஆலயமே நமக்குத் தேவை. சாதிப்பேய் தாண்டவமாடும் தற்கால ஆலயங்களை கடவுளுறையும் ஆலய மாக்க ஆஸ்திக சங்கத்தார் முயல்வார்களா? அவ்வாறு செய்ய அவர்கள் முயன்றால் சுயமரியாதைச் சங்கத்தாரை அவர்கள் அஞ்ச வேண்டுவ தில்லை. ஏனெனில் தென்னாட்டு ஆலயங்கள் கடவுளுறையும் ஆலயங்கள் ஆகும்போது சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம் பூர்த்தியாய் விடுமாதலின் அது தானாகவே மறைந்துவிடும். பின்னர் அவர்கள் எவ்வளவுதான் ஆர்ப்பாட்டம் செய்யினும், மக்கள் அவர்கள் வார்த்தைக்குச் செவி கொடுக்கார். ஆஸ்திக சங்கத்தாரே! இவ்விஷயத்தை உற்று நோக்குமின்.

* * *

**கஷ்ட காலம்:**—தேசியக் கோரிக்கையை இந்திய சர்க்கார் கட்டுப்பாடாக அலக்ஷியஞ் செய்து வருவதைக் கண்டிக்கும் பொருட்டு, இந்திய சர்க்கார் நிர்வாக சபை அங்கத்தினர் பிரயாணச் செலவுக்காக இந்திய சர்க்கார் வரவுசெலவு திட்டத்தில் போடப்பட்டிருக்கும் தொகையை ஒரு ரூபாயாகக் குறைத்துவிட வேண்டுமென்று பண்டித மதிலால் நேரு கொண்டுவந்த திருத்தப் பிரேரணை நிறைவேறி விட்டது மகிழத்தக்கதாயினும், வாதமத்தியில் நிகழ்ந்த சம்பவங்கள், நிலைமையை ஆபாச மாக்கிவிட்டதை எண்ணி தேசாபிமானம் கொண்டவர்கள் வருந்தாமல் இருக்க முடியாது. ஒப்புயர்வற்ற ராஜ்ய தந்திரியான பண்டித மதிலால்ஜி தமது சர்வகட்சி மகாநாட்டு சுயராஜ்யத் திட்டத்தைப் பற்றிப் பேசாமலே, தமது வாதத்தை வெகு அழகாகவும், கம்பீரமாகவும் வீராவேசத் துடனும் நடத்தினராயினும், வாதத்தில் கலந்து கொண்ட ஏனைய அங்கத்தினர்கள், நேரு யாதாஸ்தை வலிந்திழுத்து வாதத்தில் புகுத்தி, அதன் மகிமையைச் சீர்குலைத்து விட்டார்கள். திரு. ஜின்னா, பண்டித நேருவின் திருத்தப் பிரேரணையை ஆதரித்தனராயினும், நேரு யாதஸ்தை முஸ்லீம்கள் ஆதரிக்க வில்லையென்று வெளிப்படையாகக் கூறிவிட்டார். இந்திய சட்டசபைப் உதவித் தலைவரான மௌல்வி முகமது யாக்குப்பும் நேரு யாதாஸ்தை முஸ்லீம்கள் ஆதரிக்கவில்லை யென்று சொன்னார். முகமதாபாத் மகாராஜா, டாக்டர் அன்சாரி, சர் ஆலி இமாம் முதலிய பிரபல முஸ்லீம்கள் நேரு யாதஸ்தை ஆதரித்திருக்கிறார்கள் என்று பண்டித மாளவியா கூறியபோது, அந்தத் தலைவர்கள் முஸ்லீம்களின் பிரதிநிதிகள் அல்லவென்று ஸ்ரீ. ஷாபி தாண்டி மறுத்தார். இவை யாவற்றையும் விட ஸ்ரீ. கபிருதீன் அகம்மது சட்டசபையில் போட்ட ஒரு வெடிகுண்டுதான் யாவரையும் திடுக்கிடச்செய்து விட்டது. பெயர்பெற்ற முஸ்லீம் பெரியாரான மௌலானா அப்தல்கலம் அசத், நேரு திட்டத்தை ஆதரிப்பதற்காக மாதா மாதம் 600 ரூபா பிரதிபலன் பெறுகிறார் என்று ஸ்ரீ. அகமது கூறியது சபையோரைத் தூக்கி வாரிப் போட்டது போலிருந்தது.

உலகத்திலே குற்றங் குறையில்லாத எதையும் பார்க்க முடியாது. கடவுள் ஒருவர் தான் குற்றமற்ற பூரணர். ஆகவே மனித நிர்மிதமான யாவும் குற்றம் குறை உடையனவாகவே இருக்கும். நேரு யாதஸ்து ஒப்புயர் வில்லாத உத்தமத் திட்டமென பண்டித நேரு கூடக் கூறவில்லை. அதைப் பற்றிய அபிப்பிராய வித்தியாசங்கள் பல இருப்பினும் பெரும் பான்மையான இந்தியத் தலைவர்கள் அதை ஆதரிப்பதால் அதை தேசியக் கோரிக்கையாக மதிக்கலாம் என்பதே நேரு யாதாஸ்தை ஆதரிப்பவர்களின் வாதம். ஆனால், நேரு யாதாஸ்து உபயோகமற்றது, பொதுஜன ஆதரவு பொருந்தது என்று தூற்ற அதிகார வர்க்கத்தினர் பகீரதப் பிரயத்தினம் செய்து வருகின்றனர். அன்னாருக்குத் துணை செய்ய, இந்திய சட்டசபை மெம்பர்களே முன் வந்திருப்பது இந்தியாவின் துரதிர்ஷ்டமே யாகும். முஸ்லீம்களைக் குறைகூறவும் இடமில்லை. இந்தியச் சட்டசபையில் நான்கோ ஐந்தோ ஸ்தானம் ஜாஸ்தியாகக் கொடுக்க ஹிந்துக்கள் தயாரில்லா திருக்கையில் முஸ்லீம்கள் ஹிந்துக்களை எவ்வாறு நம்புவார்கள். வடநாட்டில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையும் தென்னாட்டில் பிராமணர் பிராமண ரல்லாதார் ஒற்றுமையும் உண்டாவது எந்நாளோ?



* * *

**வாழ்த்து:**—இவ் வருஷத்தில் புதுவருஷ கௌரவப் பட்டம் பெற்ற ராஜா சர். அண்ணாமலை செட்டியார், ஜஸ்டிஸ் சர் ராமேசம், திவான்பகதூர் சிவஞான முதலியார், திவான் பகதூர் சீதாராமய்யா, ராவ்பகதூர் மரு. சுப்பையா செட்டியார், ராவ்பகதூர் கிருஷ்ணன் நாயர், ராவ்பகதூர் சின்னத்தம்பி பிள்ளை, ராவ் சாகிப் எம். ராஜம் நாயுடு, ராவ் சாகிப் ஆர். கிருஷ்ணய்யர், ராவ் சாகிப் ஜி. கணபதி சாஸ்திரி முதலியோருக்கு நாம் மனமார வாழ்த்துக் கூறுகிறோம்.

* * *

**ராஜா சர். அண்ணாமலை செட்டியார்:**—தமிழ் நாட்டுத்தனிப் பெரும் வள்ளலாகியவர். அண்ணாமலை செட்டியாரவர்களுக்கு பாரம்பரிய பாத்தியதையோடு "ராஜா" பட்டம்



ராஜா ஸர், அண்ணாமலை செட்டியார்.

[illegible] தென்னாட்டார்க்கெல்லாம் மிக மகிழ்ச்சி யளிக்கத்தக்கதாகும்.


ராஜா அண்ணாமலை செய்துள்ள தருமங்கள் பல நிறப்பட்டனவாகும். சென்னையில் பிரபலம் பெற்று விளங்கும் "வில்லிங்டன்" ராஜா அண்ணாமலையின் பொருளுதவியினாலேயே நடை பெற்று வருகிறது. அவரது ஜனன ஸ்தலமான கானாடு காத்தானில் ஒரு பிரம்மாண்டமான ஆஸ்பத்திரியும் ஸ்தாபித்து நடத்திவருகிறார். சிதம்பரத்தில் ஒரு சர்வ கலாசங்கம் ஸ்தாபிப்பதற்கு 25 லக்ஷ ரூபா கொடுத்தருளியதைப் பற்றி ஏற்கனவே "லக்ஷ்மி"யில் நாம் எழுதி யுள்ளோம். உலகத்திலே வாசாப் பிரசங்க மாரி பொழியும் தலைவர்கள் ஏராளமாயுண்டு. ராஜா அண்ணாமலையைப் போல் பொன்மாரி பொழியும் தலைவர்கள் தான் பூச்சியம். இயல்பாகவே தரும சீலர்களான தனவணிக மரபினருள் காலத்துக்கேற்ற தருமம் செய்து புகழ் பெற்ற ராஜா அண்ணாமலை செட்டியார் சர்வ பாக்கிய சம்பன்னராய் இன்னும் பல்லாண்டு வாழ இறைவன் திருவருள்புரிக.

தென்னாட்டாருக்கு இம்மகா புருஷரிடத்துள்ள மதிப்புக்கு அறிகுறியாக அவரது உருவச்சிலை யொன்று பிரதிஷ்டை செய்ய வேண்டுமென ஆந்திர சர்வகலா சங்க வைஸ் சான்சல்லர் ஸ்ரீ. ஸி. ஆர். ரெட்டி கூறிய யோசனை பொதுஜன ஆதரவு பெற்று வருவதுகண்டு சந்தோஷிக்கிறோம். [illegible] தான் ராவ் பகதூர் ராமநாதன் செட்டியார் போன்ற பிரமுகர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி வருவதினால் உருவச்சிலைப் பிரதிஷ்டை முயற்சி வெற்றி பெறுமென்று நம்புகிறோம். உருவச்சிலைப் பிரதிஷ்டைக்கு ஏற்ற இடம் சென்னைமா நகர்தான் என்பதை தென்னாட்டாருக்கு நாம் நினைப்பூட்டுகிறோம்.



# பத்திராசிரியர்குறிப்புகள்

**காந்தியும் கைதியா ?**:—கல்கத்தாவில் சுதேசித் தீணி தகன சம்பந்தமாக மகாத்மா காந்தி கைது செய்யப் பட்டதும் சொந்த ஜாமீனில் விடுதலை



மகாத்மா காந்தி.

பெற்றும, கேஸ் வாயிதா இம் மாதம் 26-உ போடப் பட்டிருப்பதும் நேயர்கள் அறிந்திருக்கலாம். கேஸ் விசாரணை மத்தியிலிருப்பதால் இது விஷயமாக நாம் அதிகமாக ஒன்றுங் கூறுவ திற்கில்லை. எனினும் சர்க்கார் இவ்விஷயத்தில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவில்லை யென்றே கூற வேண்டி யிருக்கிறது. பிரிட்டிஷ் சம்பந்தமே வேண்டாமென்று கூறும் சுபாஷ் சந்திர போஸ், பண்டித ஜவாரி லால் நேரு முதலிய ஆமிதவாதிகள் கையில் இந்தியாவைச் சிக்கவைக்கக் கூடாதென்று மகாத்மா காந்தி உள்ளிட்ட மா பெருந் தலைவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். ஆனால் சர்க்காரின் தற்காலப் புத்திப் போக்கினால் மகாத்மா முதலியோரின் முயற்சிகள் வீண் முயற்சி ஆகிவிடாதோ என்று அஞ்சுகிறோம். மகாத்மா கேஸ் எவ்வாறு முடிவு பெறுகிறதென்று பார்ப்போம்.

*　　*　　*

**ஆஸ்திக சங்கம் :**—செங்கற்பட்டு சுயமரியாதை மகா நாட்டுக்குப் பின் நாட்டில் ஒருபுத்துணர்ச்சி தோன்றி யிருப்பது கண்டு மகிழ்வெய்துகிறோம். சமுதாய சீர்திருத்தக் காரர்களால் 25 வருஷ காலமாக உண்டுபண்ண முடியாத ஒரு உணர்ச்சியை, திரு. நாயக்கர் மூன்றே வருஷ உழைப்பினால் உண்டு பண்ணி விட்டதாக திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியா ரவர்கள் கூறியது மெய்யாகி வருகிறது பற்றியும் களிப் படைகின்றோம். கலங்கினால் தெளியும் என்ற சம்பிரதாயப்படி திரு. நாயக்கர் சென்ற மூன்றாண்டு களாகத் தென்னாட்டைக் கலக்கிய கலக்கத்தினால் இப்பொழுது தென்னாடு தெளிவுறத் தொடங்கி நின்றது. ஒரு நூற்றாண்டு காலமாக வருஷந் தோறும் ஆயிரக் கணக்கான ஹிந்துக்கள் புறமதம் புகுவது கண்டும் வாளா விருந்து காலந்தள்ளின ஹிந்து சமயாபிமானிக ளெல்லாம் இப்பொழுது விழித் தெழுந்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

சென்னை இந்து மதாபி மானிகளும் சும்மா இருக்கவில்லை. சுயமரியாதைச் சங்கத்தாரின் பிரசாரத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்யும் பொருட்டு, ஸ்ரீமான்கள். திரு வி. கலியாண சுந்தர முதலியார் கோ. வடிவேலு செட்டியார், டி. கே. பாவலர், T. P. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை முதலியோர் ஒரு ஆஸ்திக சங்கம் ஸ்தாபித் திருக்கிறார்கள்.



224254

தற்கால இந்துமதம் புராணமதமாக மாறி யிருப்பதினால் உத்தம இந்து மதத்தின் மகிமை குறைந்து வருகிற தென்றும் எனவே இந்துமத புனருத்தாரணம் செய்ய ஒரு சங்கம் தேவை யென்றும் சென்ற மாதப் பத்திரிகையில் நாம் எழுதியிருந்ததை நேயர்கள் வாசித்திருக்கலாம். காலப்போக்குக்கு ஏற்றவாறு சீர்திருத்தம் செய்யப்படாக் குறையால் இந்துமதம் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருவது கண்கூடு. அம் மட்டோ! ஆலயம் தேவையா? சாமி தேவையா? என்பனவாதிய கேள்விகளும் எழும்பத் தொடங்கி விட்டன. தற்கால இந்து மதத்தின் பேரிலுள்ள வெறுப்பினாலேயே இக்கேள்விகள் எழுந்தும் உள்ளன. எனவே தற்கால நிலைமைக்கு ஏற்றவாறு இந்து மதம் சீர் திருத்தப் படுத்தான் தீரவேண்டும். நமது ஆஸ்திக சங்கத்தார் எவ்வழியில் வேலைசெய்யப் போகிறார்களோ தெரியவில்லை. சுயமரியாதை இயக்கத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்வது என்னும் குறுகிய நோக்கத்தை விட்டு விட்டு இந்து மதச்சீர்திருத்தம் செய்வது என்னும் விசால நோக்கத்துடன் அவர்கள் வேலைசெய்யத் தொடங்குவார்களானால் அவர்களது முயற்சி நன்முயற்சி யாகுமென்பது திண்ணம்.

அன்றியும் ஆஸ்திக சங்கத்தார் முஸ்லீம்களையும் கிறிஸ்துவர்களையும் சேர்த்துக் கொண் டிருப்பது எதற்காக வென்றும் விளங்கவில்லை. முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், மற்றும் இதர மதஸ்தர்கள் ஆகிய சமஸ்த இந்தியர்களுக்கும் பொதுவான ஒரு ஸமரஸ மதம் ஸ்தாபிப்பது ஆஸ்திக சங்கத்தாரின் நோக்க மானால் அவர்கள் முயற்சியை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். ஆனால் உண்மை நிலை என்ன? இந்து மதத்துக்குத்தான் தற்காலம் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. கால நிலைக்கேற்ற சீர்திருத்தம் செய்தாற்றான் இந்துமதம் தற்காலப் போராபத்தி லிருந்து விடுதலை யடையும். ஆகவே இந்து மதச் சீர்திருத்த முயற்சிக்கு பிற மதத்தினரின் உதவியை நாடுவது உசித[illegible]மா ? இவ் விஷயத்தை ஆஸ்திக சங்கத்தார் [illegible] கவனிப்பார்களா[illegible]

மற்றும், [illegible] சங்கத்தில் சைவ சமயிகள் மட்டுமே காணப் படுகிறார்கள். வைஷ்ணவர்கள் பெயரையே, அந்தச் சங்கத்தார் பெயர் வரிசையில் காணோம். பிற்கால இந்துமதம் சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் பொதுவாகவே இருக்க வேண்டும். ஆகவே இரு மதத்தாரும் ஒன்று பட்டுழைக்க வேண்டியது மிக அவசிய மாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விஷயத்தை ஆஸ்திக சங்கத்தாருக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம். காவியகண்ட கணபதி சாஸ்திரியவர்களின் ஒத்துழைப் பையும் இந்த ஆஸ்திக சங்கத்தார் முக்கியமாகப் பெறவேண்டும். அவர் இந்துமத புனருத்தாரணத்தில் மிகவும் ஆர்வம் கொண்டவர். விசால மனப்பான்மை யுடையர் ; ஜாதி இறுமாப்பு இல்லாதவர் வேதாகம ஆராய்ச்சிகளில் மிக வல்லுநர். எனவே அவருடைய ஒத்துழைப்பையும் பெற்று இந்த ஆஸ்திக சங்கத்தார் வேலை செய்வார்களானால் நல்ல பயன் விளையுமென்பது திண்ணம்.

*　　*

**ஆலயந் தேவையா ?**—சென்னை ஆஸ்திக சங்கத்தார், சிந்தாதிரிப் பேட்டை தில்லை வனத்தில் கூடிய முதல் பிரசாரக் கூட்டத்தில் ஆலயத்தின் தேவையைப் பற்றி ஒரு பிரசங்கம் நடத்தி யிருக்கிறார்கள். ஆலயந் தேவையில்லை யென்று கூற ஒருப்படும் இந்துக்கள் அதிகம் இராரென்றே நம்புகிறோம். ஆனால் மகாத்மா காந்திக்கும் பாஞ்சாலச் சிங்கம் லாலாஜிக்கும், தென்னாட்டுத் தலைவர் ஆர். கே. ஷண்முகம் செட்டியாருக்கும், நமது ஆஸ்திக சங்க நிர்வாகிகளான ஸ்ரீமான்கள் T. P. மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை, கிருஷ்ணசாமிப் பாவலர், ஜெயவேலு முதலியோருக்கும் பிரவேசன மளியாத ஆலயங்கள் தேவையா என்பதுதான் கேள்வி. ஆலய வழிபாட்டைப் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் பேசுகையில் "கோயில்கள் சாதிப்பேய் நுழைந்த இடம். ஒரு கூட்டத்தார் இங்கும், மற்றொரு கூட்டத்தார் உங்கும், இன்னொரு கூட்டத்தார் அங்கும் கடவுளை வழிபட வேண்டுமாம். கடவுள் முன்னிலையிலும் [illegible]

ஜஸ்டிஸ் ஸர் ராமேசம் :—இவர் 1875 ஜுலை 27-உ ஜனனமானார். விசாகப்பட்டணம் ஹிந்துக் கல்லூரியிலும், சென்னை ராஜதானிக் கல்லூரி, லா காலேஜுகளிலும் கல்வி கற்றுப் பட்டம் பெற்று 1896-ல் ஹைக் கோர்ட்டு வக்கீலானார். 1896 முதல் 1900 வரை விசாகப் பட்டணத்திலும் 1900 முதல் 1916 வரை சென்னையிலும் வக்கீலாக இருந்து 1916-ல் சர்க்கார் வக்கீலானார். 1920 நவம்பர் 10-உ ஹைகோர்ட்டு ஜட்ஜாக உயர்த்தப் பட்டார். ஒரு உத்தம நீதியதிக்கு வேண்டிய குணங்களெல்லாம் நிரம்ப அமையப் பெற்றவர். உணவுச் சீர்திருத்தம், பிரஜா பத்தியக் கட்டுப் படுத்தல் முதலிய பிரச்சினைகளில் மிகுந்த ஆர்வமுடையவர். சமுதாயச் சீர்திருத்த விஷயத்திலும் அக்கறை யுடையவர்.



ஜஸ்டிஸ் சர் ராமேசம்.

பஞ்சமர்களோடும் பலரைப் பழித்திகழும் நாடு
பழிவர்ணா சிரமமெனப் பார்த்தறியா நாடு
சஞ்சலத்தீண் டாமையினல் சதிபுரியும் நாடு
தருமங்க ளைமறந்துந் தாழ்வுற்ற நாடு
நஞ்செனும்பொய் சாதிகளை நாட்டிவைக்கும் நாடு
நதிகிணறுகோயில் செல நாடவிடா நாடு
பஞ்சமிடர் வறுமையுரு படிந்திருக்கும் நாடு
பண்டுநிலை மாறியழும் பாரதவிந் நாடே.

# இந்தியப் பத்திரிகைகள்

## பால்ய விவாகம்.

சின்னஞ்சிறு பெண்களுக்கு கல்யாணம் செய்து விடுகிறார்கள். குழந்தைகளோடு இந்தியர் போகம் செய்கிறார்கள் என்று மேயோ, எழுதியதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, இந்தியா சுயராஜ்யத்துக்கு லாயக்கில்லை என ஒரு சிலர் பிரசாரம் செய்து வருவதை யாவரும் அறிவார்கள். பால்ய விவாகம் படு மோசமான காரிய மென்பதை அறிவுள்ளவர்கள் மறுக்க முடியாது. இத்தொல்லை இங்கிலாந்து தேசத்திலும் சிறிதளவு இருந்து வருவதைக் குறித்து முன்னொரு முறை எழுதியிருக்கிறோம். 16 வயதுக் குட்பட்ட பெண்ணோடு சேருவது சட்டப்படி குற்றமென, இங்கிலாந்தில் ஏற்பட்டிருந்தும், வைதிகர்கள் ஒரு சிலர் அந்நாட்டிலும் அநீதங்கள் செய்து வருவதாகத் தெரிகிறது. அதைப் போக்க வேண்டி, பிரிட்டிஷ் பிரபுக்கள் பார்லிமெண்டில் லார்டு பக்மாஸ்டர் ஒரு மசோதா பிரேரேபித்திருக்கிறார். இந்தியர்களைப் பழிப்பதற்கு முன், இங்கிலாந்தை சீர்படுத்திக்கொள்ள வேண்டு மென்று பக்மாஸ்டர் கூறியுள்ளார். பால்ய விவாகமென்பது சீமையில் அத்தி பூத்தாற் போலிருப்பினும், ஒருவருக்காவது தீமை உண்டாக்காத விதத்தில் சட்டம் அமைத்திருக்கவேண்டுமென பக்மாஸ்டர் சொல்லுகிறார்.

1926ம் வருஷம் 15 வயதுள்ள 34 பெண்களுக்கும், 14 வயதுள்ள 4 பெண்களுக்கும், 1925ம் வருஷம் 15 வயதுள்ள 24 பெண்களுக்கும், 14 வயதுள்ள 2 பெண்களுக்கும், விவாகம் நடந்திருக்கின்றன. இவ்வளவு சொற்பமாக பால்ய விவாகம் நடந்திருப்பதையும் தடுத்துவிட வேண்டுமென, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு சட்டம் பிறக்குமானல், லட்சக் கணக்கான பால்ய விவாகம் நிகழும் இந்தியாவில், பால்ய விவாகத்தைத் தடுக்க சட்டம் செய்ய வேண்டியது எவ்வளவு அவசரமான சங்கதி யென்பதை நண்பர்கள் கவனிக்க வேண்டும். வைதிகர் கூச்சலை [illegible] பாராட்டாமல், இந்தியாவில் பால்ய விவாகத்தை சட்ட [illegible] ஒழிக்கும்படி சர்க்காரை [illegible] கேட்டுக்கொள்ளுகிறோம். வைதி கரிடத்தில் வாதாடுவதில் பயனில்லை. சட்டமும் சவுக்கடியுமே, இந்தியாவில் பால்ய விவாகக் கொடுமைகளை நீக்கவல்லதாகும்.

—தமிழ்நாடு.

* * *

## ராஜா ஸர். அண்ணாமலை உருவச் சிலை.

தமிழகத்தின் கொடை வள்ளலான ராஜா ஸர். அண்ணாமலையின் உருவச்சிலை நாட்டப் பெற வேண்டுமென்று ஆந்திர யூனிவர்சிட்டியின் வைஸ் சான்ஸலர் திரு. ஸி. ஆர். ரெட்டி வெளியிட்டுள்ள விண்ணப்பம் பெரிதும் பாராட்டத் தக்க தாகும். அதனை யொட்டி ராவ்பகதூர் சு. அ. சு. ராமனாதன் செட்டியார் முதலியோர் அதனை ஆதரித்துப் பல கடிதங்கள் வெளியிட்டுள்ளார். ராஜா ஸர். அண்ணாமலையின் உருவச் சிலைகளும் வேறு பல ஞாபகச் சின்னங்களும் தமிழகத்தில் நாட்டப்படக் கூடிய சந்தர்ப்பம் உண்டாய் விட்டதென்று நாம் கூறவேண்டியதில்லை. பெருந் தருமம் செய்த ஒருவருக்கு நன்றி செலுத்தும் கடப்பாடு பொது ஜனங்களுக்கு உரியதென்பதை யாரே அறியாதார்? அந் நெறி பற்றி சென்னை மாகாண மக்கள் யாவரும் தங்களுடைய நன்றியறிதலைக் காட்டும் பொருட்டு ஒரு பெருங் கொடை வள்ளலின் உருவச்சிலையை முக்கியமான விடத்தில் நாட்டுதல் வேண்டுமென்று முனைந்து முன்னிற்பது நமக்குக் களி பேருவகையை நல்குகின்றது. இதுவரை இவ்வுருவச் சிலை எங்கு நாட்டப்பட வேண்டுமென்பதைப் பற்றி குறிப்பிட்டிருக்கும் கடிதங்களில் சிதம்பரமும், காரைக்குடி காரைக்குடி [illegible] படுகின்றன. உருவச்சிலை ஸ்தாபிக்கப் பெறும் இடம் கூர்ந்து கவனித்து முடிவு செய்யக் கூடியதாகும். சிதம்பரத்தில் ஏற்படுத்த வேண்டுமென்னும் யோசனைக்குக் காரணம் அண்ணாமலை சர்வகலாசாலை அங்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதே ஆகும். காரைக்குடி [illegible] தானில் ஏற்படுத்த வேண்டுமென்று [illegible] தற்குக் காரணம் ராஜா ஸர். அண்ணாமலையின் வாசஸ்தலமாகு மென்பதே. [illegible]

மந்திரியால் நியமிக்கப் பட்ட உத்தியோகஸ்தரிடம் தன்னுடைய, தன் குடும்பத்தார் ஒவ்வொருவருடைய வேண்டிய பிரகாரம் செய்ய வேண்டும்.

யூனியனை விட்டுப் புறப்பட்ட ஒரு வருஷத்திக்குள் எந்த இந்தியனும் தன் குடும்பத்துடன் திரும்பிவிடக் கூடாது. ஆனால் அடியில் கண்ட (12) உட்பிரிவுகளிலுள்ள ஏற்பாடு செய்து ஒரு வருஷத்துக்குப் பிறகு யூனியனில் தானிருந்த மாகாணத்துக்குத் திரும்பி வரலாம்.

ஆனால் எவ்வகையிலும் மூன்று வருஷமான பிறகு திரும்பி வர வேண்டியது.

தனக்காகவும், தன் குடும்பத்துக் காகவும் செலவிடப்பட்ட முழு தொகையையும் யூனியன் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட ஏஜண்டிடம் தான் வெளியேறிய தேசத்திலிருந்து புறப்படுமுன் செலுத்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ரசீது யூனியன் துறைமுகத்தில் வந்து சேர்ந்ததும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அப்படி வெளியேறிய இந்தியன் தன் குடும்பத்தில் யாராவது காலஞ் சென்றுவிட்டால், அல்லது தன் பெண்களில் யாராவது யூனியனுக்குவர அருகரில்லாதவரை விவாகம் செய்து கொண்டு தங்கிவிட்டால் மற்ற பேர்கள் ஏகோபித்து ஒரே சமயத்தில் திரும்பி வர வேண்டும். மந்திரி ஒப்புக்கொள்ளக் கூடிய விவாகச் சீட்டு, அல்லது மரணப் பதிவு சமர்ப்பிக்கப்படவேண்டும். எதிர் பார்க்காத அசம்பாவிதங்களால் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மந்திரிக்குத் தெரிந்து அவர் தன் நோக்கப்படி விட்டுக் கொடுக்கலாம். குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் இறந்தவருக்கு (முதல் பாராவில்) கண்டபடி திருப்பிக் கட்டவேண்டிய தொகையில் உள்ள தொகையைக் குறைத்துக் கொள்ளலாம்.

குடும்பத்துடனல்லாது, தனிமையில் வந்தாலும், குடும்பத்தைச் சேர்ந்த இந்தியன் காலஞ் சென்று விட்டாலும் அக்குடும்பத்தார் (சி) பாராவில் கண்டபடி யூனியனுக்குத் திரும்பி வந்தால், அவனும் அவன் குடும்பத்தாரும் யூனியனுக்குத் திரும்பி வரக் கூடிய சுதந்தரத்தைத் தானே அல்லது தாங்களே வலிய, எப்போதும் இழந்து விட்டதாகப் பாவிக்கப்படும். (சி) பாராவில் குறிப்பிட்ட காலவரம்புக்குள் வந்து சேரத் தவறினால் தான் அல்லது தங்கள் சுதந்தரத்தை முற்று மிழந்துவிட்டதாக அத்தாட்சியாகும்.

இந்தப் பிரிவின் கருத்துக்காக "இந்தியன் நபர்" என்பது 16 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரண்டையும், விவாகமான ஸ்திரீயையும் குறிக்கும்.

---

னர் ஓட்டு செய்திருப்பதால் தொழிலாளர்களுடைய விஷயத்தில் அவர்களுக்கு எத்துணை சிரத்தை யிருந்து வருகிற தென்பது வெளிப்பட்டு விட்டது. இனி ஜஸ்டிஸ் கக்ஷித் தலைவர்கள் தொழிலாளரிடத்தில் தங்களுக்கு மிகுந்த சிரத்தை யுண்டென்று சொல்லிக் கொள்ளுகையில் தொழிலாளர்கள் சட்ட சபையில் இவ்விதம் தங்களுக்கு துரோகம் செய்ததற்குக் காரண மின்ன தென்பதைக் கேட்கத் தவறிவிட மாட்டார்களென்றே நாம் நினைக்கிறோம்.

—சுதேசமித்திரன்.

# ஸ்ரீ பாரதியாரின் பாரத நாடு.

ஸ்ரீமான் ச. செல்லம் எழுதியது.

செந்தமிழ் மொழிக்கு புத்துயிரும் தமிழ் நாட்டிற்கு தேசிய உணர்ச்சியும், கவிக்கரசு ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களே அளித்தன வெனலாம். இலக்கண விதி சிறிதும் பிழையாது துறைமுறையி லமைத்த காரிகை கற்றோர் கவிகளே இடைக்காலத்தில் தமிழ்த் தாய்க்கு உரிமையாக ஒளிர்ந்துகொண்டிருந்தன. முன்னை முறை பிறழாது பின்னைய நூற்கள் பலவாகப்பெருகின வழிநூல், முதனூலுக்குச் சிறிது மாற்ற முடையதன்றோ? ஒரு நாட்டில் தோன்றும் புது புது இயக்கங்களால் அந்நாட்டு மொழிக்கும் மாற்றமுண்டாவதியல்பு. மொழியின் மாற்றத்தால் அதற்கு அபிவிருத்தி யுண்டாகும். சமணர் தமிழ்நாடு போந்த போது தமிழ் மொழிக்கு சிறப்புண்டாயது கண் கூடு. தேசமும் பாஷையும் மணியும் ஒளியும் போன்று ஒன்றுக்கொன்று தொடர்புடையன. நாடு மொழியையும், மொழி நாட்டையும் மாறுதல்பெற ஒன்றையொன்று அவாவி நிற்கின்றன. தமிழ்மொழி தன் தொன்மை நிலைமையில் சிறிதும் மாற்ற மேற்படாத காலமெல்லாம் தமிழ் நாடு மாற்றமடையவில்லை. தமிழ் நாடும் தமிழ் மொழியும் சமயப் பற்றிலேயே ஈடுபட்டுக் கிடந்தன. இந்நிலை கவிக்கரசு ஸ்ரீ. சுப்பிரமண்ணிய பாரதியாரால் நீங்கிற்று.

தேசிய இயக்கத்தில் முன்னணியில் நிற்கும் வங்க நாட்டில், பல ஆண்டுகளுக்கு முன்பாகவே சுதந்திர உணர்ச்சித் ததும்பும் பாடல்கள் தோன்றி விட்டன. ஆந்திர, நாடும் மலையாளமும் இதைப் பின்பற்றுமயில்லை. ஆனால் தமிழ் மொழி மூலம் தமிழ் நாட்டிற்கு பாரதியார் காலத்திலேயே ஒரு உணர் வுண்டாயது.

புலமை மிக்க பாரதியாரின் மனதில் முளைத்த சுதந்திர உணர்வெனும் செடி செழிப்பாய் வளர்ந்து அரும்பி மலர்ந்து காயாய்க் கனிந்து அதன் விதைகள் தமிழ் நாடெங்கும் சிதறுண்டு பருவமுள்ள தமிழ் பூமியில் பலவாய்ப் பெருகி முளைத்தது. அதனால் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் தனிஉயிரும் உணர்வும் உண்டாயிற்று. பாரதியெனும் பட்டம் தமிழ் நாட்டில் ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதியாரை மாத்திரம் குறிப்பிட்டு வழங்குவது போற்றத் தகுந்த வொன்றாகும். வெறுஞ் சொல்லுகளை அடுக்கிக்கொண்டு போகுந்தன்மையோ, சாந்த மொழிகளைத் தொடுக்குந் தன்மை மட்டிலா தானே வல்ல நமது பாரதியாரின் பாடல்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்குஞ் சொற்களும் யாவராலும் எண்ணற் கரிய உயரிய கருத்துக்களும் சேர்ந்து அமைந் திருக்கின்றன. ஒவ்வொரு பாடல்களும் அழகிய மொழி மணிகளால் சேர்க்கப்பட்ட ஆரங்களாக விளங்குகின்றன. அந்த ஆரத்தில் ஒரு மணியை மாற்றி வேறொரு மணியை வைக்க இயலாது. அங்ஙனம் வைப்பினும் அதன் ஆக்கங் குன்றும். எண்ணிறந்த ஆண்டுகளால் பாடுபட்டால் வரும் பயனை, பாரதி பாடல்கள் தமிழ் நாட்டில் ஒரு சிறுகால அளவில் செய்துவிட்டன. ஒவ்வொரு பாடல்களும் படிப்பவருக்கும் கேட்பவருக்கும் மனோ வெழுச்சியை உண்டுபண்ணுகின்றன. தமிழ் நாடு இப்பாடல்களை ஒரு தலையாய்ப் போற்றுவது இச்சாற்பால் தான்.

இயற்கை வளப்புகள் யாவும் பெற்று நல்லா விளைவுகளும் கொண்ட நாடு பாரத நாடு. அதன் பெருமைகள் சொல்லுந் தரமன்று. கல்வியும் ஞானமும் உலகிற்கு கற்பிப்பது. தன் வளமையால் பாரத நாடு அயல் நாட்டவரின் கவனத்தைக் கவர்ந்து கொண்டு அவரின் ஆட்சிக்குட்பட்டு கிடக்கிறது. அதனால் நமது நாட்டு மக்கள் மிகவும் துன்புற்று ஏழையராய் அடிமைகளாய் இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் வாழுகின்றனர். அவர் நிலை சுதந்திரத்தாலேயே மாற்ற மடையும். அதற்கான வழிகளான ஜாதி மத பேத மொழித்தல்; தீண்டாமை யொழித்தல்; புரோகிதம் ஒழித்தல் முதலியவற்றை நீக்கியும், தேசாபிமானம் சுதந்திர வேட்கை முதலியவற்றால் நாட்டிற்காக முன் நின்று உழைக்கும் பல பிரிவுகள் உள்ள தேசத்தவ ரெல்லாம் கூடி நாட்டிற்கு உழைக்குந் தன்மையும் பாரத நாட்டிற்கு இப்போது இன்றி யமையாத் தொண்டு.

இக்கருத்துக்களைக் கொண்டு பாரதியார், தன் சுதந்திர வுணர்வெனும் உள்ளத்தால் பல பாடல்கள் பாடியுள்ளார். [illegible]

கொண்ட பாரதியார் பாரத நாட்டைப்பற்றி பல வாக பாடியுள்ளார். அவைகளை ஒழுங்காக எடுத்துக் கூறி எனது தமிழ்நாட்டு நண்பர்களுக்கு பாரதியாரின் பெருமைகளை விளக்கலாமென்பதே இக்கட்டுரையின் கருத்து.

பாரத நாடு இயற்கை யழகு பொருந்திய நாடு. ஏனைய நாட்டிலொன்றும் இதுபோல் இயற்கை வனப்புகள் கிடையாது. இதை பாரதியார்—"மன்னும் இமயமலை யெங்கள் மலையே மாநில மீதிது போற் பிறிதிலையே. இன்னறு நீர் கங்கையா றெங்களாறே இங்கிதன் மாண்பிற் கெதி ரெது வேறே? என்று "எங்கள் ஆறு எங்கள் மலை"யென்று அபிமானித்துக் கூறியது காண்க.

இங்ஙனம் இயற்கை வளம் பல படைத்த நாடு வளமையிலும் குறைவற்ற தாகவே இருந்து வருகிறது. இதைப் பற்றி கவிக்கரசு,

"கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியுஞ் செந்நெல்லும் நல்கு மெக்காலும்

*   *

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண் ணரும் பெரு நாடு.
கனியுங் கிழங்குந் தானியங்களும்
கணக்கின்றித் தரும் நாடு—இது
கணக்கின்றித் தரும் நாடு—நித்தம் நித்தம்

*   *

கணக்கின்றித் தரும் நாடு.
போகத்திலே நிறைந்தவள் எண்ணரும்
பொற்குவை தானுடையாள்.

*   *

என்றும் வளமையை அளிக்கிற தென்று கூறியுள்ளார்.

இத்தகைய நாடு மிகவும் தொன்மையை யுடையது. சரித்திர ஆராய்ச்சி வல்லுநரால் இன்னும் இது எக்காலத்தி லுண்டாயதென்று அறிந்து கொள்ள வியல வில்லை. இதை பாரதியார்—தொன்று நிகழ்ந்த தனைத்து

முணர்ந்திடு சூழ்கலை வாணர்களும்—
இவள் என்று பிறந்தவளென்று உணராத
இயல்பினளா மெங்கள் தாய்

*   *

யாரும் வகுத்தற் கரிய பிராயத்தாள்.

என்று கூறியுள்ளார்.

இத்தகைய பாரத நாடு சமயப்பற்றிலே எங்ஙன மிருந்ததென்று கூற வந்த பாரதியாரின் கூற்று அடியில் வருமாறு:

"கற்றை சடை மதிவைத்த துறவியைக்
கை தொழுவா ளெங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரி கொண்டே மூல காளும்
ஒருவனையுந் தொழுவாள்."

சிவபிரானையும் திருமாலையும் வழிபடுவதாகக் கூறியுள்ளார். கணபதி, பராசக்தி, வடிவேலன், சரஸ்வதி, கண்ணபிரான், முதலானவர்களை ஆறு துணையென்ற தலைப்பின் கீழ் வணங்குகிறார்.

*   *

புத்தபிரானருள் பொங்கிய நாடு

என்ற பாட்டால் புத்தபிரானைப் பற்றியும் ஏசு, அல்லா, முதலானவர்களைப் பற்றியும் பாட்டுகள் பாடியுள்ளதால் சர்வமத சமரசக் கொள்கை நன்கு விளங்குகிறது.

நமது நாடு கல்வியில் மிகவும் தொன்மைக் காலமுதலே பெயர் போன நாடு. பல அரிய நூல்கள் வெளி வந்திருக்கின்றன. இதை பாரதியார்

மன்னரு முபனிட நூலெங்கள் நூலே
பார்மிசை யே தொரு நூலிது போலே
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங்கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்.

என்ற பாட்டுகளால் வெளி யிட்டுள்ளார்.

ஞானத்திலே இந்தியாவே முதன்மை யானது. முனிவர்கள் பலர் வாழ்ந்து வந்த தேசம் பாரத தேசம். உலகத்திற்கே ஞானோப தேசம் இந்தியாவே கொடுத்து வருகிறது.

மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கானம் நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு

*   *

யோகத்திலே நின்றவ னுண்மையு
மொன்றென நன்கறிவாள்

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்" என்றுரைத்தான் கண்ண பெருமான்.

எல்லாரு மமரநிலை யெய்தும் நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்.
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்.
இந்தியா உலகிற் களிக்கும்.

என்று ஸ்ரீ பாரதியார் பாரத நாட்டின் ஞானத்தைப்பற்றிக் கூறியுள்ள கருத்தைக் காண்க.

(தொடரும்.)




# நாலடியார் ஆராய்ச்சி.

(ஆசிரியர் மு. மாணிக்க நாயகர், புதுவை.)

*உரிமை ஆசிரியருக் குரியது.

## நாலடியாரும் பழமொழியும்.

இந்நூலிலுள்ள நீதிகள் பலவற்றைப் பொறிக்குஞ் செய்யுட்கள் சில தந்தமக்குள்ளே பல விதங்களானும் ஒத்திருந்தவைகளை மற்றோரிடத்திற் கூறப்பட்டுள்ளது. எனினும் நாலடியார் நூலுக்குள்ளேயே பல செய்யுள்களும், அடிகளும், வார்த்தைகளும் அங்ஙனமே ஆளப்பட்டிருப்பதே ஆச்சரியமென்று கருதினோம். அதுபோக நாலடியாரில் எடுத்தாளப்பட்ட செய்யுள்களை யொட்டிப் பழமொழியினுள்ளுஞ் சில காணப்படுகின்றன. இதுவும் மற்றோர் ஆச்சரிய மன்றோ! ஒரு நூற் கருத்தை—அல்லது ஒரு நூலாசிரியர் கொண்ட கருத்தை மற்றொருவர் கொள்ள முடியுமெனினும் ஒருவ ரெழுதிய வண்ணமே மற்றொருவருஞ் செய்யுள் பொறிப்பதெனின் அதை யெப்படி வியப்பதென்பதை யெழுத்து மூலம் வாசகர்கட் கெடுத்துக் கூற சக்தியற்றவனா யிருக்கிறேன். எனவே நாலடியிலுள்ள சில செய்யுள்களுக்கும் பழமொழியிலுள்ள சில செய்யுள்களுக்குமுள்ள பொருத்தங்களை மீண்டு காண்போம்.

1 அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன்
(நாலடி 151)

2 அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் தீங்குறுதற் காண்குமால்—(பழ 15)

" இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்
கும்
வசையன்று வையத் தியற்கை" (நாலடி 111)

இசைவ கொடுப்பது மில்லென் பதுவும்
வசை யன்று வையத் தியற்கை (பழ 24)

3 "கன்றுமிக் கையுற்று வெல்லாரு மெத்துணையும்
வேண்டார் நத்திய விழைபவ னல்லனவ்"
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது" (நா. 109)

தழுமலைத் தியைந்த களிறும் கதழ்
விழுமியோன் மேற் சென் றதனை—விழுமிய

வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது" (பழ. 62)

4 "விறற் பூங் கமழ்கானல் வீங்கு நீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கு முறும்" (நா. 117)

"அறைப்பா யருவி யணிமலை நாட
யுறற்பால யார்க்கு முறும்" பழ 15.

5 " தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குது மென்பவர் புன் கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற் சேர்ப்ப!
கற்கிள்ளிக் கை யிழந் தற்று" நா. 336.

" மிக்குடையா ராகி மிக மதிக்கப் பட்டாரை
யொற்கப் பட முயறு மென்ற விழுக்காகும்
நற்கெளி தாகி விடினு நளிர் வரை மேற்
கற்கிள்ளிக் கை யுய்ந்தா ரில்" பழ. 36.

6 " காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்." நா. 113.

முட்டின்றொருவ ருடைய பொழுதின்க
ணட்டிற் றுத்தின்ப ராயிரவ ராபவே பழ. (59)

இவைகள் செய்யுள்நடையா லொப்பன சிலவும், கருத்தாலொப்பன சிலவுமாகக் குறிக்கப் பட்டன. இன்னுங் கருத்தாலொப்பன பல பல விருப்பினும் விரிவஞ்சி விடுக்கப்பட்டது.

5 "ஒல்லை, யிடு நீற்றுல் பையவிந்த நாகம்போல்
66.

என்பதைக் கவனிக்கும் போது அக்காலத்திலேயே விபூதியைத் தூவிப் படத்தை விரித்துக்கொண்டு ஆடும் நல்ல பாம்புகளை யடக்குந் தன்மையைக் கொண்டிருந்தார்க ளென்பது பெறப்படுகின்றது.

"மந்திரமாவது நீறு" (தேவாரம்)

—பாம்பு மணி

மந்திரத்தா லமே வசம் (நீதி வெண்பா)

முதலியவைகளும் மேற்குறித்த கருத்தை வலியுறுத்து கின்றன.

6 " பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச் சோறார்வர் கயவர்— (200 என்பதூஉ
மும்

நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவாதார் 296 என்பது...

அக்காலத்துச் செல்வர்களிலும் வள்ளல்களிலுந் தலை சிறந்து விளங்கிய "பெரு முத்தரையர்" என்பார் தன்னிடம் வந்து விருந்துண்பவர்கட்கும் மற்றவர்கட்கும், இரப்பவர்கட்கும் பல வகைக்கறி வகைகளுடனும் அறுசுவை யுண்டி யுதவினவ ரென்பதுந் தோன்றுகிறது.

7 "கடிப்பிடுகண் முரசங் காதத்தோர் கேட்பர்" 100 என்பதனால் அக்காலத்தில் அரசன் ஆணையின்கீழ் அடிக்கப்பட்ட ஒலிக்கருவிகள் பலவினுள்ளும் முரசு என்பது அடிக்கப்பட்டால் காத தூரம் கேட்கு மென்பதும் அறியக்கிடக்கின்றது. காதம் பத்து கல்.

8 பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான் புழுக்கல் 206

என்பதையும் "பொற்கலத்தூட்டிப் புறந்தரினும் 345

என்பதையும் கொண்டு பார்க்கும் போது பொன்னால் செய்த பாத்திரங்களில் பலர் உணவருந்தும் வழக்கம் உண்டென்பதும் புலப்படுகின்றது.

"தெள்ளிதின்
9 ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழிய
பாலுண் குருகிற் றெரிந்து"

என்ற செய்யுளைக்கொண்டு நோக்கும்போது நாம் இக்காலத்தில் பல பயனற்ற நூல்களைக் கண்டு வருந்தி வாசிக்காது, ஒதுக்குவதுபோலவே அக்காலத்திலும் அறிஞர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட நூல்கள் பல மலிந்திருந்திருக்கலாம். அதனாலேதான் "ஆராய்ந்தமைவுடைய கற்பவே" என்று மொழியப்பட்டுள்ளது

10 "எழுத்தோலை பல்லார்மு னீட்ட விளியா
வழுக்கோலை கொண்டு விடும்." என்பதனாலும்
"ஓலைக்கணக்க ரொலியடங்கப் புன் செக்கர்"

என்பதனாலும், அக்காலத் தரசாங்கக் கணக்குக்கும் அவைக் களத்துக்கும் கல்விக் கூடத்துக்கும் பனை யேடுகளாலாகிய ஓலைச் சுவடிகளையே பயன் படுத்தி வந்தன ரென்பதற்கோர் ஐயமின்று.

"முந்திரி மேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை யிந்திர னெண்ணி விடும்" (346) என்பதனாலும்
"கருங் கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்று
ஒருங்கொப்ப கொண்டானு மூன்— (387) என்பதனாலும்

மேனாட்டார் படிப்பை மேற்கொண்ட பிறகு நம்மவர்களால் படிக்காமலுங் கையாளாமலும் வழங்காமலும் விடப்பட்டு வரும் பின்ன வாய்பாட்டளவைகளும் முகத்தலளவை முதலியவைகளுமே அக்காலத்துத் தலை சிறந்தனவாய் விளங்கி வந்தன வென்பதும் போதரும்.

11 "அறுசுவை யுண்டி யமர்ந் தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும் 1

என்பதனால் பண்டைக்கால மன்னர், பிரபுக்கள் முதலானவர்களுக்குத் தத்தம் இல்லக் கிழத்தியர்கள் குறைவற்ற நிறை மனமுடன் தங்களுக் குணவூட்டா நிற்கவும், அவர்கள் தமக்கு ஒவ்வாத சுவையுள்ள உணவுகளை யுண்ணு நிற்கவும் கண்ட பெரியாரன்றோ இதனை வரைந்திருத்தல் வேண்டும். இதைக்கொண்டு நோக்குழி, அரசர்கள் தம்முயி ரனைய புலவர்கள் முன்னிலையினும், உடனும் உண்டிருந்தன ரென்பதும் அக்காலத்துக் குல விளக்கனைய, குலப்பெண்கள் தங் கணவர்கட்குச் செய்யும் பணிவிடைகளைப் பிறர் கண் காணும் போதுங் குறைவின்றித் தயங்காமற் செய்துள்ளன ரென்பதும் பெறப்படும்.

12 வெறியயர் வெங்களத்து வேன் மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன "மன்னு மகிழ்ச்சி" 16


என்பதனால் அக் காலத்திலிருந்தே சிறு தேவதைகட் குயிர்ப் பலி யிடுங் கெட்ட வழக்கம் தொடர்ந்து வருகிறதென்பதூம் தோற்றும். இன்று பலியிடு மிடத்தில் ஆட்டிற்கோர் தழை அச்சமயம் கொடுக்கப்படுதலும் அக்காலத்து "மறிகுளகு உண்டன்ன" என்பதை நினைவூட்டுகிற தன்றோ?

13 "உடைப்பெருஞ் செல்வமுஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும்பெருகிக்
கடைக்கால் தலைக்கண்ண தாகிக் குடைக்கால் போல்
தலைகீழாய் நிற்கு முலகு"

இன்றைய உலக நிலையின் தன்மையை உள்ளபடியே முன் னுணர்ந்த தீர்க்க தரிசியாகிய ஒருவரோ பிற்கால உலகநிலை இன்ன நிலையில் நிற்குமென்னுங் குறிப்பை யொருவாறு தீட்டி வைத்தா ரென்பதை இச்செய்யுள் அறிக்கை யிடுகிறது.

14 "வேண்டினும் வேண்டாவிடினு முறற்பால
தீண்டா விடுத லரிது" (109) என்பதனாலும்,
உறற்பாலயார்க்கு முறும் (117) என்பதனாலும்
"முன்னை வினையாய் விடும் 107 என்பதனாலும்
செய்த வினையான் வரும் 108 என்பதனாலும்
"நினைப்ப வருவதொன்றில் 265 என்பதனாலும்

அத்வைதிகளும், சைவர்களும், வைணவர்களும் சித்தாந்தப்படுத்தி யிருக்கும் முன் வினை சம்பந்தத்தை ஆருகத மதத்தவர்களும் கொண்டிருந்தார்களென்பது தெளிவாக விளங்குகிறது.




## ஆன்றோர் அருஞ்சொன் மணிக்கோவை.

சாத்தன்குளம்.

திரு. அ. வீரலட்சுமி அம்மையாரால் தொகுக்கப்பெற்றது.

1. குடும்ப வாழ்வைப் புனிதமாக்கி, ஆடவர் எய்தும் துன்பத்தைப் போக்கி, எதிர்கால வாழ்க்கையையும் மக்கள் கூட்டத்திற் குண்டாக்கும் தெய்வம் பெண்ணே ஆவள். அவளைக் குடும்ப தேவதை யென்றே நாம் போற்றுவோமாக. இங்கு அவளே நமக்கு உற்ற துணை.—திரு. மாசேன மகாத்மா.

* *

2. ஓர் பெண்ணின் கள்ளமில்லா உள்ளத்தினுட் புகுந்து நாம் ஆராயின் அதனுள் இரக்கம், தியாகம், கற்பு முதலிய பல மாணிக்கங்கள் காணலாம். வானத்தில் விண்மீன்கள் ஒன்று கூடி அதை விளக்குவது போல் இப்பூமிக்குப் பெண்கள் விண்மீன்கள்போல் எங்கும் பரவி அறிவு விளக்கத்தைக் கொடுக்கின்றனர்.
ஹார்ரேவ்.

* *

3. பெண்களுக்கு தம் மக்களிடத் துள்ள அன்பு அளவிடற் கரியது ; அவ் வன்பின் பயனு யுண்டாகிற தன்னல மறுப்பு பிறர் எண்ணுதற் கரியதாய் இருக்கிறது. நமக்கெல்லாம் இது விளங்காத பொருளாகும். ஆகவால் அதை நிந்தியா திருப்பதே நலம். மூர்க்கமுள்ள கணவனுயிருப்பினும், கெட்ட குழந்தையா யிருப்பினும் பெண் மக்கள் தலை பெருமல் இருப்பதில்லை.
தாக்கரே.

* *

4. ஒரு பெண்ணை விட நீ (ஆண்) உயர்ந்தவன் என்ற எண்ணத்தை உன் மனதிலிருந்து அகற்றி விடு. அத்தகைய வித்தியாசம் எப்பொழுதும் கிடையாது.
மேஸினி.

5. பெண்கள் செய்யும் குற்றங்களுள் பெரும்பாலான நம்மை (ஆண்களை) பொறுந்தவை. நாம் கொண்டுள்ள பல நற் குணங்கள் பெண்களிட மிருந்து வந்தன —லையல்ஸவி.

* *

6. நாம் (ஆண்கள்) மதி கேடான தன்மையாகப் பெண்களைவிட ஆண்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லுகிறோம். ஒரே தன்மையில் இருபாலரையும் ஒப்பிட எக்காலத்திலும் முடியாது. ஆணுக்கு என்ன இல்லையோ அது பெண்ணிடம் இருக்கின்றது. பெண்ணிடம் இல்லாதது ஆணிடம் இருக்கின்றது. ஆதலால் ஒவ்வொருவருக்கும் மற்றவர் துணை வேண்டும்.
ரஸ்கின்.

* *

7. பெண், பெண்ணே ; ஆண், ஆணே. சகல விஷயங்களிலும் இவர்கள் இருவரும் ஒப்புவமை உடையவர்களென்று கூறுவது வீண் பிதற்றும். பெண்ணானவள் பல இனத்தில் ஆணிலும் சிறந்தவள். உண்மையாக, தன்னலப்பற்றில்லாது, பெருமையாக, அன்பாக, தாயாக, தாதியாக, தியாகியாக, கொடையாளியாக, பிறர்க்காக வருந்துவதற்காக, பெண்ணுடன் ஆண் ஒருபோதும் ஒத்து நிற்கமாட்டான். அவளது இருதயத்திலிருந்து ஒழுகும் அன்பும், இச்சிசியத்தில் அவளது தொழிலாகிய உற்பத்தியும், அவளை ஆணில் நின்றும் எவ்வளவோ உயர்த்திக் காட்டுகின்றது.
லாலா லஜபதி ராய்.

* * *

8. எவ்விடத்தில் பெண்கள் கௌரவிக்கப் பட்டு அவர்கள் மகிழ்ச்சி யடைகின்றார்களோ

அவ்விடத்தில் தெய்வ கலையுண்டு. எவ்விடத்தில் அப்படி அவர்கள் பூஜிக்கப்படுகின்றதில்லையோ அவ்விடத்தில் சர்வ காரியங்களும் பலிக்க மாட்டா. வி. வி. ச. து. பி.

* *

9. கண்ணைக் கவர்ந்து காதலூட்டும் கட்டழகு ஆடவரிடத்தில் சிறுபான்மையே. பெண்மக்களோ உலகை வசீகரித்து நலப்படுத்துதற்கே தோன்றிய மோகன சுந்தர ரூபகளாவர். அவர்களின் சௌந்தரிய ராசிகளே இவ்வுலகை அழிவின்றி பெருக்கிக் காக்கின்றது. அத்தகைய பரம லாவண்யத்தை நிர்மல உள்ளமாய் வணங்கித் துதித்திடுக.

இராமானுஜலு நாயுடு.

* *

10. இவ்வுலகும் இதிலுள்ள எல்லாப் பொருளும் விலையுயர்ந்தவைகளே ; ஆனால் அங்குள்ள எல்லாப் பொருள்களிலும் விலை யேறப் பெற்றது குணசாலியான ஒரு பதிவிரதை யாகும். முகமத் நபி.

* *

11. பெண் மக்கள் ஆண் மக்களால் வேடிக்கை பார்க்க அழைத்துக்கொண்டு போகப்படுவதற்கும், செல்லங் கொஞ்சுவதற்குமே தகுதியானவர்கள் என்று கருதப்படுகிறார்கள் ; அப்படியே ஆகி விடுகிறார்கள். பெண் தற் சார்பை இழந்து வருகிறாள். ஆண் மகனோ வீரமிழந்து வருகிறான். இந்நிலைமை நமது பெண்மையின் பெருமைக்கும், ஆண்மையின் வீரத்திற்கும் கேடு சூழ்ந்து வருகின்றது. எனவே நாம் பிறர்மீது குற்றஞ் சுமத்துவதில் பயனில்லை. ஆண் மக்கள் வீ[illegible]யும், பெருந்தன்மையையும் வளர்த்தல் [illegible]டும். பெண் மக்கள் எல்லாவற்றிற்கும் [illegible] வனை எதிர் பார்ப்பதை விட்டு தற் சார்[illegible] ஆபத்திற்குத் துணியும் தன்மையை[illegible] தல் வேண்டும். —டான்ஸ் ம[illegible]

* * *

12. பெண்களைச் சிறையில் வைத்துக் காப்பதனால் என்ன பலன்? அவர்களே தங்கள் மன அடக்கத்தினால் தங்களைக் காத்துக்கொள்வதே சிறப்பு. —திருவள்ளுவர்.

* * *

13. பெண்களின் அழகு உயர்ந்த சேலையிலும் சிறந்த வைர நகைகளிலும் அடங்கியிருக்கவில்லை. புனிதமான உள்ளத்திலேயே அவர்களுடைய அழகு அமைந்திருக்கிறது. திரு. எம். கே. காந்தி.

* *

14. பெண்களை அடிமைப் படுத்தும் விஷயத்தில் இந்தியாவின் ஆண்மக்கள் அனைவரும் பாவஞ் செய்திருக்கிறார்கள். இப் பாவத்திற்காக நாம் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். ஓர் பெரியார்.

* *

15. பெண்களுக்கு விமோசனம் வேண்டுமெனில் அவர்கள் தாங்களாகவே அதற்குப் பாடுபட்டு உழைத்துக்கொள்ள வேண்டும். அங்ஙனமல்லாது பிறரை எதிர் பார்ப்பின் பெண்கள் மோசம் போவார்கள் என்பதற்குச் சந்தேகம் சிறிதுமில்லை.

## சிசுவின் போஷணை.

தாயானவள் தன் சிசுவிற்கு முலைப்பாலூட்ட எத்தனம் செய்ய வேண்டும். புட்டிப்பால் ஊட்டி வளர்க்கப்படும் குழந்தைகளைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகம் தாய்ப் பாலூட்டி வளர்க்கப்படும் குழந்தைகள் ஜீவித்திருக்கிறார்கள். பசுவின் பாலினால் டிப்திரியா, ஸ்கார்லட் ஜுரம், கபவாத ஜுரம், காசம் முதலியன உண்டாகக் கூடும். தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்படும் குழந்தைகளுக்கு இந்த ஆபத்துக்கள் நேரிடா. செயற்கையால் குழந்தையைப் போஷிப்பதற்குக் கட்டாயமான நிபந்தனைகள் யாதொன்றுமில்லை. ஆனதுபற்றி, புட்டிப் பால் ஊட்டி வளர்க்கப்படும் குழந்தையானது வயிற்றுவலி, வாந்தி, தூக்கமின்மை, எடைக் குறைவு, நோயைத் தவிர்க்கும் சக்திக் குறைவு, கணைமாந்தம், சொறி கரப்பான் முதலிய வியாதிகளால் சங்கடப்படும். அடிக்கடி அந்தக் குடும்பத்திற்கும், வைத்தியருக்கும் இது கவலையைத் தரத்தக்க விஷயம்.

தாய் தன் குழந்தைக்கு முலைப்பாலூட்டக் கொடுப்பளேல், பால் சரியான இடத்திலிருந்து வருகிறதா என்பதை அவள் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அவள் அதற்குரிய புட்டிகள், பாத்திரங்கள் இவைகளைக் கழுவ வேண்டிய அவசியமு மில்லை. விதிப் பிரகாரம் அதைத் தயாரிக்க வேண்டியதில்லை. இரவு இரண்டு மணி அல்லது மூன்று மணிக்குப் பாலைச் சுடவைக்க வேண்டிய அவசியமு மில்லை. புட்டிப்பால் புகட்டி வளர்க்கப்படும் குழந்தைகளைக் குறித்து ஏற்படக்கூடிய கவலையு மில்லை.

தாய்ப் பால் பணம் செலவழித்து வாங்க வேண்டியதில்லை. புட்டிப் பாலுக்கோ தாயானவள் பால், சர்க்கரை, தானியம், அதைத் தயாரிப்பதற்கு வேண்டிய புட்டிகள், பாத்திரங்கள், பாலைக் குளிர வைப்பதற்குப் பனிக்கட்டி அதைச் சுடவைப்பதற்கு வேண்டிய விறகு முதலியன வாங்கவேண்டும். அப்போதைக் கப்போது ஒரு வைத்தியனையும் ஆலோசனை செய்யவேண்டும்.

சிசு பிறந்த 12 மணி நேரங்கள் பொறுத்து அதற்குப் பாலூட்டக் கொடுக்கவேண்டும். சாதாரணக் குழந்தைக்குப் பகலில் மூன்று முறையும் இரவில் ஒரு முறையும் தாய் முலை கொடுக்க வேண்டும். தினம் மணிக்கணக்காய்ப் பாலூட்டக் கொடுத்தல் நலம். காலையில் 6 மணிக்கு, 9 மணிக்கு, 12 மணிக்கு ; பகலில் 3 மணிக்கு, 6 மணிக்கு : இரவில் 9 அல்லது 10 மணிக்கு ; பின் மாலை 2 அல்லது 3 மணிக்கு முலை ஊட்டக் கொடுக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு மாதங்களான பிறகு பின் மாலை ஊட்டக் கொடுப்பதை நிறுத்தி விடலாம். ஓர் ஊட்டத்துக்கும் மற்றோர் ஊட்டத்துக்கும் மத்தியிலுள்ள காலம் நீடித்து மிருக்கலாம். ஆனால், ஊட்டத்தின் கால நிர்ணயத்தை மாற்று முன் வைத்தியரை ஆலோசிக்க வேண்டியது அவசியம். கால நிர்ணயம் எதுவாயிருந்த போதிலும், அதைக் கண்டிப்பாய் அனுசரிக்க வேண்டும். ஆகார வேளையில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தால், காலத்தில் உண்ணும் பழக்கம் மாறாதிருக்கும் பொருட்டு அதை எழுப்பி ஊட்டக் கொடுக்க வேண்டும்.

தாய் முலைப்பால் உண்ணும் குழந்தையாவது புட்டிப் பால் உண்ணும் குழந்தையாவது படுத்துக்கொண்டு பால் ஊட்டக்கூடாது. வயது முதிர்ந்தவர்களின் இரைப்பையைப் போல் குழந்தையின் இரைப்பை இராது. அது ஒரு நேரான குழாயாயிருக்குமாதலால், அது தலைக்கு நேராக இருக்கும். குழந்தை பாலுண்ண ஆரம்பிக்கையில் அதன் இரைப்பையில் கொஞ்சம் காற்றுத் தங்கியிருக்கும். இரைப்பையில் பாலானது நிரம்ப நிரம்ப, இந்தக் காற்றுக் குமிழி மேலுக்குக் கிளம்பும். குழந்தையின் தலையையும் புஜங்களையும் நிமிர்த்திக் கொஞ்சம் சாய்ந்தாற் போல வைத்துக் கொண்டு பாலூட்டக் கொடுத்தால், பால் இரைப்பையில் இறங்கும் இடத்திற்கு நேராகக் காற்றுக் குமிழி வந்து சேரும். இரைப்பை நிரம்பும்போது காற்று வெளியே வந்து விடும். ஆதலின், பாலைக் கக்கும்படி நேரிடாது. இக்காரணம் பற்றியே பாலுண்ணக் கொடுத்தானவுடனே குழந்தையின் புஜங்களைத் தூக்கி 5 நிமிஷ காலம் அதை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். அந்தக்

காற்று வெளியே வந்துவிட்டவுடன் மறுபடியும் உண்ணக் கொடுக்கலாம். குழந்தை படுத்துக் கொண்டே பாலுண்ணும் பக்ஷத்தில் அந்தக் காற்றானது இரைப்பையில் பால் வந்து விழும் இடத்திற்குச் சற்றுத் தூரத்திற் கப்பால் ஒரு பக்கமாக வந்து தங்கி விடும்.

பிறகு காற்று வெளி வரும்போது அதற்கு மேலே யுள்ள பாலும் வெளித் தள்ளப்படும். ஒரு போதும் குழந்தை அதன் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கையில் அதற்கு ஊட்டக் கொடுக்கக் கூடாது. இரவில் குழந்தைக்குத் தாய்ப் பாலூட்டுகையில் தாம் படுத்துக்கொண்டே ஊட்டக் கொடுக்கலாம். ஆனால், குழந்தை படுத்திருக்கும் இடத்திற்கு எதிர்ப்புறமா யுள்ள முலையை ஊட்டக்கொடுக்க வேண்டும். தாய்க்கு இடப்பக்கத்தில் குழந்தை படுத்திருக்கும்போது, அதை மார்புக்குக் குறுக்கே பிடித்துக் கொண்டால் அது வலது பக்கத்திலுள்ள முலையை ஊட்டும்

காலக்கிரமப்படி குழந்தைக்குப் பாலைக் கொடுக்க வேண்டும். முலையை மாற்றி மாற்றிக்கொடுக்க வேண்டும். குழந்தை முலையுண்ட பிறகு முலையில் பால் முழுதும் காலியாய்விட்டதா என்று கவனிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையிலும் பால் காலியாகாமல் தங்கிவிட்டால் அஃது இறுகிப்போய் விடும். போதுமான பால் இல்லாதிருக்கும் தாய்மார்களுக்கு அப்போதைக் கப்போது முலையிலுள்ள பாலைக் காலி செய்து விட்டால் பால் மேற்கொண்டு சுரக்கும்.

குழந்தை பாலைக் குடித்து முலைப் பாலைக் காலி செய்யாத பக்ஷத்தில் 'ப்ரெஸ்டு பம்பு' என்னும் கருவியைக் கொண்டு காலி செய்வதைவிடக் கையால் பீச்சிக் காலி செய்வது நலம். அது செய்யும் விதம் பின் வருமாறு:

கைக்கட்டை விரலின் உள்பாகத்தைக் கொண்டும், மற்ற விரலின் உள் பாகத்தைக் கொண்டும் முலையின் கறுப்பான பாகத் தண்டை எதிர்ப் பக்கங்களில் பிடித்துக் கொண்டு முலைக் காம்பண்டைக் கெட்டியாய் அமுக்கி முன்னாலும் வெளிப்புறமாகவும் இழுத்து அழுத்திப் பீச்சினால் மூன்று அல்லது நான்கு அடிக்கப்பால் பால் தாரையாய் வெளியே வந்து விழுந்துவிடும்.

தி. ஹெல்த் நியூஸ்.

---

# அரிசி விற்க அந்தணன் வேண்டுமாம்.

"கல்வி நாம் கல்லாது பெரிதுங் கெட்டோம்" என்று பிராமணரல்லாதாரும், அழுத்தப்பட்டவர்கள்' என்றே தாழ்த்தப்பட்டவர்கள்' என்றே ஒரு பட்டம் கட்டப்பட்டிருக்கின்ற பிற வகுப்பினரும் சில காலமாகக் கிளர்ச்சி செய்து வருகின்றதைப் பார்த்தனர் பிராம்மணர். தாமும் கெடுதி அடைந்திருப்பதாக நினைத்தனர். தங்களுடைய முன்னேற்றத்திற்குத் தாங்களும் ஒரு கிளர்ச்சி செய்யவேண்டியது இன்றியமையாதென இக்காலக் கோலத்திற் கேற்றவாறு அவர்களுக்குந் தோன்றியது. இனியென்! இரண்டு மூன்று ஆண்டுகளாய்ப் பிராம்மணர் 'மகா நாடு'களும் கூடலாகின்றன. கூடி, 'ஐயயோ, கல்வியைக் கற்றுக் கற்றே நாம் கெட்டோம்' என்று ஏங்குகின்றார். என்ன விபரீதம்! கல்வியில்லாது கெட்டனராம் அவர், இவர் கல்வி யிருப்பதால் கெட்டனராம். பகுத்தறிவென்பதை மக்களனைவரும் எங்குவைத்து மறந்தனரோ அறிகிலேம். சமீபத்தில் நடந்த திருச்சி ஜில்லா பிராம்மணர் மகா நாட்டில் ஸ்ரீமான் N. T. லக்ஷ்மி நாராயண ஐயரவர்கள் பேசியதில் பின் வரும் சில வாக்கியங்களைச் 'சுதேசமித்திரன்' பத்திரிகையிற் காண நாம் பெரியதொரு வியப்பும் வியாகுலமும் அடைகின்றோம்:—

"நாம் நம் ஜாதியாரின் தன்மையாலும் அபிவிருத்தியாலும் வித்யா சம்பந்தமான மூளை வேலையிலேயே ஈடுபடுகின்றமையால், நம் யுவர்களுக்கு ஏற்படக்கூடிய உத்தியோக வகை மிகவும் குறுகிய அளவு உடையதாக ஆகியிருக்கிறது. தற்பொழுது வித்யா சம்பாதனத்திலேயே



பெரிதும் உழைத்து நிற்கும் நம்மவர் தம் தேக சவுக்கியத்தைக் கூடக் கவனியாது அதனில் முயன்று நிற்பது மிகவும் துக்கிப்பதற் குரியது. நம் சமூகம் மறுபடியும் தன் முழு வலிமையை அடைய வேண்டுமெனின் தேகப் பயிற்சியிலும் தேகாப் பியாசத்திலும் அதிக கவனம் நாம் செலுத்தவேண்டும். நமது செல்வ விருத்திக்கும் நமது யுவர்களை வித்தியா சம்பந்தமல்லாததும் நம் சாஸ்திர விருத்தமல்லாததுமான பிற தொழில்களுக்கும் உத்தியோகங்களுக்கும் பழக்கஞ் செய்விக்க வேண்டும். நம் இளைஞர் யாவரையும் திடகாத்திரர்களாகவும், நல்ல வியாபார புத்தி யுடையவர்களாகவும், எல்லாவற்றையும் விட முக்கியமாக, இந்தப் புராதன பரத கண்டத்திற்கு யோக்யமான புத்ரராகவும் பயிற்சி செய்விப்பதில் நம் முழு கவனத்தைச் செலுத்த வேண்டும்."

நமது ஐயரவர்கள் நனிவருந்தி இங்குச் செப்ப முயல்கின்ற விஷயத்தின் முடிவு என்ன? வேதமோதிய வேதியர்க்கு மழை பெய்ததென்பதை மறந்து அரிசி விற்றிடாதால் அந்தணர்க்கு ஓர் மழை பெய்யவில்லை என்று கொள்கின்றார். பிராமணர்கள் இக்காலம் "வித்யா சம்பந்தமான மூளை வேலையிலேயே ஈடுபடுகின்றார்க" ளென்பது சிறிதும் நிசமன்று. அவர்களும் மற்றவர்களைப் போலவே வாய் சம்பந்தமான வேலைகளிலும் கை சம்பந்தமான வேலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர். பொருள் செய்கின்றதுடன் சம்பந்தப்பட்ட வேலை யெதுவும், வித்யா சம்பந்தமான வேலையு மன்று, மூளை வேலையு மன்று. மூளையிருப்பவர் அந்த வேலை செய்யமாட்டார். மூளை யிருப்பவர் கவிகளைப்போல், மற்றுள நல்லோரைப் போல், தமக்கென மனோ ராஜ்யம் ஏற்படுத்திக்கொண்டு இரவீந்திர நாதர், அரவிந்தர் அனைய மேன் மக்கள் இன்னாளுங் கூறுகின்ற ஆன்ம வாழ்வினில் வைகுவார். பார்ப்பனர் பண்டை நாளில் தாம் பெரு வாழ்வு வாழ்ந்து உயர்ந்த நிலையில் இருந்தனர் என்று சொல்லிக் கொள்கின்றனரே. இருந்தனராயின், எதனால் இருந்தனர்? உடலைக் கொழுக்க வைத்தா? 'வித்யாசம்பந்த மல்லாத' தொழிலாகத் தேடி தேடித் தம்மைப் பழக்கிக் கொண்டதனாலா? ஒவ்வொரு அந்தணனும் நல்ல வியாபார புத்தியால் தன் முதுகில் ஒரு அரிசி மூட்டையைச் சுமந்து சென்று தெருத்தெருவாய் விற்றதாலா! இதனோடு, ஐயரவர்கள் "சாஸ்திரங்களின் தத்துவங்கள் யாவும் ஜீவகளையுடன் இருந்து நம் வாழ்க்கையையும் ஒழுக்க வழக்கங்களையும் ஏற்றவாறு விதித்து நின்ற (முன்) காலத்திலிருந்து நாம் மிகவும் பரிதாபகரமான நிலைக்கு இழிந்து விட்டோம்" என்று இயம்புகின்ற பின் வாக்கியத்தையும் சேர்த்துப் பார்ப்போமானால், பார்ப்பனர்க்கு முன் காலத்தில் ஜீவகளை யுடைய சாஸ்திரங்களின் தத்துவம் விதித்த ஒழுக்க வழக்கங்கள், பணம் சம்பாதிக்கும் பொருட்டு ஏற்பட்டிருந்த தேகப் பயிற்சியும் வியாபாரப் பழக்கமுமே போல் தோன்றுகின்றன. அந்நாட்களில் அந்தணன் வேதம் ஓதினான், முத்தீ வளர்த்தான், ஓதல் ஓதுவித்தலாகிய அறுதொழில் புரிந்தான், எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகினான். உத்தியோக ஊதியத்திற்கும் வர்த்தக இலாபத்திற்கும் வயப்படாது தனி பரிசாட்சியில் தாழ்ந்தவனுள்ளம். சாஸ்திரங்களும் இவைகளையே கூறுகின்றன. முன்னை நாள் அந்தணன் மேன்மையுற்றிருந்தது உண்மையாயின், இவைகளாற்றான் அவன் மேன்மையுற்றிருந்தான் என்பதும் உண்மை. இவைகளை விட்ட நாள் முதல், உத்தியோகமும் வியாபாரமும் பற்றிய நாள் முதல், அவன் வீழ்ச்சி ஆரம்பித்தது. சாஸ்திரங்களையும் வைதிக மார்க்கங்களையும் நமது ஐயரும் அவரனைய பார்ப்பனரின் 'புனருத்தாரண' புத்தியுடையவர்களும் நம்புகின்றவர்களாக விருந்தால், வர்த்தகப் பயிற்சி போன்ற 'வித்யா சம்பந்த' மற்ற தொழில்களில் வேதியர்க்கு வழிகாட்ட மாட்டார். ஆனால், இவரோ சாஸ்திரங்களில் முழு நம்பிக்கை யுடையவராகக் காண்கின்றார் ஏனெனில், கூறுவார்:—

"நமக்கு விசேஷ ஆபத்து ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. நம் அரசாங்கத்திலே தோன்றியுள்ள சட்டசபையார் நம் வை

திக ஆசாரங்களிலே தலையிடவும் ஆரம்பித்து விட்டனர். இதனை நாம் முழு பலத்துடன் எதிர்க்கவேண்டும். நம் சட்ட சபையிலே பதவி பெற்றுள்ள அங்கத்தினர், சர்வ தேச சமூக மத்தியிலே நம் பரத கண்டத்தை மகா சம்பத்துடன் விளங்கும் ஒரு தேசமாகத் தோற்றுவிக்கும் பொருட்டுத் தம் லௌகீக யுக்தி புத்திகளைச் செலவிடாது, வைதீக சாஸ்திர சம்பந்தமான விஷயங்களிலே தம் அதிகாரத்தை உபயோகிக்க விரும்புவது தேசத்திற்கே ஒரு அவமானத்திற்கிடமாகும். பேச்சு, எண்ணம், வியவகாரம் யாவற்றிலும் சுயேச்சையை விரும்பும் முன்னேற்ற நோக்குடைய ஜனத் தலைவர் என்று கூறிக் கொள்ளும் புத்திமான்கள் கூட, ஜனங்கள் தம்முடைய ஆசாரங்களைத் தம் கொள்கைகளின் படி அனுஷ்டிக்க விடாமல் தடை விலங்குகள் ஏற்படுத்துவது நமக்கு ஆச்சரியமாகவும் துக்ககரமாகவும் இருக்கின்றது. ஜனங்களிலே ஒரு பகுதியாரின் சமூக, வைதீக சுயேச்சையைத் தலை செய்வதாயினும் இத்தகைச் சட்டங்கள் வெறுக்கத் தக்கனவே யாம்''

இவ் வாசகத்தில் எந்தச் சட்டங்கள் குறிக்கப்பட்டுள்ளன வென்பது வெளிப்படை. இவ் வகைகளில் மாத்திரம் வைதிக ஆசாரங்களைப் போற்றிச் சிதைவுறாமல் காக்கவேண்டுமென்ற ஆர்வமேன்? காவிய நாடக அலங்காரங்களும், தர்க்க வியாகரண மீமாம்ஸங்களும் நான்கு வேதமும், நாற்றெட்டு உபநிடதங்களும் பிராமணன் பயிலவேண்டு மென்றும் பயிற்றுவிக்க வேண்டுமென்றும் சாஸ்திரங்கள் சொன்னது ஐயமற்றவோர் உண்மை. கூசாது அதனைப் போக்கிலே போகவிட்டுத்தேகப் பயிற்சியிலும் தொழில் முறைகளிலும் வர்த்தக இலாபத்திலும் பிராம்மணன் இப்பொழுது புத்தியைச் செலுத்தினால்தான் முன்னேற்றம் அடைவானும். மற்றும் விவாக வயதும் விதவா விவாகமும் சாஸ்திரங்களுக்குள்ளேயே மாறுபட நிற்கின்ற விஷயங்களாயிருக்க அவைகளைச் சட்டங்களால் மாற்றினால் ஆசார விரோதமாகிப் பிராம்மண குலத்திற்கு 'விசேஷ ஆபத்து' விளைந்துவிடுமாம்.

பிராம்மண சமூகம் தன்னிலை யிழுந்த தெனில் அன்னதற்கு வர்த்தகமும் கைத்தொழிலும் உத்தியோகத்திற்கேற்ற மூளையின் கூர்மையும் கற்கப் புகுந்ததே யாகும். இவ்வாறு அழிந்திருக்கின்ற இப்பார்ப்பனரின் நிலையைக் கண்டு பார்ப்பனரல்லாதார் சிலர் அதுவேதான் தாம் அடைதற்குரிய உயர்ந்தநிலை என்பார் போல் பாவித்து எவ்வெவை அவர்களை இவ் விழிவிற்குக் கொண்டுவந்தனவோ அவைகளைக் கற்றே தாம் முன்னேற்றம் அடையவேண்டுமென்று விவகரிக்கின்றனர்.

மகாநாடு என்பது ஒரு பெரும் ஒட்டுவாரொட்டி. தத்தம் சமூக 'முன்னேற்றம் முன்னேற்றம்' என்றவொன்றை அடைய முயலாதிருப்பாராயின் சிற்சிலர் பின்னேனும் இழியாமலிருப்பர். ஒரு ஜாதியாரின் வளர்ச்சி அதனைச் சேர்ந்த ஒவ்வொருவனது சுய வளர்ச்சியைப் பொருந்தியது. நாம் முன் இத்தலையங்கங்களின் பல விடங்களில் காட்டிய இலக்கணத்திற் கிணங்கிய மெய்க் கல்வியில் அவரவர் தன் வரையில் தேர்ந்துகொள்ள வேண்டுமென்றதொன்றே நோக்கமாக அமையாது விட்டால் எல்லாரும் வரவர இழிந்து நல்லன யாவும் நில்லாது அழிந்தே போம். கவிகளைக் கொள்வோம் இன்றே நம் கையில்—மற்றவெலாம் நாளை!

—கலாநிலயம்




வாழைப் பழங்கள் சென்ற ஐம்பது வருடகாலமாகவே மேனாட்டாரால் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

* * *

உலகிலுள்ள 31 நகரங்களில் 100,000 மேற்பட்ட டெலி போன்க ளிருக்கின்றன. சென்னை நகரில் சுமார் 3900க்கு அதிகமாயில்லை.

* * *

ஸ்திரீகள் முகத்தில் பூச உபயோகிக்கும் பௌடர் நல்ல கடினமான "சக்கி முக்கிக்" கற்களை நன்றாய் இயந்திரங்களில் அரைத்துத் தையார் செய்யப்படுகிறதாம்.

* *

நாலு சர்க்கரைக் கட்டிகளில் ஒரு சாதாரண அளவு உருளைக் கிழங்கிலுள்ள சத்து இருக்கிறது. ஒரு பவுண்டு சர்க்கரை உபயோகத்தினால் ½ பவுண்டு வெண்ணெயினாலுண்டாகக்கூடிய தீபனம் உண்டாகும்.

* *

முதன் முதலாகச் சாமான்களைக் "கொடுவை" வைத்துப் பணம் வாங்கும் கடை 1198-ஆம் வருடத்தில் பவேரியாவில் ஏற்பட்டது.

* *

பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள ஸண்டே தீவுமலையே உண்மையில் உலகத்தில் மிகப் பெரிய மலையாகும். ஐந்து மைல் ஆழத்திலிருந்து கிளம்பும் அந்த மலை ஜலத்துக்கு மேல் 2000 அடி உயரமுள்ளதா யிருக்கிறது. எவரெஸ்ட் மலை 29,002 அடி உயரமுள்ளதே யாகும்.

* *

சீன அகாதி ஒன்று 1686-ல் அச்சடிக்க ஆரம்பிக்கப்பட்டது. 1726-ல் அச்சிட்டு முடிக்கப்பட்டதாம். 5000 பாகங்க ளடங்கியதும், இரண்டு டன் எடையுள்ளதுமான அதன் பெயர் "சின் டிங்க்கு சின்டு ஷயசீ செங்க்" என்பதாம்.

* *

நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட் டிருக்கும் கிராமபோன் ஒன்று 36 பிளேட்டு வரை தானாகவே பொருத்திக்கொண்டு வாசிக்கிறதாம். ஊசிபொருத்துவது, பிளேட்டை ஜாக்கிரதையாக பிரஷ்ஷினால் துடைப்பது, பாடி முடித்த பிளேட்டை அதன் இடத்தில் வைத்துவிடுவது, ஒரு பக்கம் பாடியதும் அதைத் திருப்பி வைப்பது முதலிய வேலைகளை அது தானே செய்கிறதாம்.

* *

தென் அமெரிக்காவைச் சேர்ந்த வெனிஜுலாவில் யாகமிக் என்ற ஒரு வகைக் காக்கை ஆட்டுமந்தைகளை மேய்க்க உபயோகப்படுத்தப்படுகின்றது. அப்பறவை எங்கு—சென்றாலும் எஜமான் வீட்டுக்கு ஆட்டு மந்தைகளைத் துரத்தியடித்துக்கொண்டு வந்து சேர்க்குமாம்.

* *

பிரட்டனில் மொத்தம் 4,000 ஸினிமாக்களிருக்கின்றன. தினசரி 30 லக்ஷம் ஜனங்கள் அவற்றிற்குச் செல்கின்றனர். லண்டன் நகரில் மட்டும் 400 ஸினிமாக்கள் இருக்கின்றன. பெரிய ஸினிமாக்களில் தினசரி 800 பவுன்கள் வசூலாகின்றன. சில காட்சிச் சாலைகளிலுள்ள வாத்தியங்கள் சுமார் 20,000 பவுன்களுக்கு மேற் பட்டனவாம்.

* *

பிரிட்டனின் தபால் இலாகாவில் 20,000 கடிகாரங்கள் ஏக காலத்தில் ஒரே மணியைக் குறிக்கின்றனவாம். அரசரின் அரண்மனையில் 1000 கடிகாரங்களும், பார்லிமெண்ட் சபைகளில் 500 கடிகாரங்களு மிருக்கின்றனவாம். எட்வேர்டு அரசர் கால முதல் ஸாண்ட்ரிங்ஹாம் அரண்மனையிலுள்ள கடிகாரங்களெல்லாம் அரைமணி வேகமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

## எங்கள் சித்திரப் பத்தி

### பாரத மாதா முறைப்பாடு.




பாரதமாதா :—ஸைமன் கோஷ்டியாரே உங்களுடைய இந்த நியாயம் அவசியமில்லையே !

ஸைமன் கோஷ்டியார் :—பரவாயில்லை. நியாயமோ அல்லது அநியாயமோ. நாங்கள் கட்டாயம் இந்தியாவுக்குச் செய்துவிட்டுத் தான் போவோம்.


1,00,000 குடும்பங்களை சீர்படுத்திய நூல் எது?

## இல்வாழ்க்கையின்

### இரகசியங்கள்.

என்ற நூல்தான். ஆனால் இதைப் போலவே சிறிது பெயர் மாற்றத்துடன் அநேக போலிப் புஸ்தகங்கள் கிளம்பி யிருக்கின்றனவே? உண்மையான புஸ்தகம் எது என்று எப்படித் தெரிந்து வாங்குவது? நேயர்களே! புஸ்தகத்தில் "ஏரோப்ளேன்" (ஆகாயக் கப்பல்) டிரேட் மார்க்கு போட்டிருக்கும். இதுதான் உண்மையான ஆதிநூல். இந்த டிரேட் மார்க் உள்ள புஸ்தகம் எல்லா ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். விலை ரூ. 2-0-0

ஒரே காலத்தில் இரண்டு புஸ்தகங்கள் தருவித்தால் தபால் செலவில்லை.

வாசன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.

## "ஆனந்தவிகடன்."

இதற்கு இப்பொழுது நான்காம் ஆண்டு நடக்கிறது.

64 பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளிவரும் உயர்ந்த பத்திரிகை. இதில் பலமேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனின் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768 பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா?

தபால்கூலி யுள்பட இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு வருஷ சந்தா ரூ. 1-0-0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1-4-0

மாதிரிகாபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி மதராஸ்.
தந்தி விலாசம் "விகடன்" டெலிபோன் 3311

ரூ. 2-14-0 ரூ. 2-14-0

## நூதன கைத் தையல் மெஷின்.



சிலகாலம் வரையில் மட்டும் மேற்கண்ட எமது அசல் விலைக்குக் கொடுக்கிறோம்.

இம் மிஷின் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள் மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாகெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

கானடியன் வாட்சு பீபிள்,
லோகல் எஜண்ட்ஸ்
ஜார்ஜ் டவுன், மதராஸ்.


1,000 இரகசிய முறைகள் கொண்ட அருமையான நூல் வெளிவந்துவிட்டது!

### கைத் தொழில் முறைகள்.

இதில் மாதம் 100 ரூ. முதல் 500 ரூ. வரை சம்பாதிக்கத்தக்க அநேக தொழில் முறைகள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சோப்புகள், பெப்பர்மிண்டுகள், தீக் குச்சிகள், பலவித மருந்துகள், மெழுகு வர்த்தி வர்ண தினுசுகள், வார்னிஷ், கூந்தல் தைலங்கள் இப்படி 1000 முறைகள் உண்டு. விலை ரூ. 1-8-0

வாசன் புஸ்தக சாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

எமது விசேஷ குறைந்தவிலை விற்பனை.
22 காரட் ரோல்டு கோல்டு கைக் கடியாரங்கள்.



இதில் எம் மாதிரி வேண்டுமானாலும் அனுப்பப்படும். கடியாரம் உறுதியாயும் நெடுநாள் உழைக்கக்கூடிய தாயுமிருக்கும். ஒவ்வொன்றும் ரோல்டு கோல்டு அமரிக்கன் கை சங்கலியுடன் அனுப்பப்படும். சிலகாலம் வரையில் 1-க்கு விலை ரூ. 4-15-0 ஜினேன் வாட்ச் கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

ஓர் செந்தமிழ் வாரப் பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாத சஞ்சிகையின் மகிமையும் உலகம் அறியும். அவ்வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்த போதினி" வாரப் பத்திரிகையும் வெளிவருகிறது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றி தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

## உங்களுக்கு என்ன வேண்டும்?

மத உண்மைகளா? தத்துவ ஆராய்ச்சிகளா? கைத்தொழில் விளக்கங்களா? வியாபார ரகசியங்களா? விஞ்ஞானமா? (Science) கிராமச் சீர்திருத்தங்களா? சமூக இயல்புகளா? வைத்திய விசேஷங்களா? தேசீய தத்துவங்களா? சிறுகதைப் பகுதிகளா? இன்னிசைப் பாட்டுகளா? விநோதங்களா?

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3. 6 மாதசந்தா ரூ. 1-12-0 பினாங்கு, சிங்கப்பூர், முதலிய வெளி நாடுகட்கு வருட சந்தா ரூ. 4.

## ஆனந்தபோதினி (மாதப் பதிப்பு.)

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது: எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங் கொண்டது; மூவப்பு ஆப்டோன் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிக்க குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனம். வருட சந்தா தபாற்கூலி யுள்பட உள்நாடுக்கு ரூ. 1. வெளிநாடுக்கு ரூ. 1-4-0

## சுக்கில வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாத்திர லெளகிகமான)

சர்வ முகூர்த்த "ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாஸ்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாஸ்திரக் கணிதத்திலும் திறமைவாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன், பி.ஏ. (C. G. Rajan, B.A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும், ஜோதிடர்களும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்கள் நாழிகைபோடு, மணி நிமிஷமும், நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசாபுக்தி, கிரக சாரங்கள், தகவிதப், பொருத்தங்கள், சகுனங்கள் நவநாயகர்கள் பலன் முதலியனவும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. இவ் வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு உபயோகமாயுள்ள நக்ஷத்திர ஓரை, சந்திர உதயம், கிரக உச்சம், நக்ஷத்திர கிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய அதிக உபயோகமாகும்.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட் டிருகின்றன. இவ்வருடப் பஞ்சாங்கம் 92 பக்கங்கள் கொண்டது.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2; 6-பஞ்சாங்கங்கள் அணா 8; 12-பஞ்சாங்கங்கள் அணா 14.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1-10-0 முந்தி அனுப்பி தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்புவோம். ரயில் சார்ஜ் உங்களைச் சேர்ந்தது.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

## பரிபாஷை மாலை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும் எழுதவும் ஆரம்பித்து விடலாம். இந்த பாஷையில் வியாபார ரகசியங்களை குறித்துக் கொண்டால் இப்பாஷை தெரிந்தவர்கள் தவிர வேறு எவரும் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக் கேட்டு பிறரிடம் சொல்லி கோள் மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ் பரிபாஷை. சொல்ப காபிகளே கையிருப்பிலிருக்கிறது. முந்துங்கள்.

விலை அணா. 8.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீனமாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளி வந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்கு புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்யாசமின்றி சகல மதஸ்தர் களையும் களிக்கச் செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்றமடையக்கூடிய வழியையும் போதிப்பதை பிரதி மாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபாரிசு இல்லாமல் தாங்களே சந்தாதாராவீர்களென்பது நிச்சயம் பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளி வரும். வருஷ சந்தா ரூ 1. வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி காபி இனம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது! 10-ம் பதிப்பு வெளி வந்து விட்டது!

## ஆங்கில ஆசான்

(எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.
போலிப் புத்தகங்களால் ஏமாற வேண்டாம்)

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசபாடங்களாக வகுத்து முன் பதிப்புகளை விட அதிக பக்கங்கள் சேர்த்து பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களைவிட வேறு எந்த புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். நமது முன் பதிப்பு புத்தகங்களை வைத்திருப்பவர்கள் கூட பத்தாம் பதிப்பை பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 300 ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் அச்சிட்டிருக்கிறது. 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு செய்தது.



விலை ரூபா 2 0 0

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

# ரெடிமேட் ஷர்ட்டுகள்.



உசத்தியான, டுயில், டோரியா காக்கி, பாப்ளின் முதலிய துணிகளில் தைத்தவை. உறுதியான தையல். மனோகரமான கட்டிங் கழுத்தளவுடன் ஆர்டர்செய்யுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| டுயில் ஷர்ட்டு | ரூ. | 2 | 0 | 0 |
| காக்கி | ,, | 2 | 4 | 0 |
| அமெரிக்கன் டோரியா | ,, | 2 | 4 | 0 |
| பாப்ளின் | ,, | 3 | 8 | 0 |
| ஸில்க் ஷர்ட்டு | ,, | 6 | 8 | 0 |

கே. எஸ். முத்தையா கம்பெனி : தபால் பெட்டி 99, மதராஸ்.



## டார்லிங் பெயின் பாம்.




அநேக வைத்தியர்களால் பரிசோதித்து ஆயிரக் கணக்காய் செலவழியும் சிறந்த நோவு நிவாரணி.

எல்லா விதமான வலிகளையும்—3 நிமிஷத்திலும் கபம் முதலானவைகளையும் 5 நிமிஷத்திலும் 3 வேளை உபயோகத்திலேயே தேள், நட்டுவாக்கலி, பூரான் முதலிய விஷ ஜந்துக்களின் பாதைகளையும் நிவர்த்தித்து, ஆனந்தத்தை அளிக்கும்.

வலியால் கஷ்டப்படுவோருக்கு வலி நீங்கி, தொல்லை, நீங்கி, கஷ்டம் நீங்கி உணர்ச்சி மிகுந்து உள்ளம் குளிர்ந்து ஆனந்த மிக ஒரு சிறந்த வரம் போன்றது.

புட்டி 1-க்கு அணா எட்டு.

ஏஜண்டுகள் தேவை:— வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

The "Darling Pain Balm" Co., Mount Road, Madras.



## கணித சோதிடம்

பரிகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிட நூற்கள் பலவுள்ளதால், நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப் பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.




## பிரபல சோதிடம்

எதிர்கால உண்மையை எளிதில் அறிந்து கொள்ளலாம். எங்கள் சோதிட கணித திறமை விற்பனர்களும, பிரபுக்களும் வியந்து கொண்டாடுகிறார்கள். உண்மை அறிய ஒருமுறை பரீட்சியுங்கள். ஜாதகத்திற்கு மாதவாரி பலன் 1 வருஷத்துக்கு எழுதி அனுப்ப ரூ. 2—0—0. வார பலன் வருஷம் 1-க்கு ரூ. 4—0—0 விவாக விஷயம் ரூ. 1—0—0. புருஷனுக்குப் பெண் இன்ன இடம் என்று எளிதில் அறிந்துகொள்ள நாங்கள் பொதுப் பலனை எழுதாமல் பூர்வீக சாஸ்திர விதிப்படி எதிர்கால உண்மைகளை விபரமாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புவோம். ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரமாவது தேவை.

வி, தியாகராய பிள்ளை,
பிரபல ஜோதிட நிலயம்,
வடவண்டைபுல்வார், புதுச்சேரி,
பிரஞ்சு இந்தியா.



## 80-வருஷம் உலகபிரசித்தி பெற்ற அசல்




## ஷண்முகம் பட்டணம்பொடி

காரம், மணம் நிறம், குணம், வாடை உள்ளது. அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது

ஏஜண்டுகள் தேவை.
முதல்தரம் 1 வீசை ரூ 4—4—0
2-ம் தரம் 1 வீசை ரூ. 3—4—0.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி, லிமிடெட்,
Post Box No. 160.
மதராஸ்

# மஹாலக்ஷ்மி கவசம்

முற்றும் கற்றுணர்ந்த மஹான் ஒருவரால் வேதாகம சாஸ்திரமுறை பிறழாது செய்யப்பட்டது. உண்மையான பலனை அளிக்கத் தக்கது—வாழ்வில் கஷ்டம் நீங்கி, கவலை நீங்கி, துன்பம் நீங்கி, துயரம் நீங்கி சௌக்ய சம்பன்னராய் வஜ்ரதேகத்துடனும் வசீகர முகத்துடனும் வஜ்ருத தேஜஸுடனும் வாழ இதைவிட அரிய சாதனம் வேறில்லை என்றே சொல்லவேண்டும். ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர் மறுமுறை ஒரு டஜனுக்கு நண்பர்களுக்கு சிபார்சு செய்கிறார் என்றால் இதன் உண்மையைப்பற்றி இன்னும் எழுத வேண்டுமா?

பல்லாயிரக்கணக்கான கவசங்கள் இதுவரை விற்கப்பட்டு விட்டன. நீங்களும் ஒன்று இன்றே வாங்குங்கள்.

தங்கக் கவசம் ரூ. 7—0—0.

வெள்ளிக் கவசம் ரூ. 2—0—0.

**மஹாலக்ஷ்மி கம்பெனி,**

தபால் பெட்டி 280, :: மதராஸ்.

# வீராம்ருத லேகியம்

அன்பர்களே, உடல் நலம் மிகுந்து, ரத்த ஓட்டம் அதிகரித்து உற்சாகமும், உள்ளக் கிளர்ச்சியும் மேலிட்டு, ஊக்க மிகுந்து, உள்ளம் குளிர்ந்து எடுத்த கருமம் சலியாதுழைத்து முடிக்கவும் ஆண்மையும் அழகும் அளவின்றி பெருகி இவனே பூலோக மதன் என யாரும் உரைக்கும்படி உடலை திண்ணமாய் செய்யும்.

மெடல்களும், அத்தாக்ஷி பத்திரங்கள் பலவும் பெற்றுள்ளோம். உடனே எழுதுங்கள்.

ஒரு டின் விலை ரூபாய் இர[illegible]

# வெள்ளை.

நோயில் பெருத்த தொல்லை விளைத்து, பலவிதமான [illegible] வெள்ளை, உதிரவெள்ளை, தந்தி வெள்ளை, நீர் சுருக்கு, மேகம், மூலம், முதலிய வியாதிகளை ஐந்தே பொழுதில் ஆச்சரியத்தக்க குணத்தைக்காட்டி அழகும் திரேகக் கட்டும் சிறந்து விளங்கச் செயயும்.

20 மாத்திரை அடங்கிய டப்பி 1க்கு ரூபாய் ஒன்றுதான்.

**கெமிகோ எர்பல் பர்மஸி,**

35, தங்கசாலை வீதி,

**P. T.** மதராஸ்.

**Chemico Herbal Pharmacy,**

**35, Mint St., P. T. Madras.**

# A. S.



ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4. ஷை சேர் 1-க்கு ரூ. 3

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3.


ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

**எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாய்பு,**

106, சவுக்கார் பேட்டை. தபால் பெட்டி நெ. 1201. மதராஸ்.

# இரும்பு - - - - பெட்டிகள்




விலையில் குறைவும், உழைப்பில் சிறப்புமுள்ள இரும்புப் பெட்டிகளுக்கு, பிற இடங்களுக்குப் போகுமுன் எங்களை வந்து பாருங்கள் நீங்கள் கொடுக்கும் விலைக்கு அதிகம் மதிப்பிடக் கூடிய பெட்டிகள், எங்களிடம் கிடைக்கும்.

**V. Doraisamy Mudaliar**

**58, Broadway, MADRAS.**

2-4284

# அமெரிக்கன் சில்க் - - - - - - அங்கவஸ்திரம்.

தூய்ய வெள்ளை, உடல் திக்கான பட்டு, தினசரி துவைத்து உபயோகிக்கலாம், வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இரு பக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 6 மு நீளம். 40" அகலம். விலையின் இறக்கத்தை கவனியுங்கள்.

விலை ரூ. 6—0—0 தான்.

**கிடைக்கவில்லையே !** என்று வருந்தவேண்டாம் ஏற்கனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்கு மேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள் டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்து வருவதால் முந்திக் கொள்ளுங்கள்.

# ஷாமுனியோஸா ஸில்க் - - - - - அங்கவஸ்திரம்.

அழகான இமிடேஷன் சில்க். கலருக்கு உத்திரவாதம். வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டு குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளு முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா **2—0—0**

விலை ரூபாய் இரண்டு தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6 மாதத்திற்குள் 25,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப ஒரு டஜனுக்கு ஆர்டர் செய்கிறார்கள்.

**கே. எஸ். முத்தையா கம்பெனி,**

தபால்பெட்டி 99, சென்னை.

கியாதி பெற்ற

# "ஜெயப்பூர் காட்டன் சேலை."



இந்த புடவையின் அழகும் நைஸும் நாம் சொல்லத் தேவையில்லை நைஸான வெள்ளை உடலில் அழகான கலர் கரை, உடல் புட்டா போட்டது. 20 விதமான கரைகள்—புட்டா சிறு புட்டாமுதல், பெரிய ரோஜா பூ, மோட்டார், கிராமபோன் முதலிய புட்டாக்கள் போட்டது. இந்த படத்தில் ஒரு புடவை தான் மாதிரி தெரிகிறது. இன்னும் எத்தனையோ விதமுண்டு.

☞ உடல் கலரில் வேண்டுமானாலும் அனுப்பலாம் ஸ்கை புளூ, பிங், கத்திரிப்பூ பதாமி கலர்களில் கிடைக்கும்.

FAMOUS
JAIPUR COTTON SARI.

இந்த மாதிரி புடவைகள், இரண்டு லக்ஷம் இரண்டு மாதத்தில் வங்காள நாட்டில் விற்பனையாகி இருக்கின்றன.

பிடித்தமில்லாவிட்டால் எங்கள் செலவில் திருப்பி யனுப்பலாம்.

## நாகரீகமான ஆடை! நேர்த்தியான உடை!!

நாலு³க்கான புடவை.

| | | |
|---|---|---|
| 6 மு x 27 | இஞ்சி சிறு பெண்களுக்கு புடவை 1-க்கு ரூ. | 1-8. |
| 7 மு x 30 | ,, ,, ,, | 1-12. |
| 8 மு x 35 | ,, ,, ,, | 2. |
| 9 மு x 40 | ,, ,, ,, | 2-2. |
| 10 மு x 44 | ,, ,, | 2-12. |
| 12 மு x 44 | புடவை ,, | 3-4. |
| 16 மு x 44 | ,, ,, | 4-4. |
| 18 மு x 44 | ,, ,, | 4-12. |

**கே. எஸ். முத்தையா கம்பெனி, சில்க் அவுஸ் காசி.**

PRINTED AT MUTHIAH PRESS, MADRAS AND PUBLISHED BY K. S. SUNDARAR